

இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 227 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – பங்குனி 15 – வியாழக்கிழமை 28 மார்ச் 2024 – வெளியூர் 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 227 : Thiruvalluvar Year - 2055 - Panguni 15 - Thursday 28 March 2024 - Dak 12 Pages ₹ 5.00




கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று முன்தினம் (26.3.2024) தூத்துக்குடி மாவட்டம், எட்டயபுரத்தில் நடைபெற்ற 'இந்தியா' கூட்டணியின் மக்களவைத் தேர்தல் பிரச்சாரப் பொதுக் கூட்டத்தில் தூத்துக்குடி தொகுதி வேட்பாளர் கனிமொழி கருணாநிதி மற்றும் இராமநாதபுரம் தொகுதி வேட்பாளர் நவாஸ்கனி ஆகியோருக்கு வாக்களிக்குமாறு கேட்டுக் கொண்டு உரையாற்றினார். மேடையில், அமைச்சர் பெருமக்கள் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன், தங்கம் தென்னரசு, எஸ்.ரகுபதி, திருமதி.கீதாஜீவன், ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன், அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், இராமநாதபுரம் மாவட்டக் கழகச் செயலாளரும், சட்டமன்ற உறுப்பினருமான காதர்பாட்சா முத்துராமலிங்கம், சட்டமன்ற உறுப்பினர்கள் மார்க்கண்டேயன், முருகேசன், கருமாணிக்கம், அமிர்தராஜ், சண்முகய்யா, சமத்துவ மக்கள் கழகத் தலைவர் எர்ணாவூர் நாராயணன், முக்குலத்தோர் புலிப்படை கட்சித் தலைவர் கருணாஸ், மக்கள் விடுதலைக் கட்சித் தலைவர் முருகவேல் ராஜன், அகில இந்திய பார்வர்டு பிளாக் கட்சித் தலைவர் சுரேஷ் மற்றும் இந்தியா கூட்டணி நிர்வாகிகள் உள்ளனர்.

## முதலமைச்சரான என்னிடமே பொய் சொன்னவர் - பொய்களை மட்டுமே பரிசாகத் தரும் பிரதமர்

# மோடிக்கு ஏமாற்றத்தைப் பரிசாகத் தர இந்தியா தயாராகி விட்டது!

## தூத்துக்குடி மாவட்டம் - எட்டயபுரம் பிரச்சாரக் கூட்டத்தில்

## கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அறைகூவல்!

தூத்துக்குடி, மார்ச் 28 –

**தூத்துக்குடி மாவட்டம், எட்டயபுரத்தில், நேற்று முன்தினம் மாலை நடைபெற்ற மாபெரும் தேர்தல் பிரச்சாரப் பொதுக்கூட்டத்தில் உரையாற்றிய கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், "முதலமைச்சரான என்னிடமே பொய் சொன்னவர் – மக்களுக்குப் பொய்களை மட்டுமே பரிசாகத் தருபவர், பிரதமர் மோடி" என்றும், "அத்தகைய பிரதமர் மோடிக்கு ஏமாற்றத்தைப் பரிசாகத்தர இந்தியா தயாராகி விட்டது" என்றும் குறிப்பிட்டார்.**

கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தூத்துக்குடி மாவட்டம் எட்டயபுரத்தில் நேற்று முன்தினம் (26.3.2024) மாலை நடைபெற்ற மாபெரும் தேர்தல் பரப்புரைப் பொதுக் கூட்டத்தில், தூத்துக்குடி மக்களவைத் தொகுதி கழக வெற்றி வேட்பாளர் கனிமொழி கருணாநிதி மற்றும் இராமநாதபுரம் மக்களவைத் தொகுதி இந்திய யூனியன் முஸ்லிம் லீக் வெற்றி வேட்பாளர் நவாஸ் கனி ஆகியோரை ஆதரித்து வாக்குக் கேட்டு எழுச்சியுரை ஆற்றினார்.

முதல்வர் அவர்களின் உரை வருமாறு : –

முத்துநகரில் இருந்தும், சேதுச் சீமையில் இருந்தும் கடல் அலைகளைப்போல், எழுச்சியோடு கூடியிருக்கும் உங்களைப் பார்க்கும்போது, மகிழ்ச்சியாக மட்டுமல்ல, நாற்பதுக்கு நாற்பதும் நாம்தான் என்ற உறுதியும் வந்து விட்டது!

### சர்வாதிகாரியிடம் இருந்து - ஜனநாயகத்தை மீட்கும் போராட்டம்!

இந்திய விடுதலைப் போராட்டத்திற்கு தங்களின் உயிரையும், உடலையும் அர்ப்பணித்த தளகர்த்தர்கள் பலர் பிறந்த தியாக மண்ணிற்கு நான் வந்திருக்கிறேன். ஒருவகையில் இப்போது நடப்பதும் விடுதலைப் போராட்டம்தான். இது சர்வாதிகாரியிடம் இருந்து ஜனநாயகத்தை



மீட்பதற்கான விடுதலைப் போராட்டம்! தேர்தல் மூலம் ஜனநாயகத்தைக் காப்பாற்றும் அறப் போராட்டம்! இந்த அறப்போருக்கு உங்களை அழைக்கத்தான் நான் வந்திருக்கிறேன்! தேர்தல் ஜனநாயகப் போர்க்களத்திற்கு அறைகூவல் விடுக்கும் இந்தக் கூட்டத்தில் பங்கேற்றுள்ள அனைவருக்கும் வணக்கம்!

### சிறுபான்மை இயக்கத்துக்கு என்றும் துணை தி.மு.க.!

இராமநாதபுரம் நாடாளுமன்றத் தொகுதியில், இந்திய யூனியன் முஸ்லீம் லீக் வேட்பாளராக நவாஸ் கனி போட்டியிடுகிறார். எப்போதும், தி.மு.க. கூட்டணியில் முஸ்லிம் லீக்கிற்குத்தான் முதலில் தொகுதி பங்கீடு செய்யப்படும்! பேராசிரியர் காதர் மொய்தீன் அவர்கள் எப்போதும் நமக்கு உறுதுணையாக இருப்பவர். ஏன் என்றால், தி.மு.க. எப்போதும் சிறுபான்மை இயக்கத்துக்குத் துணையாக இருக்கும் இயக்கம்!

அனைத்துத் தரப்பினரின் ஆதரவையும் பெற்று, ஏணிச் சின்னத்தில் போட்டியிடும், நவாஸ் கனி அவர்களைக் கடந்த தேர்தலைவிட, அதிக வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற வையுங்கள்!

கடந்த 2019 தேர்தலின்போது, நான் தூத்துக்குடியில் பேசியபோது, "என் தங்கை கனிமொழிக்கு வாக்களியுங்கள் அவர் நீங்கள் கூப்பிட்ட குரலுக்கு ஓடோடி வருவார் – என் கடன் பணி செய்து கிடப்பதே என்று உழைப்பார் என்று கூறி வாக்குகள் கேட்டேன். நீங்களும் பெருவாரியான வாக்குகள் வித்தியாசத்தில் அவரை வெற்றி பெற வைத்தீர்கள்.

### நாடாளுமன்றத்தில் - ஒட்டுமொத்த இந்தியாவுக்காகவும் முழங்கியவர் என் தங்கை கனிமொழி!

தூத்துக்குடியில் மக்களுடன் மக்களாக கனிமொழி வாழ்ந்தார்; உழைத்தார்; போராடினார்; உங்களுக்காக நாடாளுமன்றத்தில் பேசினார். பேசினார் என்று சொல்வதைவிட, 'கர்ஜனை மொழி'யாக முழங்கினார். தூத்துக்குடிக்காக மட்டும் அவர் பேசவில்லை, தமிழ்நாட்டிற்காகப் பேசினார்; ஒட்டுமொத்த இந்தியாவிற்காகப் பேசினார்.

மழை வெள்ளம் ஏற்பட்டபோது, அவரே தண்ணீரில் இறங்கி, மக்களுடன் மக்களாக நின்று, நிவாரணப் பணிகளில் ஈடுபட்டதையெல்லாம், நீங்களே பார்த்தீர்கள். இதைக் கூறினால், பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் 'குடும்ப அரசியல்' என்று பழைய பல்லவியைப்

**தூத்துக்குடியில் மக்களுடன் மக்களாக கனிமொழி வாழ்ந்தார்; உழைத்தார்; போராடினார்; உங்களுக்காக நாடாளுமன்றத்தில் பேசினார். பேசினார் என்று சொல்வதைவிட, 'கர்ஜனை மொழி'யாக முழங்கினார். தூத்துக்குடிக்காக மட்டும் அவர் பேசவில்லை, தமிழ்நாட்டிற்காகப் பேசினார்; ஒட்டுமொத்த இந்தியாவிற்காகப் பேசினார்.**



பாடுவார். எங்கள்மேல் எந்தக் குற்றச்சாட்டும் விமர்சனமும் வைக்க முடியாதவர்கள் செய்யும் அவதூறு அது.

பிரதமர் மோடி அவர்களே நாங்கள் உழைப்பதற்காக அரசியலுக்கு வந்திருக்கிறோம். ஊர் சுற்ற வரவில்லை! எப்படி மக்கள் பணியாற்ற வேண்டும் என்று எங்களுக்கு கற்றுக் கொடுத்தது யார்? தலைவர் கலைஞர் அவர்கள்!

எங்களுக்கு என்றால், தனிப்பட்ட எனக்கும் கனிமொழிக்கும் மட்டுமல்ல; இங்கு மேடையில் இருக்கும் நிர்வாகிகளுக்கு மட்டுமல்ல; திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஒவ்வொரு தொண்டனுக்கும் கற்றுக் கொடுத்திருக்கிறார்.

### ஒவ்வொரு குடும்பத்துக்கும் நன்மை செய்யும் கட்சி தி.மு.க. !

அதனால்தான், அடிக்கடி சொல்கிறோம்; ஆமாம், நாங்கள் குடும்பக் கட்சிதான்! தமிழ்நாட்டில் இருக்கும் ஒவ்வொரு குடும்பத்திற்கும் நன்மை செய்கின்ற கட்சி! ஒவ்வொரு நாளும் காலை முதல் இரவு வரை மக்களுடன் மக்களாக இருந்து, மக்களுக்காகப் பணியாற்றிக் கொண்டு இருக்கும் கட்சி! தமிழ்நாடு மொழி – இனம் பண்பாட்டு ரீதியாக, ஒடுக்கப்பட்டதை எதிர்த்து உருவானதுதான் திராவிட முன்னேற்றக் கழகம்.

### கொள்கை உரம் மிக்க கூட்டம் நாங்கள்!

இந்த தமிழ்நாட்டை எப்படியாவது அடிமைப் படுத்திவிட முடியாதா? என்று பகல் கனவு காணும் உங்களின் தூக்கத்தைக் கெடுக்கும் கொள்கை வாரிசுகள் நாங்கள்! இப்படிப்பட்ட கொள்கை உரமிக்க தன்மானக் கூட்டத்தைப் பார்த்தால் உங்களுக்குக் கசக்கத்தான் செய்யும்!

அதனால்தான் இந்தத் தூத்துக்குடி மக்களின் பிரதிநிதியான கனிமொழியை, மேடையில் இருக்கும்போதே நீங்கள் அவமதித்தீர்கள்.

தொடர்ச்சி 3 ஆம் பக்கம்

# வேலைவாய்ப்பின்மை பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாது!

## ஒன்றிய பா.ஜ.க. அரசு ஒப்புதல் – இளைஞர்கள் அதிர்ச்சி!

புதுடெல்லி, மார்ச் 28 –

ஒவ்வொரு ஆண்டும் 2 கோடி பேருக்கு வேலைவாய்ப்பு ஏற்படுத்தி தரப்படும் என்ற வாக்குறுதி அளித்து ஒன்றியத்தில் ஆட்சிக்கு வந்த பிரதமர் மோடி, 10 ஆண்டுகளில் ஒருவருக்கு கூட வேலைவாய்ப்பை ஏற்படுத்தி தராமல் பொதுமக்களிடம் கடும் அதிருப்தியை சம்பாதித்து வைத்துள்ளார்.

வேலைவாய்ப்பு ஏற்படுத்தி தருவதாக பொய் வாக்குறுதி அளித்த பிரதமர் மோடிக்கு, நாடாளுமன்றத் தேர்தலில் படுதோல்வியை பரிசாக அளித்து தக்க பாடம் புகட்ட வேண்டும் என பொதுமக்களுக்கு எதிர்க்கட்சியினர் வேண்டுகோள் விடுத்து வருகின்றனர்.

இந்தச்சூழலில் நாட்டின் வேலைவாய்ப்பின்மை பிரச்சினைக்கு தீர்வு காண முடியாது என்று ஒன்றிய அரசின் தலைமை பொருளாதார ஆலோசகர் அனந்த நாகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

அனைத்து சமூக, பொருளாதார பிரச்சினைக்கும் ஒன்றிய அரசு தீர்வு காண வேண்டும் என எதிர்பார்ப்பது தவறானது என்றும், தனியார் நிறுவனங்கள்தான் வேலைவாய்ப்புகளை ஏற்படுத்தி பணியமர்த்தலை செய்ய வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இது வேலைவாய்ப்பின்றி இருக்கும் இளைஞர்களிடையே கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. ஒன்றிய அரசின் தலைமை பொருளாதார ஆலோசகரின் கருத்துமூலம், வேலையில்லா திண்டாட்டத்தை ஒன்றிய அரசால் சரி செய்ய முடியவில்லை என்பது தெளிவாகியுள்ளது. ஆண்டுக்கு 2 கோடி பேருக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்படும் என்ற பிரதமர் மோடியின் வாக்குறுதி தோல்வியடைந்திருப்பது இதன்மூலம் அம்பலமாகியுள்ளது.

## நாடாளுமன்றத் தேர்தல் – கழகத் தலைவர்

# முதல்வர் மு.க.ஸ்டாலின் நாளைய பிரச்சாரம்!



2024 ஏப்ரல் 19 அன்று நடைபெற உள்ள நாடாளுமன்றத் தேர்தலையொட்டி, தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 'இந்தியா' கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து தேர்தல் பிரச்சாரம் செய்து வாக்குச் சேகரித்து வருகிறார்.

கழகத் தலைவர் அவர்கள் மேற்கொள்ளும் நாளைய தேர்தல் பிரச்சாரப் பயண விவரம் :-

| தேதி | நாடாளுமன்ற தொகுதி |
| --- | --- |
| 29.03.2024 (வெள்ளிக்கிழமை) - | தருமபுரி, கிருஷ்ணகிரி. |

இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வியாழக்கிழமை 28-03-2024

# மோடி சொன்னதை வழிமொழிகிறோம் !

“தமிழ்நாட்டுக்கான பேரிடர் நிவாரண நிதியைத் தர மறுக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசுக்கு எதிராக உச்சநீதிமன்றத்தில் வழக்குத் தொடுக்க உள்ளோம்” என்று தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார்கள். இந்த நிலைமைக்குத்தான் தமிழ்நாட்டை வைத்துள்ளார் பிரதமர்.

**ஒரு காலத்தில் மாநில உரிமைகளுக்காக முழங்கியவர்தான் இன்றைய பிரதமர். ஆனால் இன்று அவரே பிரதமர் ஆனதும், மாநில முதலமைச்சர்களை மிக மோசமாக நடத்தி வருகிறார். குஜராத் முதலமைச்சராக மோடி இருந்தபோது அவர் என்ன முழங்கினாரோ, அதைத்தான் தமிழ்நாடு முதலமைச்சர் இன்று வழிமொழிந்து கொண்டு இருக்கிறார்.**

“டெல்லியில் இருந்து இந்தியா முழுமைக்குமான திட்டமிடல் என்பது அகற்றப்பட்டு - அந்தந்தப் பகுதிக்கு அதுபற்றிய புரிந்துணர்வுள்ளவர் துணையோடு திட்டமிடுவதுதான் என் அணுகுமுறை” - ( 2014 ஏப்ரல் 23 - தினமணி பேட்டி) என்று சொன்னவர்தான் மோடி. அத்தகைய திட்டமிடல் இருந்ததா இந்தப் பத்தாண்டு காலத்தில்? வந்ததும் செய்த முதல் வேலையே திட்டக் கமிஷனைக் கலைத்ததுதான். மாநில முதலமைச்சர்கள் கோரிக்கை வைப்பதற்கான ஒரு இடத்தைக் காலி செய்ததுதான் மோடி செய்த முதல் வேலை.

**“கூட்டாட்சித் தத்துவத்தை ஆதரிப்பவன் நான். மாநில உரிமைகளை மதிப்பதும், மாநிலங்களை ஒருங்கிணைத்துத் திட்டங்களைத் தீட்டுவதும் எல்லாப் பிரச்சினைகளுக்கும் மாநில அரசுகள் டெல்லிக்கு காவடி தூக்கும் நிலைமையை மாற்றி அதிகாரப் பகிர்வுக்கு வழிகோலுவதும்தான் எனது அணுகுமுறையாக இருக்கும். மாநில முதலமைச்சராக நான் அடைந்திருக்கும் 12 ஆண்டு கால அனுபவத்துடன் தேசியத் தலைமையை ஏற்பதால், மாநிலங்களின் பிரச்சினையும் எனக்குத் தெரியும். மத்திய அரசின் முக்கியத்துவமும் எனக்குப் புரியும்” என்று சொன்னவர்தான் மோடி. இதில் எந்தவொரு சொல்லை யாவது அவர் கடைப்பிடித்துள்ளாரா? கடைப்பிடித்ததாகக் காட்ட முடியுமா?**

“மத்தியில் ஆட்சிக்கு வந்த பிறகு மாற்றுக் கட்சி ஆட்சிப் பொறுப்பில் உள்ள மாநில அரசுகளைப் பழிவாங்க மாட்டேன். எந்த வகையிலும் மாநில அரசுகள் பழிவாங்கப்படாது என உறுதி அளிக்கிறேன். என்னதான் அரசியல் வேறுபாடுகள் இருந்தாலும் மத்திய - மாநில உறவு சீர்குலைய இடம் தர மாட்டேன்” என்று பிரதமர் ஆவதற்கு முன் 2014 ஏப்ரல் 19 அன்று பேட்டி அளித்தவர் மோடி. இந்த பத்தாண்டு காலத்தில் அவர் செய்தது எல்லாமே பழிவாங்கல்கள்தான். மத்திய - மாநில உறவுகள் என்பதே அவரது ஆட்சிக் காலத்தில் இல்லை. மத்திய - மாநில கசப்புகள் தான்.

**“குஜராத் மக்கள் ரூ.60 ஆயிரம் கோடியை டெல்லிக்கு அனுப்புகிறார்கள். ஆனால் திரும்ப வருவது மிகக் குறைவு. குஜராத் என்ன பிச்சைக்காரர்கள் மாநிலமா?” என்று 6.12.2012 அன்று குஜராத் முதலமைச்சராக இருக்கும் போது கேட்டவர்தான் மாண்புமிகு நரேந்திரமோடி அவர்கள். இதே கேள்வியைத்தான் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கேட்கிறார்கள். ‘ஏன் தரமறுக்கிறீர்கள்? உங்க அப்பன் வீட்டுப் பணமா?’ என்று புரியும் மொழியில் புத்திக்கு உறைக்கும் மொழியில் அமைச்சர் உதயநிதியும் இதே கேள்வியைத்தான் கேட்டுக் கொண்டு வருகிறார்.**

“உள்ளாட்சி அமைப்புகளில் பெண்களுக்கு 50 சதவிகித இட ஒதுக்கீடு வழங்கும் மசோதாவைக் குஜராத் மாநில பெண் ஆளுநர் கமலா பெனிவால் ஒப்புதல் அளிக்காமல் வைத்திருக்கிறார். பெண்களுக்கு எதிரியாகப் பெண் ஆளுநரே இருக்கிறார். ஒரு பெண்மணி குஜராத்தின் ஆளுநராக இருந்தும், பெண்களுக்கான இட ஒதுக்கீட்டு மசோதாவை நிறைவேற்ற முடியாமல் போனது நமது துரதிருஷ்டமே” - என்று 2013 ஏப்ரல் 8-ம் தேதி, டெல்லியில் நடந்த இந்தியத் தொழிலக சம்மேளனத்தின் (FICCI) கூட்டத்தில் பேசினார் அப்போதைய குஜராத் முதல்வர் மோடி. அதைத் தான் இன்று தமிழ்நாடு - கேரள - கர்நாடக - மேற்கு வங்க - பஞ்சாப் - டெல்லி முதலமைச்சர்கள் சொல்லிக் கொண்டு இருக்கிறார்கள்.

**“ஒரு மாநிலத்தின் ஆளுநர் பொறுப்பு என்பது மிக முக்கியமான ஒன்றாகும். மாநிலத்துடன் உறவைப் பராமரிக்க வேண்டிய பொறுப்பு ஆளுநருடையது. மாநிலங்களில் தேர்ந்தெடுக்கப்படுகின்ற சட்டமன்றம் ஒரு சட்டத்தை இயற்றும். ஆனால் ஆளுநர் அந்தச் சட்டத்தில் கையெழுத்துப் போட மாட்டார். இப்படிச் செய்தால் மாநில அரசுகள் எப்படி மக்களுக்கு நன்மை செய்ய முடியும்? ஆளுநர் மாளிகைகள் எல்லாம் காங்கிரஸ் கட்சியின் அலுவலகங்களாக மாறிவிட்டன” - என்று குஜராத் முதலமைச்சராக இருந்த போது சொன்னவர் நரேந்திர மோடி. அதே செயலைத்தான் இப்போது பிரதமராக இருக்கும் நரேந்திரமோடி செய்து கொண்டு இருக்கிறார்.**

**இவ்வளவு பெரிய இயற்கை பேரிடரை எதிர்கொண்ட தமிழ்நாடு, அதற்கான நிதியை உச்சநீதிமன்றத்தில் வழக்குப் போட்டுத்தான் பெற வேண்டிய நிலைமை இருக்குமானால் - மாநில முதலமைச்சர்கள் டெல்லிக்கு வந்து போராட்டம் நடத்தித்தான் நிதிகளைப் பெற வேண்டிய நிலைமை இருக்குமானால் - இதை விட எதேச்சதிகாரம் வேறு இருக்க முடியுமா?**

நாம் இப்போது காண்பது, ‘ஒற்றை நபர்’ ஆட்சி. ஒவ்வொருவரும் தங்களது ஒற்றை வாக்கைச் செலுத்தி வீழ்த்த வேண்டிய ஆட்சி.

●●

## பிஜி தீவில் கடுமையான நிலநடுக்கம்!

*சுவா, மார்ச் 28-*

பிஜி தீவின் தலைநகர் சுவா பகுதியில் நேற்று காலை 6.58 மணியளவில் கடுமையான நிலநடுக்கம் ஏற்பட்டு உள்ளது. இது ரிக்டர் அளவு கோலில் 6.4 ஆக பதிவாகி உள்ளது. இதனை தேசிய நிலநடுக்க அறிவியல் மையம் தெரிவித்து உள்ளது. எனினும், இதனால் ஏற்பட்ட பொருளிழப்புகள் உள்ளிட்ட விவரங்கள் எதுவும் உடனடியாக வெளிவரவில்லை. சுனாமி எச்சரிக்கையும் விடப்படவில்லை.



தேனி மாவட்ட தேர்தல் அலுவலகத்தில் தேனி நாடாளுமன்றத் தொகுதி ‘இந்தியா’ கூட்டணி கழக வேட்பாளர் தங்க தமிழ்ச்செல்வன் வேட்பு மனு தாக்கல் செய்தார். உடன் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் ஐ.பெரியசாமி, வணிக வரி பத்திர பதிவுத்துறை அமைச்சர் மூர்த்தி, தெற்கு மாவட்டச் செயலாளர் கம்பம் ராமகிருஷ்ணன் எம்.எல்.ஏ. காங்கிரஸ் கட்சி மாவட்டத் தலைவர் முருகேசன் ஆகியோர் உள்ளனர்.

### சிதம்பரம் நாடாளுமன்றத் தொகுதியில் போட்டியிடும் கூட்டணி கட்சி வேட்பாளர்

# தொல். திருமாவளவனை அதிக வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெறச் செய்வோம்!

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் பேச்சு!

*அரியலூர், மார்ச் 28-*

அரியலூர் மாவட்டம் சிதம்பரம் நாடாளுமன்றத் தொகுதி திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமையிலான ‘இந்தியா’ கூட்டணி கட்சியின் சார்பில் போட்டியிடும் வேட்பாளர், விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் எழுச்சி தமிழர் தொல்.திருமாவளவன் அவர்கள் அறிமுக கூட்டம் மற்றும் மாவட்ட செயல்வீரர்கள் கூட்டம் அரியலூர் அன்னலட்சுமி திருமண மண்டபத்தில் மாவட்டக் கழகச் செயலாளர், தமிழ்நாடு அரசு போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் தலைமையில் நடைபெற்றது.

நடைபெற்ற கூட்டத்தில் சிதம்பரம் நாடாளுமன்றத் தொகுதிக்கு உட்பட்ட குன்னம் சட்டமன்ற தொகுதி, அரியலூர் சட்டமன்ற தொகுதி, ஜெயங்கொண்டம் சட்டமன்ற தொகுதி செயல்வீரர்கள் அறிமுகம், சிதம்பரம் நாடாளுமன்ற தொகுதி வேட்பாளர் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல். திருமாவளவன் அவர்களை அறிமுகம் செய்து அமைச்சர் சா.சி.சிவசங்கர் பேசியதாவது:-

மண்ணைக்காக்கின்ற, மொழியை காக்கின்ற இனத்தின் அடையாளத்தை காக்கின்ற போராக இந்த தேர்தலை கருத வேண்டும் என பேசினார்,

தொடர்ந்து அமைச்சர் பேசுகையில், நம்மை திசைத்திருப்ப பல்வேறு பொய்ச்செய்திகள் பரப்பி நம்மை திசை திருப்ப பார்ப்பார்கள் எதிரணியில் உள்ளவர்கள் நாம் அவற்றிக்கு திசைத் திரும்பாமல் தேர்தல் பணியாற்ற வேண்டும். சிதம்பரம் நாடாளுமன்றத் தேர்தலில் திருமாவளவன் அவர்கள் அதிக வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற செய்திட வேண்டும்,

பிற்படுத்தப்பட்டோரின் இட ஒதுக்கீட்டை பா.ஜ.க. பறிக்க முயன்றபோது அதற்காக தொடர்ந்து பிற்படுத்தப்பட்டோரின் உரிமைக்காக பாராளுமன்றத்தில் குரல் எழுப்பி போராடினார் அண்ணன் திருமாவளவன், இட ஒதுக்கீடு இருக்க கூடாது என நினைக்கும் பா.ஜ.க.வுடன் கூட்டணி வைத்திருப்பவர்கள் மக்களுக்கு எதுவும் செய்ய போவதில்லை, மக்களை பற்றி கவலைப் படபோவதும் இல்லை, நாடாளுமன்றத்தில் சமூக நீதியின் குரலாக இருக்கிறார். தனது வாழ்வை சமூகத்திற்கு அர்ப்பணித்தவர் அண்ணன் திருமாவளவன் அவர்கள் ஈழத் தமிழர்களுக்காக தொடர்ந்து குரல் கொடுத்துவருபவர், ஈழத்திற்கே நேராகச் சென்று அங்கு ஈழத்தமிழருக்காக போராடியவர்தான் திருமாவளவன் அவர்கள் திருமா அவர்கள் வெற்றி பெற்றால் களத்திலும், வெற்றிபெறா விட்டால் எனக்கென்ன என அவர் ஒருபோதும் நினைத்தது இல்லை தொடர்ந்து அனைத்து மக்களுக்காவும்,சமூக நீதிக்காவும், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்காக உழைத்து வருகிறார், மக்களவையில் திருமாவளவன் குரல் ஒலிக்கிறது என்றால் அது அனைத்து மக்களுக்குமான குரலாகும். திருமாவளவன் அவர்கள் வெற்றி முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் வெற்றி, கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வெற்றி, இந்தியா



கூட்டணியின் வெற்றி சமூக நீதியின் வெற்றி ஆகையால் கழகத் தோழர்களும், கூட்டணி கட்சி தோழர்களும், விடுதலைச் சிறுத்தைகள் கட்சி தோழர்களும் அனைவரும் இன்று முதல் அல்லும் பகலும் அயராது அவரது வெற்றிக்காக உழைத்திட வேண்டும் என பேசினார்.

சிதம்பரம் பாராளுமன்ற தொகுதி வேட்பாளரும், விடுதலைச் சிறுத்தைகள் கட்சி தலைவருமான தொல். திருமாவளவன் பேசியது:

சிதம்பரம் மக்களவைத் தொகுதியில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சி வெற்றிப்பெற தி.மு.க. காட்டும் வழியில் விடுதலை சிறுத்தைகள் கட்சியினர் பயணிக்க வேண்டும். அனைத்து பொறுப்பாளர்களும் தங்களது கட்சிப் பொறுப்பை மறந்து தீவிர வாக்கு சேகரிக்கும் தொண்டர்களாக பணியாற்ற வேண்டும். அவரவருக்கு பணி வழங்கப்பட்ட இடங்களில் பணியாற்ற வேண்டும். எதிரணியினர் நம்மை கோபப்படுத்தி பார்ப்பார்கள், நமது வழியை மாற்றியமைக்க திட்டமிடுவர். இணையத்தில் பல்வேறு கருத்துகளை பரப்பலாம். அவற்றை யாரும் கண்டுக்கொள்ள வேண்டாம். தமிழகத்தில் பிரதான எதிர்க்கட்சி அ.தி.மு.க. ஆனால் நாம் தற்போது எதிர்க்க வேண்டியது பா.ஜ.க. அணியை இந்த தேர்தலில் அ.தி.மு.க.வை பொருட்டாக கருத வேண்டாம். இந்தியாவை பாதுகாக்க வேண்டிய நிலையில் நாம் உள்ளோம். இந்தியாவை பாதுகாக்க பா.ஜ.க.வை வீழ்த்த வேண்டும். தமிழகம் போல கர்நாடகம், ஆந்திரா, கேரளா, பஞ்சாப், டெல்லி என பல்வேறு மாநிலங்களிலும் பா.ஜ.க.வுக்கு எதிராக இந்த அணி உள்ளது. இவ்வாறு பல மாநிலங்களில் இந்தியா கூட்டணி வெற்றி பெறும் போது பா.ஜ.க. நிச்சயம் வீட்டுக்கு சென்று விடும். பா.ஜ.க.வை வீட்டுக்கு அனுப்ப முதல் வியூகத்தை அமைத்தவர் தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் மு.க.ஸ்டாலின் அவர்கள் அதனாலேயே தி.மு.க.வுடன் விடுதலை சிறுத்தைகள் கட்சிகள் தொடர்ந்து பயணிக்கிறது. அப்போது

### காவிரி நீருக்காக அமைக்கப்பட்ட இந்த கூட்டணி இன்றும் தொடர்கிறது!

2009 ம் ஆண்டு முள்ளிவாய்க்கால் பிரச்சினையின் போது என்னை அழைத்து வெளியே வாருங்கள் என வலியுறுத்தினர். அப்போது தி.மு.க., காங்கிரஸ், வி.சி.க. மட்டுமே கூட்டணி. அப்போது இலங்கையில் ஈழத்தமிழர்கள் படுகொலைக்கு காரணம் தி.மு.க., காங்கிரஸ் கூட்டணி என பேசப்பட்டது. அதனை முறியடித்து தி.மு.க. கூட்டணி வெற்றிப் பெற்றது. இந்த நாட்டுக்கு ஒரு தீங்கு ஏற்பட இருக்கிறது. அதனை தடுக்க நமக்குள் இருக்கும் பிரச்சினைகளை புறம்தள்ளி விட்டு, நாட்டுக்கு வரும் தீங்கை தடுக்க அனைவரும் ஒன்றுபட வேண்டும். ஜெயலலிதா இல்லை எனவே அ.தி.மு.க.வை அழித்து விடலாம். முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் இல்லை திமுகவை அழித்து விடலாம் என பா.ஜ.க. நினைக்கிறது. தாய் எட்டடி பாய்ந்தால் குட்டி 16 அடி பாயும் என்பார்கள் அதுபோல் இங்கு தமிழ்நாட்டில் அண்ணன் தளபதி செயல்பட்டு வருகிறார் அவர்கள் எண்ணம் ஒருபோதும் இங்கு எடுபடாது , காரணம் இங்கு கலைஞர் அவர்களின் புதல்வர் மு.க.ஸ்டாலின் இருக்கிறார். மீண்டும் பா.ஜ.க. ஆட்சிக்கு வந்தால் மாநில கட்சி இருக்காது.

நான் எப்போதும் உங்களுடன் இருப்பேன். மக்களவையில் அனைவருக்குமான குரல் கொடுக்க எனக்கு பானை சின்னத்தில் வாக்களித்து மீண்டும் என்னை வெற்றிப்பெற செய்யுங்கள் என பேசினார்.

நடைபெற்ற செயல்வீரர்கள் கூட்டத்தில் கழக சட்டத்திட்ட திருத்தக்குழு இணை செயலாளர் சுபா. சந்திரசேகர், பெரம்பலூர் மாவட்டப் பொறுப்பாளர் ஜெகதீசன், அரியலூர் சட்டமன்ற உறுப்பினர் கு.சின்னப்பா, செயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க. சொ.க.கண்ணன், காட்டுமன்னார்கோயில் சட்டமன்ற உறுப்பினர் சிந்தனைச்செல்வன், முன்னாள் மாவட்டச் செயலாளர் குன்னம் சி.இராஜேந்திரன், கழக கொள்கைப் பரப்பு துணை செயலாளர் ச.அ.பெருநற்கிள்ளி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் எம்.பி. பாலசுப்ரமணியன், மாநில ஆதிதிராவிடர் நலக்குழு துணை செயலாளர் ப.துரைசாமி, மாநில வர்த்தகர் அணி துணை செயலாளர் வி.எஸ்.பெரியசாமி, காங்கிரஸ் கட்சி மாவட்ட தலைவர் ஆ.சங்கர், ம.தி.மு.க. மாவட்டச் செயலாளர் ராமநாதன், கம்யூனிஸ்ட் கட்சி மாவட்ட செயலாளர் உலகநாதன், ம.ஜ.க. மாவட்ட செயலாளர் அக்பர்அலி, சி.பி.எம். இளங்கோவன், வி.சி.க. மாவட்டச் செயலாளர்கள் அன்பானந்தம், வீர. செங்கோலன், கதிர்வளவன், மற்றும் முகமதுஹாஜி, ரகுமான், செல்லதுரை, மாவட்ட துணைச் செயலாளர்கள் மு.கணேசன் சி.சந்திரசேகரன் லதாபாலு, சன். சம்பத், ஒன்றிய கழக செயலாளர்கள் ஆலத்தூர் என். கிருஷ்ணமூர்த்தி, தனசேகர், இரா.கென்னடி, பூ.செல்வராஜ், மதியழகன், இராஜேந்திரன், கோ.அறிவழகன், இரா.மணிமாறன், அசோக சக்ரவர்த்தி, ரெங்க.முருகன், மா.அன்பழகன், ஆர்.கலிய பெருமாள், வி.எழில்மாறன், நகர கழக செயலாளர்கள் வெ.கொ.கருணாநிதி, இரா. முருகேசன், பேரூர் கழக செயலாளர்கள் ப.கோபால கிருஷ்ணன், ஜாகிர்உசேன், அல்போன்ஸ் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் தெய்வ.இளையராஜா, மாவட்டப் பொறியாளர் அணி அமைப்பாளர் கே.சி. லூரயிகதிரவன், ஒன்றிய பெருந்தலைவர் பிரபா. செல்லப்பிள்ளை, நகராட்சி தலைவர் சாந்தி கலைவாணன், பொதுக்குழு உறுப்பினர்கள் ஆர்.எம்.அன்பழகன், சி.ஆர்.எம்.பொய்யாமொழி, இரா.பாலு, வி.எம். ஷாஜகான், நீலமேகம், பி.எஸ்.ஆர்.பட்டுசெல்வி, மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் பானுமதி, மாவட்ட மகளிர் தொண்டரணி அமைப்பாளர் மீனா, மாவட்ட மகளிர் அணி துணை தலைவர் இராணி, முன்னாள் நகர் மன்ற தலைவர் விஜயலட்சுமி மற்றும் குன்னம்,

அரியலூர், செயங்கொண்டம் சட்டமன்ற தொகுதி பொறுப்பாளர்கள், மாநில, மாவட்ட, ஒன்றிய,பேரூர், கிளைக் கழக நிர்வாகிகள், அனைத்து அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழகத் தோழர்கள், பொது மக்கள், தோழமைக் கட்சி பொறுப்பாளர்கள் பலரும் கலந்துகொண்டனர்.



மக்களவைத் தேர்தலில், ‘இந்தியா’ கூட்டணியின் சார்பில், தூத்துக்குடி நாடாளுமன்றத் தொகுதியில் போட்டியிடும் வெற்றி வேட்பாளர் கனிமொழி கருணாநிதி அவர்கள் தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட, தேரடித்திடல், தெற்கு ரதவீதி, தோப்பூர், வீரபாண்டியன்பட்டணம், பிரசாத்நகர் அம்பேத்கர் சிலை, சண்முகபுரம், ஆறுமுகநேரி பேரூராட்சி இராணிமகாராஜபுரம், அடைக்கலாபுரம், காமராஜ்புரம், ஆறுமுகநேரி பஜார், செல்வராஜபுரம், திசைக்காவல்தெரு, மடத்துவிளை, கந்தன்குடியிருப்பு, அம்மன்புரம் சோனகன்விளை ஆகிய பகுதிகளில் வாக்கு சேகரித்தார். உடன், மீன்வளம், மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சரும், தூத்துக்குடி தெற்கு மாவட்டச் செயலாளருமான அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன், சட்டமன்ற உறுப்பினர் ஊர்வசி அமிர்தராஜ், தூத்துக்குடி மாநகராட்சி மேயர் ஜெகன் பெரியசாமி மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகள், கழக நிர்வாகிகள் பலர் கலந்துகொண்டனர்.

# தமிழ்நாட்டு மீனவர்களைக் காப்பாற்ற ஒரு துரும்பையும் எடுத்துப் போடாத பிரதமர், எந்த முகத்தை வைத்துக் கொண்டு வாக்குக் கேட்கிறார்?

## எட்டயபுரத்தில் கழகத் தலைவர் உரை... முதல் பக்கத் தொடர்ச்சி



கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (26.3.2024) தூத்துக்குடி மாவட்டம், எட்டயபுரத்தில் நடைபெற்ற 'இந்தியா' கூட்டணியின் மக்களவைத் தேர்தல் பிரச்சார பொதுக் கூட்டத்தில் தூத்துக்குடி தொகுதி வேட்பாளர் கனிமொழி கருணாநிதி மற்றும் இராமநாதபுரம் தொகுதி வேட்பாளர் நவாஸ்கனி ஆகியோருக்கு வாக்களிக்குமாறு கேட்டுக் கொண்டு உரையாற்றினார். இக்கூட்டத்தில், அமைச்சர் பெருமக்கள் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன், தங்கம் தென்னரசு, ரகுபதி, திருமதி.கீதா ஜீவன், ராஜகண்ணப்பன், அனிதா ராதாகிருஷ்ணன், இராமநாதபுரம் மாவட்ட கழகச் செயலாளரும், சட்டமன்ற உறுப்பினருமான காதர்பாட்சா முத்துராமலிங்கம், சட்டமன்ற உறுப்பினர்கள் மார்க்கண்டேயன், முருகேசன், கருமாணிக்கம், அமிர்தராஜ், சண்முகய்யா, சமத்துவ மக்கள் கழகத் தலைவர் எர்ணாவூர் நாராயணன், முக்குலத்தோர் புலிப்படை கட்சித் தலைவர் கருணாஸ், மக்கள் விடுதலைக் கட்சித் தலைவர் முருகவேல் ராஜன், அகில இந்திய பார்வர்டு பிளாக் கட்சித் தலைவர் சுரேஷ் மற்றும் இந்தியா கூட்டணி நிர்வாகிகள் உடன் உள்ளனர்.

தி.மு.க.வைச் சேர்ந்தவர் என்று இல்லை ஒரு பெண் என்றாவது மதித்தீர்களா? தூத்துக்குடி மக்கள் வாக்களித்துத் தேர்ந்தெடுத்த நாடாளுமன்ற உறுப்பினர் என்றாவது மதித்தீர்களா? உண்மையில் நீங்கள் கனிமொழியை அவமதிக்கவில்லை, தூத்துக்குடி மக்களைத்தான் அவமதித்தீர்கள்!

ஜுன் 4ஆம் தேதி பாருங்கள் கனிமொழியை மீண்டும் தூத்துக்குடி மக்கள் தேர்ந்தெடுத்து நாடாளுமன்றத்திற்கு அனுப்பத்தான் போகிறார்கள். அன்றைக்கு எதிர்க்கட்சி வரிசையில் இருக்கும் பா.ஜ.க. அதைப் பார்க்கத்தான் போகிறீர்கள்!

### தூத்துக்குடி துப்பாக்கிச் சூட்டை மறக்க முடியுமா நினைத்தால் நெஞ்சமெல்லாம் பதறுகிறது!

கடந்த அ.தி.மு.க. ஆட்சியில், தூத்துக்குடி என்றாலே நமக்கு நினைவுக்கு வந்தது எது? துப்பாக்கிச் சூடு! 13 பேர் அநியாயமாகக் கொல்லப்பட்டதை மறக்க முடியுமா? அப்படியொரு மனிதநேயமற்ற கொடூரமான துப்பாக்கிச் சூட்டை நடத்தியவர்தான் பழனிசாமி! தமிழ்நாட்டு வரலாற்றில் அ.தி.மு.க. ஆட்சியால் வைக்கப்பட்ட மிகப்பெரிய கரும்புள்ளி. துயரமும் கொடூரமுமான அந்தச் சம்பவத்தை இப்போது நினைத்தாலும் நெஞ்சமெல்லாம் பதறுகிறது.

2018ஆம் ஆண்டு எதிர்க்கட்சித் தலைவராக இருந்த நான் உடனடியாகத் தூத்துக்குடிக்கு வந்தேன். துப்பாக்கிச் சூட்டின் சத்தமும் – மக்களின் மரண ஓலமும் ஒலித்துக் கொண்டிருந்த அந்தக் காட்சி, இப்போதும் என் மனதை விட்டு அகலவில்லை. இரத்தத்தை உறைய வைக்கும் இந்தச் சம்பவம் பற்றி அன்றைய முதலமைச்சர் பழனிசாமியிடம் ஊடகங்கள் கேட்டபோது, என்ன கூறினார்? ”இப்படி ஒரு சம்பவம் நடந்ததே எனக்குத் தெரியாது. உங்களைப்போல் நானும் டி.வி. பார்த்துதான் தெரிந்து கொண்டேன் என்று துளிகூட நெஞ்சில் ஈரம் இல்லாமல் பழனிசாமி பேட்டி அளித்ததை யாரும் மறந்திருக்கவே முடியாது.

### பழனிச்சாமியின் பொய்யைத் தோலுரித்த – அருணா ஜெகதீசன் ஆணையம்!

“உள்துறையைக் கையில் வைத்திருந்த மாநிலத்தின் முதலமைச்சர் பேசும் பேச்சா அது? என்று நாடே கோபத்தில் கொந்தளித்தது. அந்தளவுக்குப் பெரிய பொய்யை கூறினார் பழனிசாமி. ஒரு பழமொழி கூறுவார்கள் ‘கடப்பாரையை முழுங்கிவிட்டு கசாயம் குடித்துவிடுவார்கள்’ என்று! அந்தளவிற்குப் பெரிய பொய்யைப் பழனிசாமி அன்று கூறினார். அவர் கூறியது எவ்வளவு பெரிய பொய் என்று

## தூத்துக்குடியில் மனிதநேயமற்ற கொடூரமாக துப்பாக்கிச்சூடு நடத்தி 13 பேரை அநியாயமாகக் கொன்றவர் எடப்பாடி பழனிசாமி!

அவர்கள் ஆட்சிக் காலத்தில் அமைக்கப்பட்ட ஆணையமே கூறிவிட்டது. நீதியரசர் அருணா ஜெகதீசன் ஆணைய அறிக்கையில் பழனிசாமி கூறியது பொய் என்று தெளிவாக வந்துவிட்டது.

‘பச்சைப்பொய் பழனிசாமி’ என்று மக்கள் சும்மாவா சொன்னார்கள்! பழனிசாமிக்குத் தெரிந்துதான் துப்பாக்கிச் சூடு நடந்தது என்று ஆணையம் ஆதாரப்பூர்வமாகக் கூறியிருக்கிறது. ஆணையத்தில் சாட்சியாக விசாரிக்கப்பட்டவர்கள் யார் தெரியுமா? அப்போது இருந்த தலைமைச் செயலாளர்! அடுத்து, சட்டம்ஒழுங்குப் பொறுப்பிலிருந்த அப்போதைய டி.ஜி.பி.! அன்றாட நிகழ்வுகளை முதலமைச்சருக்குச் சொல்லும் அப்போதைய உளவுத்துறை ஐ.ஜி.! இப்படி அரசின் உயர் பொறுப்புகளில் இருந்த அனைவரும் கூறிய சாட்சியத்தை வைத்துத்தான், பழனிசாமிக்கு தெரிந்துதான் துப்பாக்கிச் சூடு நடந்திருக்கிறது என்று ஆணையம் உறுதி செய்தது!

தூத்துக்குடியில் நடக்கின்ற சம்பவங்களையும், அங்குள்ள நிலவரங்களையும் நிமிடத்திற்கு நிமிடம்

## விவசாயிகளை எதிரிகள் போல் நடத்துவதுதான் மோடி மாடலா?

எடப்பாடி பழனிசாமியிடம் ‘அப்டேட்’ செய்ததாக அவர்கள் கூறினார்கள். எனவே, ஊடகங்கள் மூலமாகத்தான் துப்பாக்கிச் சூடு சம்பவம் பற்றி தெரிந்து கொண்டதாகப் பழனிசாமி கூறியது தவறானது என்று ஆணையத்தின் அறிக்கையில் வெட்ட வெளிச்சம் ஆகிவிட்டது.

### ஆணைய அறிக்கை ஏற்று – கழக அரசின் அடுக்கடுக்கான அறிவிப்புகள்!

இவ்வாறு, பழனிசாமியின் பொய்யை அம்பலப்படுத்திய ஆணையம், தி.மு.க. ஆட்சியில் அமைக்கப்பட்டதல்ல! அ.தி.மு.க. ஆட்சியில் பழனிசாமி முதலமைச்சராக இருந்தபோதே அமைக்கப்பட்டது! தி.மு.க. அரசு பொறுப்பேற்றதும் நீதியரசர் அருணா ஜெகதீசன் அவர்களின் இடைக்கால அறிக்கையில் தெரிவிக்கப்பட்ட கருத்துகளின் அடிப்படையில், நம்முடைய கழக அரசு பல நடவடிக்கைகளை எடுத்தது.

கலவரத்தில் ஈடுபடாத நபர்கள் மீது பதிவு செய்யப்பட்ட 38 வழக்குகளைத் திரும்பப் பெற்றோம். போராட்டத்தின்போது காவல்துறையினரால் கைது செய்யப்பட்டு, காவலில் வைக்கப்பட்ட 93 நபர்களுக்கு, அவர்களும் அவர்களின் குடும்ப உறுப்பினர்களும் அனுபவித்த மன வேதனைகளின் பொருட்டு 1 இலட்சம் ரூபாய் நிவாரண உதவி வழங்கப்பட்டது.

காவல் துறையினரால் கைது செய்யப்பட்டு, பாளையங்கோட்டை மத்தியச் சிறையில் அடைக்கப்பட்டு, பிறகு இறந்த பரத்ராஜ் என்பவரின் தாயாருக்கு 2 இலட்சம் ரூபாய் நிதியுதவி அளிக்கப்பட்டது. திரும்பப் பெறத் தகுதியுள்ள 38 வழக்குகளில் தொடர்புடைய நபர்களின் உயர்கல்வி மற்றும் வேலைவாய்ப்புக்காகத் ”தடையில்லாச் சான்றிதழ் வழங்க அரசாணை வெளியிடப்பட்டது. இவை எல்லாவற்றிற்கும் தி.மு.க. ஆட்சிக்கு வந்ததும் – 26.05.2021 அன்றே உத்தரவிட்டோம்.

### 18 நபர்களுக்கு கல்வித் தகுதிக்கேற்ப பணி வழங்கினோம்!

தூத்துக்குடிச் சம்பவத்தில் பாதிக்கப்பட்ட 21 நபர்களுக்கு, கடந்த ஆட்சியில் கண்துடைப்பாகச் சில பணிகள் வழங்கப்பட்டன. அவர்கள் தங்களின் படிப்புத் தகுதிக்கு ஏற்ற பணிகளைக் கேட்டார்கள். அதை நிறைவேற்றிக் கொடுத்ததும் தி.மு.க. அரசுதான்! அவர்கள் கல்வித் தகுதிக்கு ஏற்ற பணியிடங்கள் 18 நபர்களுக்கு வழங்கப்பட்டன. எல்லாவற்றிற்கும் மேல், இந்தத் துயரங்களுக்கு எல்லாம் காரணமான ஸ்டெர்லைட் ஆலையை நிரந்தரமாகத் திறக்க முடியாதபடி சமீபத்தில் உச்சநீதிமன்றத்தில் உறுதியான வாதங்களை முன்வைத்து வெற்றி கண்டது, நம்முடைய திராவிட மாடல் அரசுதான்!

### பாதிக்கப்பட்டோர் வாழ்வில் ஒளி வீசும் உதயசூரியன்; தி.மு.க. ஆட்சி!

ஒரு ஆட்சி நிர்வாகம் ஈவு இரக்கமில்லாமல் எப்படி நடக்கக் கூடாது என்பதற்கு எடுத்துக்காட்டு கடந்த அ.தி.மு.க. ஆட்சி! ஆனால், பாதிக்கப்பட்ட குடும்பங்களின் கண்ணீரைத் துடைத்து, அவர்களின் வாழ்க்கையில், ஒளி வீசும் உதயசூரியனாக இருக்கிறதுதான் நம்முடைய தி.மு.க. ஆட்சி! இந்தத் திராவிட மாடல் ஆட்சி!

மக்கள் விரோத ஆட்சி நடத்திய பழனிசாமி, தன் ஆட்சி அவலங்களை எல்லாம் மக்கள் மறந்திருப்பார்கள் என்று நினைக்கிறார். மக்களை ஏமாற்ற மீண்டும் அவர் பிரச்சாரம் செய்யத் தொடங்கியிருக்கிறார். இரண்டு நாட்களுக்கு முன்னால் திருச்சியில் பேசிய பழனிசாமி, எனக்கு இரண்டு மகிழ்ச்சியைக் கொடுத்திருக்கிறார்.

ஒன்று, தி.மு.க.வுக்கும் அ.தி.மு.க.வுக்கும்தான் போட்டி என்று கூறியிருக்கிறார். அந்தளவிற்காவது பழனிசாமிக்குப் புரிதல் இருக்கே என்று, எனக்கு முதல் மகிழ்ச்சி!

### எங்கள் சாதனை – அ.தி.மு.க. துரோகம்! மக்கள் எடைபோட்டு தீர்ப்பளிப்பீர்!

பழனிசாமி அவர்களே களத்தில் மோதுவோம்! எங்கள் சாதனைகளையும் உங்கள் துரோகங்களையும் எடைபோட்டு மக்கள் தீர்ப்பளிக்கட்டும்! எங்கள் கொள்கைகள் எப்படி உயர்வானது! அந்தக் கொள்கைகளுக்காக நாங்கள் எப்படி உறுதியுடன் நிற்கிறோம்! கொள்கை அடிப்படையில் ஆட்சி நடத்தி, திட்டங்களைச் செயல்படுத்துகிறோம் என்று ஒவ்வொரு நாளும் மக்கள் பார்க்கிறார்கள்

அதேபோல், பழனிசாமி என்பவர் யார்? நேற்று யாருடன் இருந்தார்; இன்றைக்கு யாருடன் இருக்கிறார்; நாளைக்கு யாருடன் இருப்பார்; சுயநலத்தின் முழு உருவமாகத் தமிழ்நாட்டின் உரிமைகளை எப்படி அடகு வைத்தார்; நேரத்திற்கு ஏற்ற மாதிரி எப்படியெல்லாம் தவழ்ந்து தவழ்ந்து பழனிசாமி போராடுவார் என்று மக்கள் எடைபோட்டுத் தீர்ப்பளிப்பார்கள்!

எப்படி என்னைப் பற்றி அவதூறுகளைப் பரப்பி, விமர்சித்துப் புடம் போட்ட தங்கமாக எஃகுபோல் நெஞ்சுறுதி கொண்டவனாக மாற்றியிருக்கிறார்களோ – அதேபோல், இப்போது தம்பி உதயநிதியையும் விமர்சிக்கத் தொடங்கியிருக்கிறார். இது இரண்டாவது மகிழ்ச்சி!

பழனிசாமி அவர்களே எங்களைத் தொடர்ந்து விமர்சியுங்கள்! வரவேற்கிறோம்! விமர்சனங்கள் ஆக்கபூர்வமானதாக இருந்தால், சொல்வது யார் என்று பார்க்கமாட்டோம் பயனடைவது மக்கள் என்று செயலாற்றுவோம் இதுதான் தி.மு.க.!

### பா.ஜ.க.வை விமர்சிப்பதே இல்லை! எஜமான விசுவாசம் தடுக்கிறது!

நடப்பது நாடாளுமன்றத் தேர்தல்! கடந்த பத்தாண்டுகளில் நாட்டை நாசப்படுத்திப் படுகுழியில் தள்ளியிருப்பது பா.ஜ.க.! எந்த பா.ஜ.க.? ‘மோடிதான் எங்கள் டாடி‘ என்று பாதம்தாங்கிளாகத் தூக்கி தலையில் சுமந்தீர்களே அந்தப் படுபாவி பா.ஜ.க.! எந்த பா.ஜ.க.? தங்களுக்கு எதிரான ஓட்டுகள் பிரிய வேண்டும் என்று உங்களுக்கு ஸ்க்ரிப்ட் கொடுத்துள்ளதே அந்த பா.ஜ.க.! அந்த பா.ஜ.க.வைக் கண்டித்து விமர்சித்து ஒரு வார்த்தைகூட உங்களிடமிருந்து வரவில்லையே? எஜமான விஸ்வாசம் தடுக்கிறதா?

பழனிசாமி அவர்களே உங்களுக்கு, முன்னாள் இந்நாள் கிடையாது எந்நாளும் பா.ஜ.க.தான் எஜமானர்கள் நீங்கள் அவர்களின் பாதம்தாங்கிகள் மனமுவந்து தமிழ்நாட டிற்கும் தமிழ்நாட்டு மக்களுக்கும் துரோகம் இழைக்கும் கொள்கையற்ற கூட்டம் நீங்கள்! மோடியைப் பற்றி பாசாங்கிற்காகக்கூட பத்து சொற்களை பேசாத பாதம்தாங்கி பழனிசாமிதான், தமிழ்நாட்டைக் காப்பாற்றப் போகிறாராம்; உரிமைகளை மீட்கப் போகிறாராம்.

பழனிசாமி அவர்களே அனைத்து உரிமைகளையும் அடகு வைத்தது நீங்கள்தான்! உங்களுக்கு இதையெல்லாம் கூற அருகதை இருக்கிறதா?

இப்படி பாதம்தாங்கி பழனிசாமி ஒரு பக்கம் என்றால் அவரின் ‘ஓனர்’ மோடி மற்றொரு பக்கம் வந்திருக்கிறார். தேர்தல் நேரத்தில்தான் மோடி அவர்களைத் தமிழ்நாட்டுப் பக்கம் பார்க்க முடியும். சில நாட்களுக்கு முன்னால், கன்னியாகுமரிக்கு வந்த பிரதமர் நரேந்திர மோடி, இலங்கைக் கடற்படையால் தமிழ்நாட்டு மீனவர்கள் தாக்கப்படுவதற்கும் – கைது செய்யப்படுவதற்கும், தி.மு.க.வும் – காங்கிரசும்தான் காரணம் என்று கூறியிருக்கிறார்.

”நான் ஆட்சிக்கு வந்தால், ஒரு மீனவர்கூட தாக்கப்பட மாட்டார் – கைது செய்யப்பட மாட்டார் என்று மார்தட்டினாரே மோடி? ஆனால், வரலாற்றிலேயே இல்லாத அளவுக்கு, இராமநாதபுரம் – தூத்துக்குடி என்று பல்வேறு மாவட்ட மீனவர்களுக்குச் சிறைத் தண்டனை, படகுகள் பறிமுதல், படகுகள் நாட்டுடைமை, கடும் அபராதம், மூன்றாயிரத்துக்கும் மேற்பட்ட மீனவர்கள் கைது என்று, தமிழ்நாட்டு மீனவர்கள்மீது இலங்கைக் கடற்படை அறிவிக்கப்படாத ஒரு போரை நடத்துவது மோடி ஆட்சியில்தான்!

### பிரதமர் மோடி, விஸ்வகுருவா – மவுன குருவா?

பிரதமர் மோடி அவர்களே இதையெல்லாம் வேடிக்கை பார்ப்பது யார்? நீங்கள்தானே! தமிழ்நாட்டு மீனவர்கள் மீதான தாக்குதல்களைத் தட்டிக் கேட்க நீங்கள் தயங்குவது ஏன்? பாதிக்கப்படுவது தமிழ்நாட்டு மீனவர்கள் என்பதாலா? கதறி அழுவது தமிழ்நாட்டுப் பெண்கள் என்பதாலா? குஜராத் மீனவர்கள்மீது பாகிஸ்தான் துப்பாக்கிச் சூடு நடத்தினால், சிறையில் அடைத்தால், படகுகளை நாட்டுடைமை ஆக்கினால் இப்படித்தான் அமைதியாக

## பாதம் தாங்கி பழனிசாமிக்கு எந்நாளும் பா.ஜ.க. தான் எஜமானர்கள்!

இருப்பீர்களா? நீங்கள்தான் பெரிய விஸ்வகுருவாயிற்றே! இலங்கையை உங்களால் கண்டிக்க முடியாதா? நீங்கள் விஸ்வகுருவா? இல்லை மவுனகுருவா? பதில் கூறுங்கள் மாண்புமிகு மோடி அவர்களே பதில் கூறுங்கள் என்று நான் மட்டும் கேட்கவில்லை தூத்துக்குடி இராமேஸ்வரம் மீனவர்கள் மட்டும் கேட்கவில்லை ஒட்டுமொத்தத் தமிழ்நாட்டு மீனவர்களும் கேட்கிறார்கள்!

2014 நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்பு, பாம்பனில் பா.ஜ.க. சார்பில் ‘கடல் தாமரை’ என்று ஒரு போராட்டம் நடத்தப்பட்டது. அப்போது பா.ஜ.க. தலைவர்களில் ஒருவராக இருந்த அம்மையார் சுஷ்மா சுவராஜ் அவர்கள் இங்கு வந்திருந்தார்கள். “பா.ஜ.க. ஆட்சிக்கு வந்தால், கச்சத்தீவு மீட்கப்படும், மீனவர் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணப்படும்” என்று கூறினார். இதெல்லாம் பத்தாண்டுக் காலத்தில் நடந்திருக்கிறதா? ”தமிழ்நாட்டு மீனவர்கள் இலங்கைக் கடற்படையால் துன்புறுத்தப்படுவதும் – கைது செய்யப்பட்டுச் சிறையில் அடைக்கப்படுவதும் தினசரி நடக்கிறது. இதற்கு காங்கிரஸ் அரசின் பலவீனம்தான் காரணம் என்று இராமநாதபுரத்தில் வைத்துதான் மரியாதைக்குரிய நரேந்திர மோடி அவர்கள் கூறினார்.

“மீனவர்கள் பாதுகாப்பாக வாழவேண்டும் என்றால், இந்தியாவில் வலுவான ஒன்றிய அரசு அமைய வேண்டும்” என்று கூறினார். மீனவர்கள் வாழ்வு சிறக்க சபதம் எடுப்பதாகக் கன்னியாகுமரியில் கூறினார். ”நாங்கள் ஆட்சிக்கு வந்தால் ஒரு மீனவர்கூட உயிரிழக்க மாட்டார்கள் என்று கூறினார். தங்கச்சிமடம் மீனவர் பிரிட்டோ கொலை செய்யப்பட்டாரே, அது யார் ஆட்சியில்? மீனவர்கள்மீது பெட்ரோல் குண்டு வீசப்பட்டதே, அப்போது நீங்கள் தானே பிரதமர்?

மேசியா நாகராஜன், செந்தில்குமார், சாம்சன், டார்வின் என்று நான்கு மீனவர்கள் படுகொலை செய்யப்பட்டார்களே அப்போது வேடிக்கை பார்த்த பிரதமர் யார்? நீங்கள்தானே!

### எந்த முகத்தை வைத்துக்கொண்டு – தமிழ்நாட்டு மீனவர்களிடம் வருகிறீர்கள்?

தமிழ்நாட்டு மீனவர்களுக்கு எதிரான இலங்கையின் அராஜகங்கள், கைதுகள் அளவில்லாமல் போனது பா.ஜ.க. ஆட்சியில்தானே! இல்லையென்று ஆதாரப்பூர்வமாக மறுக்க முடியுமா? விஸ்வகுரு என்று விளம்பரப்படுத்திக் கொள்ளும் நீங்கள் தமிழ்நாட்டு மீனவர்களைக் காப்பாற்ற ஒரு துரும்பையும் எடுத்துப் போடவில்லையே? எந்த முகத்தை வைத்துக் கொண்டு தமிழ்நாட்டு மீனவர்களிடம் ஓட்டு கேட்டு வருகிறீர்கள்?

தமிழ்நாட்டு மீனவர்களைக் காப்பாற்றத் தவறிய பிரதமர் மோடி, திசைதிருப்பும் எண்ணத்துடன் எங்கள் மேல் குறை சொல்கிறார். ஒரு பிரதமர் வாக்கு கேட்டு வருகிறார் என்றால், தன்னுடைய ஆட்சிக் காலத்தில் செய்த சாதனைகளைக் கூறி வாக்கு கேட்க வேண்டும். மாறாக, பிரதமர் மோடி, எதிர்க்கட்சிகளைத் திட்டுவதில் நேரத்தை செலவு செய்து கொண்டு இருக்கிறார்.

### சுருக்குப்பை பணத்தைக் கூட உருவ – மோடி திட்டம்!

பா.ஜ.க. ஆட்சிக்கு வந்தால், வெளிநாட்டில் இந்தியர்கள் பதுக்கி வைத்திருக்கும் கருப்புப் பணத்தை மீட்டு ஆளுக்கு 15 இலட்சம் ரூபாய் தரலாம் என்று கூறினாரே! கொடுத்தாரா? 15 ஆயிரமாவது கொடுத்தாரா? இல்லையே! உண்மையைச் சொல்ல வேண்டும் என்றால், சுருக்குப் பையில் இருக்கும் பணத்தைகூட எப்படி உருவ வேண்டும் என்றுதான் திட்டம் போடுகிறார்!

ஆண்டுக்கு 2 கோடி இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பை உருவாக்கித் தருவேன் என்று கூறினாரே! எங்கே அந்த வேலைவாய்ப்புகள்? உண்மையைச் சொல்ல வேண்டும் என்றால், கடந்த 50 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு, இப்போது மோடி ஆட்சியில்தான் வேலைவாய்ப்பின்மை தலை விரித்தாடுகிறது. உழவர்களின் வருமானம் இரண்டு மடங்கு ஆகிவிட்டதா? உழவர்களின் வாழ்வாதாரத்தையே பாழாக்குகிற மூன்று வேளாண் சட்டங்களைக் கொண்டு வந்து, விவசாயிகளைத் தலைநகர் எல்லையில் போராடவிட்டு, அவர்கள் வெயிலிலும் மழையிலும் கஷ்டப்படுவதைப் பார்த்து சந்தோஷப்பட்டீர்கள். ஏதோ எதிரிகள் நம் நாட்டு எல்லைக்குள் நுழைந்ததைப்போல் தாக்குதல் நடத்துகிறீர்கள். விவசாயிகளை எதிரிகள் போல் நடத்துவதுதான் மோடி மாடலா?

### வாயாலேயே வடை சுடுவார் மோடி!

அடுத்ததாக ஒன்று கூறினார். வீடு இல்லாதவர்களே இந்தியாவில் இருக்கமாட்டார்கள் என்று கூறினார். அனைவருக்கும் வீடு கட்டிக் கொடுத்து விட்டாரா? இல்லையே. பெயர் மட்டும் பிரதமர் வீடு கட்டும் திட்டம். அதில் 60 விழுக்காடு பணம் மாநில அரசுதான் தர வேண்டும். இப்படி ஸ்டிக்கர் ஒட்டிக் கொள்ள அவமானமாக இல்லையா? இதுனால்தான், வாயாலேயே வடை சுடுவார் மோடி என்று சொல்கிறோம்.

தமிழ்நாட்டிற்குக் கொடுத்த எந்த வாக்குறுதியையாவது மோடி நிறைவேற்றியிருக்கிறாரா? 2014 ஆம் ஆண்டு இராமநாதபுரத்திற்கு வாக்கு கேட்டு வந்த மோடி அவர்கள் என்ன கூறினார்? மிகப்பெரிய புண்ணியத் தலமான இராமேஸ்வரம், சுற்றுலாத் தலமாக மாற்றப்பட்டு, உலகத்தினர் அனைவரும் வந்து செல்ல ஏற்பாடு செய்யப்படும் என்று கூறினார். இராமேஸ்வரத்தை உலகப் புகழ்பெற்ற சுற்றுலாத் தலமாக மாற்றிவிட்டார்களா?

### மோடியின் மனதிற்கும் – தமிழ்நாட்டுக்கும் ரொம்ப தூரம்!

மீண்டும் தனுஷ்கோடிக்கு இரயில் பாதை அமைக்க 2019 மார்ச் மாதம் பிரதமர் மோடி அடிக்கல் நாட்டினாரே? அதன், இன்றைய நிலை என்ன? இராமேஸ்வரம் – தனுஷ்கோடி இடையே 17 கிலோ மீட்டர்தானே தூரம்? ஐந்து ஆண்டுகள் ஆகிவிட்டதே 17 கிலோ மீட்டருக்குப் பாதை அமைக்க முடியாதா? பிரதமர் மோடி அவர்களே இராமேஸ்வரத்திற்கும் தனுஷ்கோடிக்கும் தூரம் இல்லை உங்கள் மனதிற்கும் தமிழ்நாட்டிற்கும்தான் ரொம்ப தூரம்!

இப்படி தமிழ்நாட்டிற்கு எதுவும் செய்யாமல், தமிழ்நாட்டிற்குக் கொடுத்த எந்த வாக்குறுதியையும் நிறைவேற்றாமல், அவர் கொண்டுவரும்

தொடர்ச்சி 4 ஆம் பக்கம்

# எங்கள் வாக்குறுதிகள் நிறைவேற - 'இந்தியா' கூட்டணியை ஆதரிப்பீர் !

## கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை - 3 ஆம் பக்கத் தொடர்ச்சி

திட்டங்களுக்கு நான் தடையாக இருந்தேன் என்று கூறுகிறார். அவர் தமிழ்நாட்டிற்கு எந்தத் திட்டத்தைக் கொண்டு வந்தார்? தமிழ்நாட்டிற்கு என்ன சிறப்புத் திட்டம் கொண்டு வந்தீர்கள் என்று நானும் நாள்தோறும் கேட்டுக் கொண்டே இருக்கிறேன் ஒரே ஒரு சிறப்புத் திட்டத்தைக்கூட பத்தாண்டுகள் பிரதமராக இருந்த மோடியால் கூற முடியவில்லை.

**தி.மு.க. அரசின்**

**திட்டங்களைச் சொல்லட்டுமா?**

ஆனால், நம்முடைய திராவிட மாடல் அரசு பொறுப்பேற்றுக் கொண்ட இந்த மூன்று ஆண்டுகளில் நிறைவேற்றிய திட்டங்களைச் சொல்லட்டுமா?

திராவிட மாடல் அரசு என்பது, தமிழ்நாட்டு மக்களின் அரசு! பெருந்தலைவர் காமராசரின் சிந்தனைகளை உள்வாங்கி நடைபோடும் அரசு! அதன் அடையாளமாகத்தான், பெருந்தலைவர் காமராசர் மாணவர்களுக்கு மதிய உணவு வழங்கியதுபோல், காலையில் பள்ளிக்கு வரும் குழந்தைகள் வெறும் வயிற்றுடன் இருக்கக் கூடாது என்று, காலை உணவுத் திட்டத்தைச் செயல்படுத்திக் கொண்டிருக்கிறோம்.

## ஒரு ஆட்சி நிர்வாகம் ஈவு இரக்கமில்லாமல் எப்படி நடக்கக்கூடாது என்பதற்கு எடுத்துக்காட்டு அ.தி.மு.க. ஆட்சி!

சிறிது நாட்களுக்கு முன்னால், எனக்கு ஒரு அஞ்சல் வந்தது. அதைப் பிரித்துப் பார்த்தால், அதில் 50 கடிதங்களுக்கு மேல் இருந்தன. அனைத்துமே இராமநாதபுரம் மாவட்டம் சாயல்குடியைச் சேர்ந்த பள்ளிக் குழந்தைகள் எனக்கு அனுப்பிய கடிதங்கள். காலை உணவுத் திட்டத்தால் பசியில்லாமல் தெம்பாக, உற்சாகமாகப் படிக்க முடிகிறது என்றும், அரசு உதவி பெறும் பள்ளிகளுக்கும் இந்தத் திட்டத்தை விரிவுபடுத்தியதற்கு நன்றி என்றும் அந்தக் கடிதத்தில் கூறியிருந்தார்கள். முதலில் அரசுப் பள்ளிகளுக்கு மட்டுமே அறிவிக்கப்பட்ட இந்தத் திட்டம், இப்போது அரசு உதவி பெறும் பள்ளிகளுக்கும் விரிவுபடுத்தப்பட்டதால் மேலும் இலட்சக்கணக்கான மாணவர்கள் வயிறாரச் சாப்பிடுகிறார்கள். பணிச் சுமை குறைந்ததால் பெற்றோரும் மனதார வாழ்த்துகிறார்கள்.

அடுத்து, பெண் பிள்ளைகளுக்கு மாதா மாதம் 1000 ரூபாய் வழங்கும் புதுமைப்பெண் திட்டம்!

ஆண் மாணவர்களுக்கும் மாதா மாதம் 1000 ரூபாய் வழங்க இருக்கும் தமிழ்ப் புதல்வன் திட்டம்!

இளைஞர்களுக்கு, திறன்பயிற்சி வழங்கி வேலைவாய்ப்பு பெற்று தரும், நான் முதல்வன் திட்டம்!

**தமிழ்நாட்டு மகளிரெல்லாம்**

**எங்களை மனதார வாழ்த்துகிறார்கள்!**

இப்படி, பள்ளிக் குழந்தைகள் முதல் கல்லூரிக்குச் செல்லும் மாணவர்கள் வரை, போற்றும் பல திட்டங்களை நிறைவேற்றுவதுதான், நம்முடைய திராவிட மாடல் ஆட்சி! கோடிக்கணக்கான குடும்பங்கள் பயனடையும் வகையில், மிகவும் கவனமாகத் திட்டங்களை வகுத்து செயல்படுத்திக் கொண்டிருக்கிறோம்.

அதில் முக்கியமானது, 'கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்'! எங்கள் தாய்வீட்டுச் சீர் மாதிரி, எங்கள் அண்ணன் ஸ்டாலின் ஒவ்வொரு மாதமும் ஆயிரம் ரூபாய் தருகிறார் என்று தமிழ்நாடு முழுவதும் ஒரு கோடியே 15 இலட்சம் சகோதரிகள் மகிழ்ச்சியாக இருக்கிறார்கள்!

சமீபத்தில், திருப்பூரில் ஒரு சகோதரி பேசும் வீடியோவைப் பார்த்தேன்... அதில் சொல்கிறார்கள், டெய்லரிங் சென்றுதான் சம்பாதிக்கிறேன்... என்னுடைய வருமானத்தில் ஆயிரம் ரூபாய் கூடுதலாக கிடைத்த மாதிரி இருக்கிறது என்று மகிழ்ச்சியாகக் கூறினார்... இந்த ஆயிரம் ரூபாய் மளிகை வாங்க, குழந்தைகளுக்கு மருந்து மாத்திரை வாங்க, மாத கடைசியில் சிலிண்டர் வாங்க என்று தங்களின் வாழ்வாதாரத்துக்கு உதவிகரமாக இருப்பதாக மகிழ்ச்சியுடன் பேசினார்கள்!

இன்னும் இருக்கிறது, நாம் ஆட்சிக்கு வந்ததில் இருந்து, தினமும் இலட்சக்கணக்கான மகளிர் சந்தோஷமாக, நாங்கள் ஸ்டாலின் அய்யா பஸ்சில், இலவசமாக பயணம் செய்கிறோம் என்று சொல்லும், 'விடியல் பயணம் திட்டம்'!

வெளியூரில் வேலைக்குச் செல்லும் மகளிர் தங்குவதற்கு, 'தோழி விடுதி' என்று ஏராளமான திட்டங்களை நிறைவேற்றிக் கொண்டு வருகிறோம்.

இந்தத் திட்டங்களால் ஒவ்வொரு குடும்பமும் பயனடைகிறது என்று நெஞ்சை நிமிர்த்திப் பெருமையுடன் கூறுவேன்!

நம்முடைய திராவிட மாடல் அரசின் கொள்கை என்ன? "எல்லார்க்கும் எல்லாம், "அனைத்து மாவட்டங்களுக்கும் சீரான வளர்ச்சி. அதன் அடிப்படையில், கடந்த மாதம் 24ஆம் தேதி தூத்துக்குடி மாவட்டத்திற்கு நான் வந்து, வியட்நாம் நாட்டைச் சேர்ந்த 'வின் ஃபாஸ்ட்' நிறுவனத்தின் தொழிற்சாலைக்காக அடிக்கல் நாட்டியிருக்கிறேன். தூத்துக்குடி சிப்காட்டில் 16 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பீட்டில் தொடங்கப்படவிருக்கும் இந்தத் தொழிற்சாலையால், முதல்கட்டமாக நான்காயிரம் பேருக்கு வேலை கிடைக்கப் போகிறது! தென் மாவட்டங்களின் பொருளாதார வளர்ச்சியில் மிகப்பெரிய பங்களிப்பை அளிக்கப் போகிறது!

## பழனிசாமி அவர்களே, களத்திலே மோதுவோம்! எங்கள் சாதனைகளையும் - உங்கள் துரோகங்களையும் எடைபோட்டு மக்கள் தீர்ப்பளிக்கட்டும்!

இப்படி மக்களுக்கான நலத்திட்டங்களையும் சாதனைகளையும் ஒவ்வொரு நாளும் செய்த அந்த துணிச்சலுடன்தான் இந்த 'முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்' உங்களிடம் வாக்கு கேட்டு வந்திருக்கிறேன். சும்மா அல்ல, தெம்போடு, துணிச்சலோடு நிற்கிறேன். யாரைப் பற்றியும் கவலைப்படாமல் நிற்கிறேன்.

**தங்கை கனிமொழி தயாரித்த –**

**தி.மு.க. தேர்தல் அறிக்கை!**

நம்முடைய இந்தியா கூட்டணி ஆட்சி அமைந்ததும் என்னவெல்லாம் செய்யப் போகிறோம் என்று தேர்தல் அறிக்கையாக வெளியிட்டிருக்கிறோம் அந்த அறிக்கையைத் தயார் செய்வதற்குத் தலைவர் யார் தெரியுமா? உங்கள் எம்.பி.தான். கனிமொழிதான் தலைவராக இருந்து அந்த அறிக்கையைத் தயாரித்துத் தலைமைக்குக் கொடுத்தார். அதில் சிலவற்றை மட்டும் சொல்கிறேன்

**மக்கள் விரோத பா.ஜ.க. அரசால் பத்தாண்டுகளாக உயர்த்தப்பட்ட பெட்ரோல், டீசல், கேஸ் விலை குறைக்கப்படும்!**

**சிறுபான்மையின மக்களுக்கு எதிரான சட்டங்கள் ரத்து.**

**தேசிய நெடுஞ்சாலைகளில் இருக்கும் சுங்கச் சாவடிகள் முற்றிலுமாக அகற்றப்படும்.**

**மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதித் திட்டத்தின் வேலை நாட்கள் 100இல் இருந்து, 150 நாட்களாவும், ஊதியம் 400 ரூபாயாவும் உயர்த்தப்படும்.**

**உலர்மீன் முற்றங்கள் கட்டுதல் போன்ற மீனவர்களுக்குத் தேவையான தொழில் கட்டமைப்புப் பணிகள் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்படும்.**

**பாரம்பரிய மீனவ சமுதாய மக்கள் பழங்குடியினர் பட்டியலில் சேர்க்கப்படுவார்கள்.**

**தேசிய மீனவர் நல ஆணையம் அமைக்கப்படும்.**

**ஆழ்கடல் மீன்பிடிக் கொள்கையை உருவாக்க அமைக்கப்பட்ட, மீனாகுமாரி குழுவின் அறிக்கை கைவிடப்படும்.**

**மீன்பிடித் தடைக் காலங்களில் மீனவர்களுக்கு மாற்றுப் பொருளாதார வேலை வாய்ப்புகளை உருவாக்க, மீனவக் குடும்ப உறுப்பினர்களுக்கு, குறிப்பாக பெண்கள் மற்றும் இளைஞர்களுக்கு, மீன்கள் பதப்படுத்துதல், மீன் வளர்ப்பு, மீன் தீவனம் தயாரித்தல் மற்றும் சந்தைப்படுத்துதல் உள்ளிட்ட பயிற்சிகள் வழங்கப்படும்.**

**மீனவ சமுதாய மக்களை அவசர காலத்தில் பாதுகாக்க 'ஹெலிகாப்டர் தளம்' தேவையான இடங்களில் அமைக்கப்படும்.**

**ஜி.எஸ்.டி. வரிவிதிப்பு முறை சீர்திருத்தப்படும்.**

**குறு, சிறு தொழில் நிறுவனங்களுக்கு எளிய முறையில் உரிமங்கள் கிடைக்க வழி வகை செய்யப்படும்.**

**நாடாளுமன்ற உறுப்பினர்கள் அடங்கிய குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் பேரிடர் நிவாரண நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.**

**அதுமட்டுமல்ல, தூத்துக்குடி விமான நிலையத்தைப் பன்னாட்டு விமான நிலையமாகத் தரம் உயர்த்த முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.**

**முத்துநகர் விரைவு இரயில் சேவை போல, சென்னை செல்ல மேலும் ஒரு இரயில் சேவை ஏற்படுத்தப்படும்.**

## தூத்துக்குடி துப்பாக்கிச் சூடு : பழனிசாமி ஆட்சிக்கு கரும் புள்ளி!

**தூத்துக்குடி வி.எம்.எஸ். நகரில் ஐந்தாவது இரயில்வே கேட் மற்றும் மேம்பாலம் அமைக்கப்படும்.**

**காயல்பட்டினம் மற்றும் மீளவிட்டான் இரயில் நிலையங்கள் மேம்படுத்தப்படும்.**

**தூத்துக்குடியில் உற்பத்தியாகும் பனைப் பொருட்களுக்கு மதிப்பு கூட்டி ஏற்றுமதி செய்ய வழிவகை செய்யப்படும்.**

**இராமநாதபுரம் மாவட்டம் பிரப்பன்வலசை இரயில்வே வழித் தடத்தைக் கடக்க, சாலை மேம்பாலம் அமைக்கப்படும்.**

**தி.மு.க.வைப் பொறுத்தவரைக்கும் "சொல்வதைச் செய்வோம்! செய்வதைத் தான் சொல்வோம்! இதுதான் வரலாறு! இந்த வரலாறு தொடர, வாக்குறுதிகள் நிறைவேற, நீங்கள் அனைவரும் இந்தியா கூட்டணியை ஆதரிக்க வேண்டும்.**

**அப்போதுதான் பா.ஜ.க. எனும் பேரிடரிலிருந்து இந்தியா விடுதலை அடைய முடியும்! பா.ஜ.க.வை ஏன் பேரிடர் என்று சொல்கிறோம்?**

**தூத்துக்குடியில் வெள்ளம் வந்தபோது உதவியவர்கள் –**

**கனிமொழியும் அமைச்சர்களும் அல்லவா!**

நெல்லை – தூத்துக்குடியில் வெள்ளம் வந்ததே! அதற்கு நிவாரணம் கேட்டுக் கோரிக்கை வைத்தோமே! பிரதமர் கொடுத்தாரா? தூத்துக்குடியில் மழை வெள்ளம் ஏற்பட்டதும் இங்கு களத்திலிருந்து மக்களுக்கு உதவியது யார்? தங்கை கனிமொழியும், அமைச்சர் கீதா ஜீவனும், அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணனும்தானே மக்களுடன் மக்களாக இருந்து நிவாரணப் பணிகளைச் செய்தார்கள்.

இவர்கள் மட்டுமா? ஒட்டுமொத்த அமைச்சரவையுமே இங்குதானே இருந்தார்கள் ஓடோடி வந்து உதவி செய்தார்கள்... நானும் உடனடியாக இங்கு வந்து உதவினேன் களத்தில் இருந்தவர்களின் உழைப்பால்தானே இயல்பு நிலை விரைவாக திரும்பியது. தூத்துக்குடி – திருநெல்வேலி மாவட்டத்தில் இருக்கும் அணைக்கட்டுகள், குளங்கள் மற்றும் வாய்கால்களில் ஏற்பட்ட உடைப்புகளைச் சரிசெய்ய 250 கோடி ரூபாய்க்கும் அதிகமான நிதியை ஒதுக்கியிருக்கிறோம்.

பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தூத்துக்குடிக்கு வந்து நிதி உதவியை வழங்கியதும், இந்த முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்தான்! இது எல்லாமே தமிழ்நாடு அரசின் மாநில நிதியிலிருந்து செய்து தரப்படுகிறது. இரண்டு மாபெரும் இயற்கைப் பேரிடரை கடந்த டிசம்பர் மாதம் சந்தித்தோம். இதனால் ஏற்பட்ட பாதிப்புகளைச் சரிசெய்ய 37 ஆயிரம் கோடி ரூபாய் நிதியை கோரினோம். ஒன்றிய அரசிடமிருந்து நிதி வரவில்லை. ஆனால், அதை ஒரு காரணமாக நாங்கள் மக்களிடம் கூறவில்லை. மோடி தரவில்லை என்றால் என்ன? உங்களில் ஒருவனான இந்த முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் தருவேன் என்ற உங்கள் நம்பிக்கையைக் காப்பாற்றினேன்.

வெள்ளம் பாதித்தபோது, டெல்லியில் இருந்து அழைப்பு வந்தது. தொலைபேசியில் என்னிடம் பேசிய பிரதமர் மோடி என்ன கூறினார் தெரியுமா? 'வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்வையிட அமைச்சர் நிர்மலா சீதாராமனை அனுப்பி இருக்கிறேன், அவர் பார்வையிட்ட பிறகு, நிதி ஒதுக்கீடு செய்யப்படும்' என்று கூறினார். ஆனால், நிர்மலா சீதாராமன் வந்துவிட்டு சென்றார். கொடுத்தாரா? கொடுக்காவிட்டாலும் பரவாயில்லை. அங்கு சென்று என்ன சொன்னார்? மக்களுக்கான உதவிகளைப் பிச்சை என்று மனசாட்சியே இல்லாமல் ஆணவத்துடன் கொச்சைப்படுத்தினார்.

**மக்களுக்கு பொய்களை மட்டுமே**

**பரிசாகத் தருபவர் பிரதமர் மோடி!**

பிரதமர் பதவியில் இருப்பவர் கூறினாரே என்று நம்பினேன். வழக்கமாக, மக்களுக்குக் கூறும் பொய்யைத்தான் எனக்கும் பரிசாகக் கொடுத்தார். மக்களால் முதலமைச்சரான என்னிடமே பொய் சொன்னவர்தான் பிரதமர் மோடி! பொய்களை மட்டுமே பரிசாகத் தரும் பிரதமருக்கு, ஏமாற்றத்தைப் பரிசாக தர தயாராகி விட்டீர்களா? தமிழ்நாட்டு வழியில் ஒட்டுமொத்த இந்தியாவும் தயாராகிவிட்டது! மோடிக்கான தோல்விப் பரிசு தூத்துக்குடியிலும், இராமநாதபுரத்திலும் தயாராகிவிட்டதுதானே?

அதற்கு, தூத்துக்குடி நாடாளுமன்றத் தொகுதியின் வெற்றி வேட்பாளர் – என் அன்புத் தங்கை கனிமொழி கருணாநிதி அவர்களுக்கு உதயசூரியன் சின்னத்தில் வாக்களிப்பீர். இராமநாதபுரம் நாடாளுமன்றத் தொகுதியில் இந்திய யூனியன் முஸ்லீம் லீக் வேட்பாளர் சகோதரர் நவாஸ் கனி அவர்களுக்கு ஏணிச் சின்னத்தில் வாக்களிப்பீர்.

**உங்கள் வாக்கு**

**இந்தியாவைக் காக்கட்டும் !**

உங்கள் வாக்கு ஜனநாயகத்தைக் காக்கட்டும்! இந்தியாவின் அரசியல் சட்டத்தைக் காக்கட்டும்! அரசியல் சட்டம் கொடுத்துள்ள சமத்துவம், சகோதரத்துவம், மதச்சார்பின்மை, சமூகநீதி என அனைத்தையும் காக்கட்டும்! மொத்தத்தில் உங்கள் வாக்கு தமிழ்நாட்டைக் காக்கட்டும்! உங்கள் வாக்கு இந்தியாவைக் காக்கட்டும்! பாசிசத்தை வீழ்த்த – இந்தியாவைக் காக்க – உங்கள் ஸ்டாலின் அழைக்கிறேன் நாற்பதும் நமதே! நாடும் நமதே! நாற்பதும் நமதே! நாடும் நமதே!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

---

### தலைமை: க.செல்வராஜ் எம்.எல்.ஏ. - வரவேற்புரை: வழக்கறிஞர் எஸ்.குமார்!

## கோவை நாடாளுமன்றத் தொகுதி - பல்லடம் சட்டமன்றத் தொகுதி கழக செயல்வீரர்கள் கூட்டம்!

### அமைச்சர்கள் சு.முத்துசாமி - மு.பெ.சாமிநாதன் - டி.ஆர்.பி.ராஜா பங்கேற்றனர்!

*கோவை, மார்ச். 28-*

கோவை நாடாளுமன்ற தொகுதிக்குட்பட்ட பல்லடம் சட்டமன்றத் தொகுதி இந்தியா கூட்டணி செயல் வீரர்கள் கூட்டம் மற்றும் வேட்பாளர் அறிமுக கூட்டம் பல்லடம் திருப்பூர் சாலையில் தனியார் மைதானத்தில் திருப்பூர் வடக்கு மாவட்டக் கழக செயலாளர், திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினர் க.செல்வராஜ் தலைமையில் மாவட்ட துணை செயலாளர், பொங்கலூர் ஒன்றியக்குழு பெருந் தலைவர், வழக்கறிஞர் எஸ். குமார் வரவேற்புரையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான 'இந்தியா' கூட்டணி சார்பில் கோவை நாடாளுமன்ற தொகுதி கழக வேட்பாளராக அறிவிக்கப்பட்ட கணபதி ராஜ்குமாரை ஈரோடு தெற்கு மாவட்டக் கழக செயலாளர், வீட்டுவசதித் துறை அமைச்சர் சு.முத்துசாமி, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் மு.பெ.சாமிநாதன், தொழில்துறை அமைச்சர், கழக தகவல் தொழில்நுட்ப அணி செயலாளர் டி.ஆர்.பி.ராஜா ஆகியோர் அறிமுகம் செய்து வைத்தனர்.

அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா பேசியதாவது :

நாடாளுமன்றத் தேர்தல் தமிழகத்தில் சட்டமன்ற தேர்தலில் ஏற்பட்ட விடியல் போல. இந்தியா முழுவதும் ஏற்படுவதற்கான தேர்தல் ஆகும். கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான திராவிட முன்னேற்றக் கழக அரசின் 3 ஆண்டு கால சாதனைகளை சொல்லி நாம் வாக்கு சேகரிக்கும் இந்த நேரத்தில், மத்தியில் கடந்த 10 ஆண்டு காலமாக பா.ஜ.க. ஆட்சியில் இருந்தும் தமிழ்நாட்டிற்கு எந்த திட்டத்தையும் செய்ய முடியவில்லை. அவர்கள் எதை சொல்லி வாக்கு கேட்க முடியும். சாதனை திட்டங்களை சொல்ல முடியாமல் பா.ஜ.க. கூட்டணியினர் திணறி வருகின்றனர். வாக்கு கேட்டு வரும் போது பா.ஜ.க. உள்ளிட்ட கூட்டணி கட்சியினரிடம் தற்போது எந்த திட்டத்தை கொண்டு வரப் போகிறார்கள் என தாய்மார்கள் கேள்வி எழுப்ப வேண்டும். அ.தி.மு.க.வும். பா.ஜ.க.வும் வெவ்வேறல்ல. இருவரும் ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள் ஒரு வருக்கொருவர் விட்டுக் கொடுத்து தமிழகம் முழுவதும் வேட்பாளர்களை அறிவித்திருத்துள்ளனர். அவர்களது கபட நாடகத்தை மக்கள் நம்ப மாட்டார்கள். நடைபெற இருக்கின்ற தேர்தல் சாதாரண தேர்தல் அல்ல தமிழினத்தையும், தமிழர் உரிமைகளையும் அழிக்க வேண்டும் என்ற கொள்கை கொண்ட கூட்டத்தை எதிர்த்து நடைபெறுகின்ற போர். இதில் தமிழ் மக்களை காக்க கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான இந்தியா கூட்டணி களம் இறங்கியுள்ளது. இந்தியா கூட்டணி பாண்டிசேரி உள்பட தமிழகத்தில் 40 இடங்களிலும் மகத்தான வெற்றியை பெற வேண்டும். இதற்காக இந்தியா கூட்டணியினர் அயராது உழைக்க வேண்டும் என்று அமைச்சர் கூறினார்.

அமைச்சர் சு.முத்துசாமி பேசியதாவது:-

கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான திராவிட முன்னேற்றக் கழக அரசின் 3 ஆண்டு சாதனைகளை சொல்லி மக்களிடம் வாக்கு சேகரித்து வருகிறோம். தேர்தல் நேரத்தில் சொன்ன வாக்குறுதிகளில் 99 சதவீதம் நிறைவேற்றியவர் நம் தமிழ்நாடு முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள், அவர் நாடாளுமன்றத் தேர்தலை முன்னிட்டு தேர்தல் அறிக்கையில் பல்வேறு வாக்குறுதிகளை அளித்துள்ளார். அது மக்களை வெகுவாக கவர்ந்துள்ளது. கோவையில் போட்டியிடும் அண்ணாமலை ஏதாவது பேச வேண்டும் என்பதற்காக பேசுகிறார். கழகத்தினர் தேர்தல் விதிமுறைகளை மீறி எந்த செயலையும் செய்யக்கூடாது என கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கண்டிப்புடன் உத்தரவிட்டுள்ளார். அதன்படி தான் கழக தொண்டர்கள் செயல்பட்டு கொண்டுள்ளனர். கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான இந்தியா கூட்டணியின் சார்பில் கழக வேட்பாளராக கோவை நாடாளுமன்றத் தொகுதியில் போட்டியிடும் கணபதி ராஜ்குமார் தமிழகத்திலேயே அதிக வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெறுவார் என அமைச்சர் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் திருப்பூர் தெற்கு மாவட்டக் கழக செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டலத்தலைவர் இல. பத்மநாபன், திருப்பூர் தெற்கு மாநகர கழகச் செயலாளர் டி.கே.டி.மு.நாகராசன், வடக்கு மாநகர கழக செயலாளர், மாநகராட்சி மேயர் ந.தினேஷ்குமார், கோவை நாடாளுமன்ற உறுப்பினர் பி.ஆர்.நடராஜன், மாவட்ட காங்கிரஸ் தலைவர் கோபிநாத், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாவட்டச் செயலாளர் இஷாக், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் மாவட்டச் செயலாளர் முத்துக்கண்ணன், மதிமுக மாவட்ட செயலாளர் புத்தரச்சல் மணி, விடுதலைச் சிறுத்தைகள் கட்சி மாவட்டச் செயலாளர் சண்முகம். கொங்குநாடு மக்கள் தேசிய கட்சி மாவட்டச்செயலாளர் கரைப்புதூர் ராஜேந்திரன், முஸ்லிம் லீக் மாவட்டச் செயலாளர் இப்ராஹீம், திராவிடர் கழகம் மாவட்டச் செயலாளர் ஆறுச்சாமி, மக்கள் நீதி மையம் மாவட்டச் செயலாளர் கமல் ஜீவா, திராவிடர் தமிழர் பேரவை மாவட்டச் செயலாளர் பிரகாஷ், த.மு.மு.க. மாவட்டச் செயலாளர் அபுசாலிக் ஆதிதமிழர் பேரவை மாவட்டச் செயலாளர் தம்புராஜ், ஒன்றிய கழகச் செயலாளர்கள் சு.கிருஷ்ணமூர்த்தி பல்லடம் மேற்கு, ந.சோமசுந்தரம் பல்லடம் கிழக்கு, பொ.அசோகன் பொங்கலூர் மேற்கு, எஸ்.பாலுசாமி பொங்கலூர் கிழக்கு, பி. விஸ்வலிங்கசாமி திருப்பூர் தெற்கு, பல்லடம் நகர கழக செயலாளர் ந.ராஜேந்திர குமார், பகுதி கழக செயலாளர்கள் ஆண்டிபாளையம் பி.முருகசாமி, வீரபாண்டி எஸ்.கோவிந்தராஜ், முத்தணம்பாளையம் கேபிள் எஸ்.எம்.குமார் உள்பட கூட்டணிக் கட்சி நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, வட்டக் கழக, கிளைக் கழக நிர்வாகிகள், கழக துணை அமைப்புகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.



கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆசி பெற்ற, கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வாழ்த்துகளைப் பெற்ற 'இந்தியா' கூட்டணியின் விழுப்புரம் நாடாளுமன்றத் தொகுதி வெற்றி வேட்பாளர் முனைவர் துரை.ரவிக்குமாரை அறிமுகம் செய்யும் கூட்டம் மற்றும் வானூர் சட்டமன்றத் தொகுதி செயல்வீரர்கள் ஆலோசனைக் கூட்டம் உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடியின் தலைமையில் நடைபெற்றது. மாவட்டச் செயலாளர் ந.புகழேந்தி எம்.எல்.ஏ. வரவேற்புரையாற்றினார். மாநில விளையாட்டு மேம்பாட்டு அணி துணைச் செயலாளர் டாக்டர்.பொன்.கௌதமசிகாமணி எம்.பி., மாநில மருத்துவர் அணி இணைச் செயலாளர் டாக்டர். இரா.இலட்சுமணன் எம்.எல்.ஏ., மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் ம.ஜெயச்சந்திரன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் செ.புஷ்பராஜ், சட்டமன்ற உறுப்பினர் சிந்தனைச் செல்வன், காங்கிரஸ் குலாம் மொய்தீன், வி.சி.க. மாநில துணை பொதுச் செயலாளர் வன்னியரசு, மாவட்ட துணைச் செயலாளர்கள் தயா. இளந்திரையன், ஒன்றியச் செயலாளர்கள் பி.கே.டி. முரளி, கிளியனூர் இராஜி, மைதிலி இராஜேந்திரன், வே.கணேசன், கு.செல்வமணி, வி. ஜி.பிரபாகரன், ஒன்றிய குழுத் தலைவர்கள் உஷா. பி.கே.டி.முரளி, ஆர்.எஸ்.வாசன், நகரச் செயலாளர் எஸ்.எஸ். ஜெயமூர்த்தி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.





## விருதுநகர் – தென்காசி தொகுதிகளைச் சேர்ந்த

# பல்வேறு சங்க நிர்வாகிகள் – முன்னணியினர் ஆதரவு!

## கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலினை நேரில் சந்தித்து தெரிவித்தனர்!

**விருதுநகர், மார்ச் 28 -**

**நாடாளுமன்றத் தேர்தல் 2024 விருதுநகர், தென்காசி ஆகிய தொகுதிகளில் 'இந்தியா' கூட்டணி வேட்பாளர்களுக்கு ஆதரவாக பிரச்சாரம் செய்திட சென்றுள்ள முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களை விருதுநகர் மற்றும் தென்காசி தொகுதிகளைச் சேர்ந்த முக்கிய மானவர்கள் நேரில் சந்தித்து 'இந்தியா' கூட்டணிக்கு ஆதரவு தெரிவித்தனர்.**

இது பற்றிய விபரம் வருமாறு:

நடைபெற உள்ள நாடாளுமன்றத் தேர்தலில் 'இந்தியா' கூட்டணி சார்பில் விருதுநகர், தென்காசி ஆகிய தொகுதிகளில் போட்டியிடும் வேட்பாளர்களை ஆதரித்து பிரச்சாரம் செய்திட சென்றுள்ள முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களை நேற்று (27.3.2024) காலை, விருதுநகரில், பல்வேறு சங்க நிர்வாகிகள் மற்றும் முக்கியமானவர்கள் நேரில் சந்தித்து, 'இந்தியா' கூட்டணிக்கு ஆதரவு தெரிவித்தனர்.

முதலமைச்சர் கழகத் தலைவர்அவர்களை நேற்று (27.03.2024) விருது நகரில் சந்தித்த முக்கிய பிரமுகர்கள் வருமாறு:





**விருதுநகர் மாவட்டம்**

சிவகாசி பட்டாசு உற்பத்தியாளர் சங்கத்தினர் மற்றும் தொழிலதிபர்கள் 12 பேர் சந்தித்து அரசு செய்து வரும் உதவிகளுக்கு நன்றி தெரிவித்து ஆதரவு தெரிவித்தனர்.

விருதுநகர் மாவட்டத்தைச் சேர்ந்த தென்னிந்திய உலோக கொள்கலன் உற்பத்தியாளர்கள் சங்கத்தைச் சேர்ந்த சண்முகசுந்தரம்,

பருப்பு உற்பத்தியாளர்கள் சங்கத்தைச் சேர்ந்த செந்தில் மற்றும் விவேகானந்தம்,

தனியா உற்பத்தியாளர் வணிக சங்கத்தைச்சேர்ந்த V.S.R.ராதாகிருஷ்ணன் மற்றும் சௌந்தரபாண்டியன்,

விருதுநகர் வர்த்தக சபையைச் சேர்ந்த பவளம் சத்யமூர்த்தி,

மிளகாய் வர்த்தக சபையைச் சேர்ந்த ஆனந்த்.

**தென்காசி மாவட்டம்**

தென்காசி மாவட்ட வணிக சங்கத்தைச் சேர்ந்த வைகுண்டராஜா,

செங்குந்த முதலியார் சங்கத்தைச் சேர்ந்த சங்கர சுப்பிரமணியன்,

ஜவுளி உற்பத்தியாளர் சங்கத் தலைவர் சுப்பிரமணியன்,

யாதவர் சங்கத் தலைவர் குருசாமி அவர்களின் மனைவி திருமதி வேலம்மாள்,

புளியங்குடி பள்ளிவாசல் ஜமாத் கமிட்டித் தலைவர் மௌலூல் கவுமி.

மேலும், விருதுநகர், தென்காசி மாவட்டங்களைச் சேர்ந்த பல்வேறு அமைப்புகளைச் சேர்ந்தவர்கள் ஆதரவு தெரிவித்தனர்.

இந்நிகழ்வின்போது மாவட்டச் செயலாளர்கள் அமைச்சர்கள் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன், தங்கம் தென்னரசு, தென்காசி வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் ஈ.ராஜா, எம்.எல்.ஏ., 'இந்தியா' கூட்டணியின் தென்காசி தொகுதி வேட்பாளர் டாக்டர் ராணி ஸ்ரீகுமார். விருதுநகர் தொகுதி வேட்பாளர் மாணிக்தாகூர் ஆகியோர் உடனிருந்தனர்.

---

### ஜனநாயகத்தை மீட்டு இந்தியாவை காப்பாற்ற – மோடியை வீட்டுக்கு அனுப்ப

# இந்த நாடாளுமன்றத் தேர்தலே கடைசி வாய்ப்பு!

## தொழிலாளர்கள் வீடு வீடாகச் சென்று வாக்குச் சேகரிப்பீர்!

## தமிழ்நாடு விவசாயிகள் – தொழிலாளர்கள் கட்சித் தலைவர் பொன்குமார் அறிக்கை!

சென்னை, மார்ச் 28 -

ஜனநாயகத்தை மீட்டு இந்தியாவை காக்க இந்த நாடாளுமன்ற தேர்தலே கடைசி வாய்ப்பு! மீண்டும் மோடி வந்தால் நல வாரியங்கள் முடக்கப்படும். எனவே திண்ணைப் பிரச்சாரம் மூலம் தொழிலாளர்களின் வாக்குகளை சேகரிப்பீர் என விவசாயிகள் தொழிலாளர்கள் கட்சியினருக்கு தலைவர் பொன்குமார் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அவரது வேண்டுகோள் வருமாறு:

நடைபெற உள்ள நாடாளுமன்றத் தேர்தல் என்பது ஜனநாயகத்தை மீட்டு இந்தியாவை காப்பாற்றுவதற்கான கடைசி வாய்ப்பாகும். இதனை இந்திய வாக்காளர்கள் ஒவ்வொருவரும் மனதில் கொண்டு வாக்களித்திட வேண்டும். மாநில உரிமைகள் பறிக்கப்படுதல், ஆளுநர்கள் மூலம் மாற்று கட்சி ஆட்சிகளை அடக்கி, ஆள நினைப்பது, ஜி.எஸ்.டி. மூலம் சுரண்டப்பட்ட நிதியில் உரிய பங்கை மாநிலங்களுக்கு வழங்காத கொடூரம் இப்படி ஒரு மோசமான ஒன்றிய அரசை இதுவரை இந்தியா கண்டதில்லை. ஆகவே மோடி அரசு அகற்றப்பட்ட வேண்டும்.

தமிழ்நாட்டில் திராவிட மாடல் ஆட்சியின் முதல்வர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் இந்தியாவே பின்பற்றக் கூடிய அளவிற்கு முற்போக்கானத் திட்டங்களையும், சமூக நீதி செயல்பாடுகளையும் மேற்



கொண்டு வருகிறார். அதனுடைய விளை வாகத்தான் இந்தியாவிலேயே சிறந்த முதலமைச்சராக அதிக மதிப்பெண்கள் பெற்று முதல் நிலையை அடைந்துள்ளார்.

தமிழ்நாட்டில் மட்டும் தான் தொழிலாளர் துறையின் கீழ் கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியம் உள்ளிட்ட 18 வாரியங்கள் செயல்படுகின்றன. கடந்த பத்தாண்டு கால அ.தி.மு.க. ஆட்சியில் முடங்கி கிடந்த நல வாரியங்கள் தற்போது திராவிட மாடல் ஆட்சியில் நல வாரியங்கள் முழு வீச்சில் செயல்படுகின்றன. அனைத்து நலத்திட்ட உதவிகளும் இரட்டிப்பாக உயர்த்தப் பட்டுள்ளன.

கட்டுமானத் தொழிலாளர்கள் வீடு கட்டிக் கொள்ள 4 லட்ச ரூபாய் இலவசமாக வழங்கப்படுகிறது. நிரந்தரமாக குணப்படுத்த முடியாத நோயாளிகளுக்கு மாதம் 1000 ரூபாய் வழங்கும் திட்டம் அறிவிக்கப்பட்டுள்ளது. மருத்துவக் கல்லூரி, ஐ.ஐ.டி., ஐ.ஐ.எம். போன்ற கல்லூரியில் படிக்கும் தொழிலாளர்களின் பிள்ளைகளுக்கு கல்வி கட்டணம், விடுதி கட்டணம் அனைத்தையும் வாரியம் ஏற்றுக் கொள்கிறது. இப்படி பல்வேறு புதியத் திட்டங்கள் முதலமைச்சரால் அறிவிக்கப்பட்டு, வாரியங்கள் சிறப்பாக செயல்பட்டு வருகின்றன.

அனைத்திலும் மாநில உரிமைகளை நசுக்குவதைப் போல மாநில அளவில் செயல்படக்கூடிய வாரியங்களை ஒன்றிய அளவில் கொண்டு செல்ல மோடி அரசு முயன்று வருகிறது. ஏற்கனவே தொழிலாளர்களுக்கு ஆதரவாக ஆங்கிலேயன் காலத்தில் போடப்பட்ட சட்டங்களை எல்லாம் கார்ப்ரேட் நிறுவனங்களுக்கு ஆதரவாக மாற்றி, சுருக்கி சட்டங்களை நான்கு கோடுகளாக ஆக்கிவிட்டனர். மீண்டும் மோடி பிரதமராக வந்தால் வாரியங்கள் அனைத்தும் முடக்கப் பட்டு விடும்.

எனவே தமிழ்நாடு முழுவதும் கோடிக்கணக்கில் உள்ள கட்டுமானத் தொழிலாளர்கள், ஆட்டோ ஓட்டுபவர்கள், வீட்டுப் பணியாளர்கள், தையல் தொழிலாளர்கள், சலவை தொழிலாளர்கள், சவரத் தொழிலாளர் போன்ற அமைப்புசாராத் தொழிலாளர்கள் ஒவ்வொருவரும் எண்ணிப் பார்த்து இந்த தேர்தலில் தங்களுடைய வாக்குகள் தளபதி மு.க.ஸ்டாலின் தலைமையிலான திமுக அணிக்கே என்பதை உறுதிப்படுத்த வேண்டும்.

விவசாயிகள் தொழிலாளர்கள் கட்சியைச் சேர்ந்தவர்கள் கிராமம் கிராமமாக சென்று தொழிலாளிகளின் வீடுகளுக்கு நேரடியாக சென்று வாரியத்தின் பயன்களும், மீண்டும் மோடி அரசு வந்தால் வாரியம் முடக்க ப்பட்டு விடக் கூடிய அபாயத்தையும் விளக்கி சொல்லி அவர்களை தி.மு.க. அணிக்கு வாக்களிக்க செய்திட திண்ணைப் பிரச்சாரத்தை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். நான் அனைத்து மாவட்டங்களுக்கும் திமுக அணிக்கு வாக்கு சேகரிக்க, பிரச்சாரம் மேற்கொள்ள வர இருக்கிறேன்.

இவ்வாறு பொன்குமார் வேண்டுகோள் விடு த்துள்ளார்.

---

### ஈ.ராஜா எம்.எல்.ஏ. – வே.ஜெயபாலன் முன்னிலையில்

# தென்காசி தொகுதி வேட்பாளர் ராணி ஸ்ரீ குமார் வேட்பு மனு தாக்கல்!

தென்காசி, மார்ச் 28 -

தென்காசி நாடாளுமன்றத் தொகுதி 'இந்தியா' கூட்டணி கழக வெற்றி வேட்பாளர் மருத்துவர் ராணி ஸ்ரீகுமார் தென்காசி வடக்கு மாவட்டச் செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ. தென்காசி தெற்கு மாவட்ட பொறுப்பாளர் வே.ஜெயபாலன் தென்காசி சட்டமன்ற உறுப்பினர் பழனி நாடார் நகர செயலாளர் சாதிர் ஆகியோர் முன்னிலையில் மாவட்ட தேர்தல் அலுவலர்மாவட்ட ஆட்சியர் கமல் கிஷோரிடம் வேட்பு மனு தாக்கல் செய்தார்.

தென்காசி நாடாளுமன்றத் தொகுதி கழக வெற்றி வேட்பாளர் மருத்துவர் ராணி ஸ்ரீகுமார் வேட்பு மனு தாக்கல் செய்துவிட்டு செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது.

முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்கள் என்னை தென்காசி நாடாளுமன்ற தொகுதிக்கு வேட்பாளராக அறிவித்துள்ளார்கள் அவர்களுக்கு என்முதல் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். கழக ஆட்சியில் மக்கள் அனைவரும் மகிழ்ச்சியாகவும்,எழுச்சியாகவும் உள்ளனர்.முதலமைச்சர் அவர்கள் பல்வேறு நலத்திட்டங்களை அறிவித்து அதனை நடைமுறைப் படுத்தி உள்ளது தான் காரணமாகும்.

முத்தமிழ் அறிஞர் கலைஞர் கண்ட வெற்றி சின்னமான உதயசூரியன் சின்னம் தென்காசி நாடாளுமன்றத் தொகுதியில் அமோக வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெறும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

எல்லோருக்கும் எல்லாம் அதுதான் "திராவிட மாடல்" ஆட்சி.தமிழகத்தில் இந்தியா கூட்டணி 40 தொகுதி

களிலும் வெற்றி பெறும். நாடும் நமதே 40 ம் நமதே.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

பின்னர் கழக வெற்றி வேட்பாளர் ராணி ஸ்ரீ குமாரை மாவட்ட அவைத் தலைவர் சுந்தர மகாலிங்கம் இந்தியா கூட்டணி நிர்வாகிகள் சி.பி.எம் மாவட்டச் செயலாளர் முத்துப்பாண்டியன், சி.பி.ஐ மாவட்ட செயலாளர் இசக்கிதுரை, ம.தி.மு.க ராம உதயசூரியன், வி.சி.க.செல்வம், ஜான் தாமஸ், லிங்கவளவன், தமிழ் புலிகள் சந்திரசேகர், முஸ்லிம் லீக் அப்துல் அஜீஸ், செய்யது பட்டாணி, முகமது அலி, த.மு.மு.க.யாக்கூப் ம.ம.க. சலீம், ஆதித்தமிழர் பேரவை கலிவரதன்,திதக. கருவீரபாண்டியன், மகாலிங்கம், ம.நீ.ம.அய்யாசாமி, ம.ஜ.க.அஸ்மிர்,கழக மாவட்டத் துணைச் செயலாளர்கள் கனிமொழி, கென்னடி, பொருளாளர் ஷெரிப்,

தலைமை செயற்குழு உறுப்பினர்கள் செல்லதுரை, முத்துப்பாண்டி, ஷேக் தாவுது, ஆறுமுகசாமி, பொது குழு உறுப்பினர்கள் ரஹீம், ராஜேஸ்வரன், சாமிதுரை, தமிழ் செல்வி, அருள், தொகுதி பார்வையாளர்கள் ஆவின் ஆறுமுகம், இன்பா ஏ.என். ரகு,

அரசு வழக்கறிஞர்கள் வேலுச்சாமி, முருகன், பிச்சையா, கண்ணன், ஒன்றிய செயலாளர்கள் அழகு சுந்தரம், ரவிசங்கர், சீனித்துரை, வல்லம்திவான்ஒலி, ஜெயக்குமார், சுரேஷ், மகேஷ் மாயவன், அன்பழகன் லாலா சங்கர பாண்டியன், பெரிய துரை, பூசைத்துரை, நகரச் செயலாளர்கள் வெங்கடேசன், அப்பாஸ், கணேசன், பிரகாஷ் அந்தோணிசாமி, பேரூர் கழக செயலாளர் குட்டி என்ற சங்கர், சுடலை, முத்தையா, பண்டாரம், முத்து, ராஜராஜன், வெள்ளத்துரை, உசேன், சிதம்ப ரம், கோபால், முன்னாள் ஒன்றியச் செயலாளர் ராமையா தென்காசி ஒன்றிய குழுத் தலைவர் ஷேக் அப்துல்லா, கடையநல்லூர் நகர்மன்ற தலைவர் மூப்பன் ஹபீபுர் ரகுமான், மாவட்ட அணி அமைப்பாளர் இளைஞர் அணி கிருஷ்ணராஜா, வழக்கறிஞர் அணி தங்கராஜ் பாண்டியன், விவசாய அணி முருகன், கோமதிநாயகம், இஞ்சி இஸ்மாயில், சுப்பையா, வீராணம் சேக்முகமது, டாக்டர் செண்பகவிநாயகம் உட்பட கழக நிர்வாகிகள், கூட்டணிக் கட்சி நிர்வாகிகள் திரளாக கலந்து கொண்டு வரவேற்றனர்.

---



திருவாரூர் மாவட்டச் செயலாளர் பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ. தலைமையில், தொகுதி பொறுப்பாளர் துரை கி.சரவணன் முன்னிலையில், தஞ்சை நாடாளுமன்றத் தொகுதி கழக வேட்பாளர் முரசொலி, 'இந்தியா' கூட்டணியின் மன்னார்குடி சட்டமன்றத் தொகுதி நிர்வாகிகளுடன் கலந்துரையாடினார். உடன் மாநில தணிக்கைக் குழு உறுப்பினர் பி.ராஜமாணிக்கம், மாவட்ட ஊராட்சி தலைவர் தலையாமங்கலம் ஜி.பாலு, தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஞானசேகரன், நகர செயலாளர் வீரா .கணேசன் ஒன்றிய செயலாளர்கள் டி.எஸ்.டி.முத்துவேல், சித்தேறி சிவா, கே.வி.கே.ஆனந்த், நா.கவியரசு, கே.வி.கே.ஆனந்த், மன்னார்குடி சட்டமன்ற தொகுதி கழக நிர்வாகிகள் மற்றும் இந்தியா கூட்டணியின் தோழமைக் கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## கழக வேட்பாளர் சி.என். அண்ணாதுரையை ஆதரித்து

# திருவண்ணாமலையில் மக்களிடையே அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிரச்சாரம்!






தாம்பரம் மாநகர தி.மு.கழகம் சார்பில் மேற்கு தாம்பரம், காமராஜ் தெருவில் அமைக்கப்பட்டுள்ள 'இந்தியா' கூட்டணியின் தலைமை தேர்தல் பணிமனையை திருப்பெரும்புதூர் கழக வெற்றி வேட்பாளர் டி.ஆர்.பாலு, அமைச்சரும், காஞ்சி வடக்கு மாவட்ட கழகச் செயலாளருமான தா.மோ.அன்பரசன் ஆகியோர் திறந்து வைத்தனர். உடன் தாம்பரம் மாநகர செயலாளர் சட்ட மன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ., பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி, தொகுதி பொறுப்பாளர் மருது கணேஷ், மேயர்.க,வசந்தகுமாரி மண்டல குழு தலைவர்கள், பகுதி கழக செயலாளர்கள் டி,காமராஜ், எஸ்.இந்திரன், மாநகர கழக நிர்வாகிகள், கூட்டணி கட்சி தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள், பகுதி நிர்வாகிகள், வட்ட செயலாளர்கள், வட்ட நிர்வாகிகள், மாநகர அணிகளின் அமைப்பாளர்கள் (து) அமைப்பாளர்கள், கழகத் தோழர்கள் கலந்து கொண்டனர்.



அரியலூர் மாவட்டம் சிதம்பரம் நாடாளுமன்றத் தொகுதி திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமையிலான 'இந்தியா' கூட்டணி கட்சியின் சார்பில் போட்டியிடும் வேட்பாளர், விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் எழுச்சி தமிழர் தொல்.திருமாவளவன் அவர்கள் அறிமுகம் மற்றும் மாவட்ட செயல்வீரர்கள் கூட்டம் அரியலூர் அன்னலட்சுமி திருமண மண்டபத்தில் மாவட்ட கழக செயலாளர், தமிழ்நாடு அரசு போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் தலைமையில் நடைபெற்றது. உடன் கழக சட்டத்திட்ட திருத்தக்குழு இணை செயலாளர் சுபா.சந்திரசேகர், பெரம்பலூர் மாவட்டப் பொறுப்பாளர் ஜெகதீசன், அரியலூர் சட்டமன்ற உறுப்பினர் கு.சின்னப்பா, செயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க.கண்ணன், காட்டுமன்னார்கோயில் சட்டமன்ற உறுப்பினர் சிந்தனைச்செல்வன், முன்னாள் மாவட்ட செயலாளர் குன்னம் சி.இராஜேந்திரன், கழக கொள்கைப் பரப்பு துணை செயலாளர் ச.அ.பெருநற்கிள்ளி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் எம்.பி.பாலசுப்ரமணியன் மற்றும் மாநில,மாவட்ட, ஒன்றிய,நகர, பேரூர்கழக நிர்வாகிகள், தோழமைக் கட்சியினர், கழக தோழர்கள் பலரும் கலந்துகொண்டனர்.



தருமபுரி நாடாளுமன்றத் தொகுதி 'இந்தியா' கூட்டணியின் கழக வேட்பாளர் வழக்கறிஞர் ஆ.மணி அறிமுக மற்றும் ஆலோசனை கூட்டம் அரூர் சட்டமன்ற தொகுதியில் வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தலைமையில் என்.என். மண்டபத்தில் நடைபெற்றது. உடன் மேற்கு மாவட்ட கழக செயலாளர் முனைவர்.பி.பழனியப்பன், அவைத்தலைவர் கே.மனோகரன், ஐ.டி. விங் கு.தமிழழகன், ஆதம், மற்றும் மாநில, மாவட்ட, ஒன்றிய, பேரூர் கழகத்தினர், சார்பு அமைப்பு நிர்வாகிகள், கிளை கழக செயலாளர்கள், BLA2, BLC, கூட்டணி கட்சி நிர்வாகிகள் உள்ளிட்ட ஏராளமான பொது மக்கள் கலந்து கொண்டனர்.




கோவை நாடாளுமன்றத் தொகுதிக்குட்பட்ட கவுண்டம் பாளையம் தொகுதியில் பெரியநாயக்கன்பாளையம் கிழக்கு ஒன்றியத்தில் நடந்த கழக செயல்வீரர்கள் ஆலோசனை கூட்டத்தில் தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா கலந்து கொண்டு தேர்தல் பணிகள் குறித்து ஆலோசனை வழங்கினார். உடன் கோவை வடக்கு மாவட்டக் கழக செயலாளர் தொ.அ.ரவி, கழக மாநில மாணவர் அணி தலைவர் வழக்கறிஞர் ராஜீவ்காந்தி, வடக்கு மாவட்ட துணைச்செயலாளர் அசோக்பாபு, ஆறுக்குட்டி, வடக்கு மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் தளபதி தியாகு மற்றும் டி.பி.சுப்பிரமணியன், ஒன்றிய செயலாளர் கிருஷ்ணக்குமார் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை கேட்க எட்டயபுரத்தில்

# கண்ணுக்கெட்டிய தூரம் வரை லட்சோப லட்சம் மக்கள் திரண்டிருந்த காட்சி!











கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (26.3.2024) தூத்துக்குடி மாவட்டம், எட்டயபுரத்தில் நடைபெற்ற இந்தியா கூட்டணியின் மக்களவைத் தேர்தல் பிரச்சார பொதுக் கூட்டத்தில் தூத்துக்குடி தொகுதி வேட்பாளர் கனிமொழி கருணாநிதி மற்றும் இராமநாதபுரம் தொகுதி வேட்பாளர் நவாஸ்கனி ஆகியோருக்கு வாக்களிக்குமாறு கேட்டுக் கொண்டு உரையாற்றினார். இக்கூட்டத்தில், அமைச்சர் பெருமக்கள் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன், தங்கம் தென்னரசு, எஸ்.ரகுபதி, திருமதி.கீதா ஜீவன், ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன், அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன், இராமநாதபுரம் மாவட்ட கழகச் செயலாளரும், சட்டமன்ற உறுப்பினருமான காதர்பாட்சா முத்துராமலிங்கம், சட்டமன்ற உறுப்பினர்கள் மார்க்கண்டேயன், முருகேசன், கருமாணிக்கம், அமிர்தராஜ், சண்முகய்யா, சமத்துவ மக்கள் கழகத் தலைவர் எர்ணாவூர் நாராயணன், முக்குலத்தோர் புலிப்படை கட்சித் தலைவர் கருணாஸ், மக்கள் விடுதலைக் கட்சித் தலைவர் முருகவேல் ராஜன், அகில இந்திய பார்வர்டு பிளாக் கட்சித் தலைவர் சுரேஷ் மற்றும் இந்தியா கூட்டணி கட்சி நிர்வாகிகள் உடன் உள்ளனர்.



‘இந்தியா’ கூட்டணி சார்பில், சிதம்பரம் நாடாளுமன்றத் தொகுதியில், வி.சி.க. சார்பில் போட்டியிடும் அதன் தலைவர் தொல். திருமாவளவன் அறிமுக கூட்டம் மற்றும் சிதம்பரம் , புவனகிரி,காட்டுமன்னார்கோவில் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட செயல்வீரர்கள் கூட்டம் வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தலைமையில் நடைபெற்றது. போக்குவரத்துத்துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர், தொழிலாளர் நலன் திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர் சி.வெ.கணேசன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். சட்டமன்ற உறுப்பினர்கள் சபா.இராசேந்திரன், கோ.ஐயப்பன், தி.வேல்முருகன், சிந்தனைச்செல்வன் உள்ளிட்ட ‘இந்தியா’ கூட்டணிக் கட்சிகளின் நிர்வாகிகள் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



கடலூர் நாடாளுமன்றத் தொகுதியில் ‘இந்தியா’ கூட்டணி கட்சி சார்பில் போட்டியிடும், காங்கிரஸ் கட்சி வேட்பாளர் கி.விஷ்ணுபிரசாத், கடலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், தேர்தல் நடத்தும் அலுவலர் அ.அருண்தம்புராஜிடம் வேட்புமனு தாக்கல் செய்தார். அமைச்சர்கள் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், சி.வெ.கணேசன், முன்னாள் தமிழக காங்கிரஸ் கட்சி தலைவர் கே.எஸ்.அழகிரி, காட்டுமன்னார்கோயில் சட்டமன்ற உறுப்பினர் ம.செ.சிந்தனைச்செல்வன் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

### கிருஷ்ணகிரி நாடாளுமன்றத் தொகுதி காங்கிரஸ் வேட்பாளர் அறிமுகக் கூட்டம்!

# வேட்பாளர் கே.கோபிநாத்தை 3 லட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெறச் செய்வீர்!

## அமைச்சர் அர.சக்கரபாணி சிறப்புரை! தே.மதியழகன் – ஒய்.பிரகாஷ் தலைமை!

கிருஷ்ணகிரி, மார்ச் 28 - கிருஷ்ணகிரி நாடளு மன்றத் தொகுதி காங்கிரஸ் வேட்பாளர் அறிமுக கூட்டம். கிருஷ்ணகிரி ஒசூரில் நடைபெற்றது. இதில் இந்திய கூட்டணி கட்சி வேட்பாளர் மூன்று லட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெறச் செய்ய அனைவரும் கடுமையாக உழைத்து வாக்கு சேகரிப்பில் ஈடுபட வேண்டும் என அமைச்சர் அர.சக்கரபாணி சிறப்புரையாற்றினார். கிருஷ்ணகிரியில் தே.மதியழகன் எம்.எல்.ஏ. தலைமையும் ஒசூரில் ஒய்.பிரகாஷ் எம்.எல்.ஏ. தலைமையும் வகித்தனர்.

இந்தியா கூட்டணி சார்பாக இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் கிருஷ்ணகிரி நாடாளுமன்ற தொகுதி வேட்பாளர் கே. கோபிநாத்தை அறிமுகப்படுத்துகிற கூட்டம் கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பாக கிருஷ்ணகிரியில் நடைபெறறது. இந்த கூட்டம் தமிழக உணவு மற்றும் உணவு பொருள் வழங்கல் துறை அமைச்சரும், கிருஷ்ணகிரி மாவட்ட பொறுப்பு அமைச்சருமான அர.சக்கரபாணி கலந்து கொண்டு சிறப்புறை ஆற்றினார்.

இக்கூட்டத்தில் நாடாளுமன்ற தொகுதி பொறுப்பாளர், நாமக்கல் முன்னாள் மாவட்ட செயலாளர் வழக்கறிஞர் பார். இளங்கோவன் முன்னிலை வகித்தார்.

இந்தக் கூட்டத்தில் அமைச்சர் அவர்கள் கூட்டத்தில் பேசும்போது

தமிழகத்தில் கழக தலைவர் தமிழக முதல்வர் தளபதியார் அவர்கள் தலைமையில் நடைபெற்று வரும் திராவிட மாடல் அரசின் சாதனைகளை மக்களிடம் எடுத்துக் கூற வேண்டும்.

இந்திய கூட்டணி நிர்வாகிகள், தோழர்கள் அனைவரும் முழு அளவில் தேர்தல் பணியாற்ற வேண்டும். கிருஷ்ணகிரி நாடாளுமன்ற தொகுதியில் இந்திய கூட்டணி காங்கிரஸ் கட்சி வேட்பாளர் கோபிநாத் அவர்கள் மூன்று லட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெறச் செய்ய அனைவரையும் கடுமையாக பாடுபட்டு வாக்கு சேகரிப்பில் ஈடுபட வேண்டும் என பேசினார்.

பின்பு கிருஷ்ணகிரியில் அமைக்கப்பட்டுள்ள தேர்தல் அலுவலகத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார். இதே போல ஒசூர் ஆனந்த் கிராண்ட் பேலஸில் நடந்த வேட்பாளர் அறிமுக கூட்டத்திற்கு மேற்கு மாவட்ட செயலாளர சட்டமன்ற உறுப்பினருமான பிரகாஷ் தலைமை வகித்தார். ஒசூர் மேயர் சத்யா வரவேற்புரை ஆற்றினார்.

கூட்டத்தில் அமைச்சர் அவர்கள் காங்கிரஸ் வேட்பாளரை அறிமுகப்படுத்தி சிறப்புரை ஆற்றினார்.

இந்த கூட்டத்தில் மாநில அமைப்புசாரா ஓட்டுனர் அணி செயலாளர் டி.செங்குட்டுவன், மாநில சொத்து பாதுகாப்பு குழு உறுப்பினர் சுகவனம், மாநில தீர்மானக்குழு உறுப்பினர் வெற்றிச்செல்வன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் முருகன், மாவட்ட அவைத் தலைவர்கள் நாகராஜ் , யுவராஜ், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் இன்பசேகரன் ஒசூர் தொகுதி பொறுப்பாளர் ரமேஷ்

மாநில இளைஞர் அணி துணை செயலாளர் சீனிவாசன், மாநில விவசாய துணை செயலாளர்கள் டேம்.வெங்கடேசன் , அரியப்பன் மாவட்ட துணை செயலாளர்கள் கோவிந்தசாமி , சாவித்திரி கடலரசு மூர்த்தி, சந்திரன் , பொருளாளர்கள் கதிரவன் , சுகுமாரன் , தலைமை செயற்குழு உறுப்பினர்கள் பரிதா நவாப் , செந்தில், கிருபாகரன் பொதுக்குழு உறுப்பினர்கள் பாலன் , அஸ்லாம் , நாகராசன், கோதண்டன்,சித்ரா சந்திரசேகர் , கிருஷ்ணகிரி நகர கழக செயலாளர் நவாப் ,ஒன்றிய செயலாளர்கள் கோவிந்தன் தனசேகரன், மகேந்திரன்,தேங்காய் சுப்பிரமணி , சாந்தமூர்த்தி ,அறிஞர், ராஜேந்திரன் , நரசிம்மன் , குண.வசந்தரசு , எக்கூர் செல்வம் ரஜினி செல்வம் , குமரேசன், பேரூர் கழக செயலாளர்கள் பாபு , தம்பிதுரை ,வெங்கடப்பன் மற்றும் கழக பிரமுகர்கள் அன்பரசன், கே.வி.எஸ் சீனிவாசன் , மாவட்ட ,ஒன்றிய , நகர அணிகளின் அமைப்பாளர்கள் , தலைவர்கள் துணைத் தலைவர்கள் ,துணை அமைப்பாளர்கள் , உள்ளாட்சி பிரதிநிதிகள் வட்டக் கழக , வார்டு கழக நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



தருமபுரி நாடாளுமன்றத் தொகுதி ‘இந்தியா’ கூட்டணியின் கழக வேட்பாளர் வழக்கறிஞர் ஆ.மணி, தருமபுரி கிழக்கு மாவட்டக் கழக செயலாளர் தடங்கம் பெ.சுப்ரமணி தலைமையில் ஏரியூர் ஒன்றிய கழக செயலாளர் ஏரியூர் என்.செல்வராஜ் முன்னிலையில் பென்னாகரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட ஏரியூர் ஒன்றிய கழக நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்பு தலைவர்கள், சார்பு அமைப்பு நிர்வாகிகள், கிளைகழக செயலாளர்கள், BLA2, BLC நிர்வாகிகளை சந்தித்தார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### அஞ்சாநெஞ்சன் பட்டுக்கோட்டை அழகிரி

### மார்ச் 28 (1949)



“சுயமரியாதை இயக்கத்தின் சுடர்! தன்மதிப்பு இயக்கத்தின் தனிப்பெரும் தளபதி! மூடப்பழக்க வழக்கங்களை முறியடிக்கும் தலைவன்! வைதீகத்தின் வைரி! வருணாசிரமத்தின் விரோதி! சீர்திருத்தச் செம்மல்! சொற்செல்வன்! சோர்வற்ற உழைப்பாளி! அஞ்சா நெஞ்சுடன் அறிவுப்பணி புரிந்து வந்தவர்! ” என அறிஞர் அண்ணாவின் பாராட்டைப் பெற்றவர்.

முதல்முதலாக காஞ்சிபுரத்தில் இந்தி எதிர்ப்பு மாநாட்டை நடத்திய பெருமைக்குரியவர்.

‘தூக்குமேடை’ நாடகத்தை கலைஞர் எழுதி நடிகவேள் எம்.ஆர்.ராதா அவர்களுடன் முக்கியப் பாத்திரத்தில் நடித்து தஞ்சையில் அரங்கேற்றப்பட்ட போது நாடகத்திற்கு தலைமையேற்ற அழகிரி அவர்கள் கலைஞரின் எழுத்தாற்றலையும், நடிப்பையும் பார்த்துவிட்டு, ‘கலைஞர்’ என்ற பட்டத்தை தன் வாயால் உச்சரித்து வழங்கினார்.

சிம்மம் கர்ச்சித்தது, புலி உறுமியது, கோடையிடி குமுறியது, பெரியார் பேச்சில் காணப்பட்ட அழுத்தம் திருத்தமான வாதமும், அழகிரி பேச்சில் காணப்பட்ட வீரங் கொப்பளிக்கும் வரிகளும், அண்ணா பேச்சின் அழகு தமிழும் என்னை வெகுவாக கவர்ந்தன” என்று தலைவர் கலைஞர் குறிப்பிட்டுள்ளார்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

### சென்னை மாவட்டத்தில்

# வாக்குப் பதிவு இயந்திரங்கள்- கட்டுப்பாட்டுக் கருவிகள்!

## மாவட்ட தேர்தல் அலுவலர் ஜெ.ராதாகிருஷ்ணன் ஆய்வு!

சென்னை,மார்ச் 28 - சென்னை மாவட்டத்தில் வாக்குப்பதிவு இயந்திரங்கள், கட்டுப்பாட்டு கருவிகள் மற்றும் வாக்காளர் சரிபார்க்கும் காகிதத் தணிக்கை சோதனை கருவிகள் (VVPAT) இயந்திரங்களை 16 சட்டமன்றத் தொகுதிகளுக்கு அனுப்பி வைக்கும் பணியினை மாவட்ட தேர்தல் அலுவலர்/கூடுதல் தலைமைச் செயலாளர்/ ஆணையாளர் டாக்டர் ஜெ.ராதாகிருஷ்ணன், நேற்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

வருகின்ற நாடாளுமன்ற பொதுத்தேர்தல் 2024னை முன்னிட்டு, சென்னை மாவட்டத்தில் கணினி குலுக்கல் முறையில் (Randomization) 16 சட்டமன்றத் தொகுதிகளுக்காக தெரிவுசெய்யப்பட்ட வாக்குப்பதிவு இயந்திரங்கள், கட்டுப்பாட்டு கருவிகள் மற்றும் வாக்காளர் சரிபார்க்கும் காகிதத் தணிக்கை சோதனை கருவிகள் (VVPAT) இயந்திரங்களை அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் முன்னிலையில், சிந்தாதிரிப்பேட்டையில் உள்ள வைப்பு அறையிலிருந்து, 16 சட்டமன்றத் தொகுதிகளின் வைப்பு அறைகளுக்கு அனுப்பி வைக்கும் பணியினை மாவட்ட தேர்தல் அலுவலர்/கூடுதல் தலைமைச் செயலாளர்/ஆணையாளர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன், 26.03.2024 அன்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

பின்னர் செய்தியாளர்கள் சந்திப்பில் மாவட்ட தேர்தல் அலுவலர்/கூடுதல் தலைமைச் செயலாளர்/ ஆணையாளர் பேசும் போது தெரிவித்ததாவது :

நடைபெறவுள்ள நாடாளுமன்ற பொதுத்தேர்தல் 2024னை முன்னிட்டு, வாக்குப்பதிவு இயந்திரங்கள், கட்டுப்பாட்டு கருவிகள் மற்றும் வாக்காளர் சரிபார்க்கும் காகிதத் தணிக்கை சோதனை கருவிகள் (VVPAT) ஆகியவை முதற்கட்டமாக கணினி குலுக்கல் முறையில் அங்கீகரிக்கப்பட்ட கட்சிகளின் பிரதிநிதிகள் முன்னிலையில் 16 சட்டமன்றத் தொகுதிகளுக்கான இயந்திரங்களுக்கான எண்கள் தேர்ந்தெடுக்ககப்பட்டது.

அதன்படி, வாக்குப்பதிவிற்கான 4469 வாக்குப்பதிவு இயந்திரங்கள், 4469 கட்டுப்பாட்டுக் கருவிகள் மற்றும் 4842 வாக்காளர் சரிபார்க்கும் காகிதத் தணிக்கை சோதனை கருவிகள் (VVPAT) சிந்தாதிரிப்பேட்டை வைப்பு அறையிலிருந்து அந்தந்த சட்டமன்றத் தொகுதிகளின் வைப்பு அறைகளுக்கு காவல்துறையின் பாதுகாப்போடு அனுப்பி வைக்கும் பணி அங்கீகரிக்கப்பட்ட கட்சிகளின் பிரதிநிதிகள் முன்னிலையில் நடைபெற்றது. இந்த இயந்திரங்கள் வீடியோ கண்காணிப்பு மூலம் தொடர்ந்து கண்காணிக்கப்படும். இருப்பு இயந்திரங்கள் (Reserve Machines) இந்த வைப்பு அறையிலேயே வைக்கப்படும்.

தேர்தல் பறக்கும் படைகள் மற்றும் நிலையான கண்காணிப்புக் குழுக்களின் மூலம் ரூ.2,35,89,600/மும், ரூ.5,32,60,775 மதிப்பிலான 8046.45 கிராம் தங்கம், ரூ.15,00,000 மதிப்பிலான 12 ஐபோன்கள் என மொத்தம் ரூ.7,83,50,375/ மதிப்பில் பறிமுதல் செய்யப்பட்டு கருவூலத்தில் பற்று வைக்கப்பட்டுள்ளது.

வடசென்னையில் 23 வேட்பாளர்கள், தென் சென்னையில் 20 வேட்பாளர்கள், மத்திய சென்னையில் 9 வேட்பாளர்கள் என மொத்தம் நேற்று வரை (25.03.2024 வரை) 52 வேட்பாளர்கள் வேட்புமனுத் தாக்கல் செய்துள்ளனர்.

நாடாளுமன்றத் தேர்தல் செலவினங்களைக் கண்காணிக்க 6 தேர்தல் செலவினப் பார்வையாளர்கள் உள்ளனர். மேலும், தேர்தல் பணிகளை கண்காணிக்க வடசென்னையில் கார்த்திகே தன்ஜி புத்தப்பாட்டி, (Mr.Kartikay Dhanji Budhdhabhatti, I.A.S.,) , மத்திய சென்னையில் டாக்டர் டி. சுரேஷ், (Dr.D. Suresh, I.A.S.,) , தென் சென்னையில் முத்தாடா ரவிச்சந்திரா, இ.ஆ.ப. (Thiru. Muddada Ravichandra, I.A.S.,) தேர்தல் பொது பார்வையாளர்களாகவும், காவல் பணிகளை கண்காணிக்க வடசென்னையில் உதய் பாஸ்கர் பில்லா, இ.கா.ப., (Thiru. Uday Bhaskar Billa, IPS.,) , மத்திய சென்னை மற்றும் தென்சென்னையில் சஞ்சய் பாட்டியா, இ.கா.ப., (Thiru. Sanjay Bhatia, IPS.,) தேர்தல் காவல் பார்வையாளர்களாகவும் தேர்தல் பணிகளை கண்காணிக்க உள்ளனர் எனத் தெரிவித்தார்.

இந்நிகழ்வில், மாவட்ட வருவாய் அலுவலர் (தேர்தல்கள்) ச.சுரேஷ் மற்றும் அலுவலர்கள், அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

### திருச்சி தெற்கு மாவட்டத்திற்குட்பட்ட

# சட்டமன்ற தொகுதிகளுக்கான தேர்தல் பணிக்குழு!

### மாவட்டச் செயலாளர் – அமைச்சர் அன்பில் மகேஸ்பொய்யாமொழி அறிவிப்பு!



திருச்சி தெற்கு மாவட்டத்திற்கு உட்பட்ட, திருச்சி, கரூர் பாராளுமன்ற தொகுதிகளுக்கு திருவெறும்பூர், திருச்சி கிழக்கு மற்றும் மணப்பாறை சட்டமன்ற தொகுதிகளுக்கு கீழ்க்காணும் நபர்கள் தொகுதி பார்வையாளர்களுடன் இணைந்து தேர்தல் பணியாற்ற தேர்தல் பணிக்குழு உறுப்பினர்களாக நியமனம் செய்யப்படுகிறார்கள்.

குறிப்பு : தேர்தல் பணிக்குழு உறுப்பினர்கள் அவரவருக்கு ஒதுக்கப்பட்ட தொகுதிகளில் தேர்தல் முடியும் வரை அங்கு தங்கியிருந்து தேர்தல் பணியாற்றுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**தேர்தல் பணிக்குழு திருவெறும்பூர் தொகுதி**

1. சீ.க.மறைமலை - தொகுதி பார்வையாளர்
2. அ.த.த.செங்குட்டுவன் - மாவட்ட துணை செயலாளர்
3. வி.தனசேகரன் - பொதுக்குழு உறுப்பினர்
4. நவல்பட்டு கே.சண்முகம் - பொதுக்குழு உறுப்பினர்
5. எம்.தமிழ்செல்வன் - மாநகர பொருளாளர்
6. ஜி.ரமேஷ் - மாவட்ட அணி அமைப்பாளர்

**தேர்தல் பணிக்குழு திருச்சி கிழக்கு தொகுதி**

1. மு.மதிவாணன் - தொகுதி பார்வையாளர்
2. இரா.மூக்கன் - மாவட்ட துணை செயலாளர்
3. லீலா வேலு - மாவட்ட துணை செயலாளர்
4. உ.ராஜேஸ்வரன் - பொதுக்குழு உறுப்பினர்
5. ஆறு.சந்திரமோகன் - மாநகர துணை செயலாளர்
6. கே.ஏ.வி.தினகரன் - மாவட்ட அணி அமைப்பாளர்

**தேர்தல் பணிக்குழு மணப்பாறை தொகுதி**

1. கே.என்.சேகரன் - தொகுதி பார்வையாளர்
2. பி.எம்.சபியுல்லா - தலைமை செயற்குழு உறுப்பினர்
3. எம்.கோவிந்தராஜ் - மாவட்ட அவைத்தலைவர்
4. இரா.குணசேகரன் - மாவட்ட பொருளாளர்
5. செ.பன்னீர்செல்வம் - பொதுக்குழு உறுப்பினர்
6. ப.கிருஷ்ண கோபால் - மாவட்ட அணி அமைப்பாளர்

அமைச்சர் **அன்பில் மகேஸ் பொய்யாமொழி**
செயலாளர், திருச்சி தெற்கு மாவட்ட தி.மு.க.



கிருஷ்ணகிரி நாடாளுமன்றத் தொகுதி காங்கிரஸ் வேட்பாளர் அறிமுக கூட்டம். கிருஷ்ணகிரி ஒசூரில் நடைபெற்றது. ‘இந்தியா’ கூட்டணி கட்சி வேட்பாளர் மூன்று லட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெறச் செய்ய அனைவரும் கடுமையாக உழைத்து வாக்கு சேகரிப்பில் ஈடுபட வேண்டுமென அமைச்சர் அர.சக்கரபாணி சிறப்புரையாற்றினார். கிருஷ்ணகிரியில் தே.மதியழகன் எம்.எல்.ஏ.வும் ஒசூரில் ஒய்.பிரகாஷ் எம்.எல்.ஏ.வும் தலைமை வகித்தனர். இந்த கூட்டத்தில் மாநில அமைப்புசாரா ஓட்டுநர் அணி செயலாளர் டி.செங்குட்டுவன், மாநில சொத்து பாதுகாப்பு குழு உறுப்பினர் சுகவனம், மாநில தீர்மானக்குழு உறுப்பினர் வெற்றிச்செல்வன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் முருகன், மாவட்ட அவைத் தலைவர்கள் நாகராஜ், யுவராஜ், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் இன்பசேகரன், ஓசூர் தொகுதி பொறுப்பாளர் ரமேஷ் மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகள் பங்கேற்றனர்.



புதுச்சேரி நாடாளுமன்றத் தொகுதியில் 'இந்தியா' கூட்டணி கட்சி சார்பில் போட்டியிடும் காங்கிரஸ் வேட்பாளர் வெ. வைத்திலிங்கம் மாவட்ட தேர்தல் அதிகாரி குலோத்துங்கனிடம் வேட்புமனு தாக்கல் செய்தார். உடன் முன்னாள் முதல்வர் வே. நாராயணசாமி, தி.மு.க. அமைப்பாளர் இரா. சிவா, எம்.எல்.ஏ., இந்திய கம்யூனிஸ்ட் மாநில செயலாளர் முகம்மது சலீம், விடுதலைச் சிறுத்தைகள் கட்சி முதன்மைச் செயலாளர் தேவ.பொழிலன் ஆகியோர் உடனிருந்தனர்.




தஞ்சை நாடாளுமன்றத் தொகுதி 'இந்தியா' கூட்டணி கட்சிகளின் செயல்வீரர்கள் கூட்டத்தில் பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, கழக வெற்றி வேட்பாளர் ச.முரசொலி யை அறிமுகப்படுத்தி சிறப்புரையாற்றினார். உடன் தஞ்சை மத்திய மாவட்டக் கழகச் செயலாளர் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ., தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் கா.அண்ணாதுரை எம்.எல்.ஏ, கழக உயர்நிலைச் செயல்திட்டக்குழு உறுப்பினர் எஸ்.எஸ்.பழநிமாணிக்கம் எம்.பி உள்ளிட்ட கழக நிர்வாகிகள், கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.

### சுயமரியாதை இயக்கத்தின் நூற்றாண்டு விழா!

# 'இந்தியா' கூட்டணிக்கே வாக்களித்து வெற்றி பெறச் செய்வோம்!

## திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி தலைமையில் நடைபெற்ற திராவிடர் கழகப் பொதுக்குழுவில் தீர்மானம்!

தஞ்சை, மார்ச் 28 -

இந்திய அரசமைப்புச் சட்டத்தின் அடிப்படைக் கோட்பாடுகளை நசுக்கும் மதவாத ஒன்றிய பி.ஜே.பி. அரசை வரும் மக்களவைத் தேர்தலில் வீழ்த்தி, வாக்காளர்கள் இந்தியா கூட்டணியை வெற்றி பெறச் செய்வதைக் கடமையாகக் கொள்ளவேண்டும் என்றும், தேர்தல் களத்தில் திராவிடர் கழகத் தோழர்களின் பணி சிறப்பாக இருக்க வேண்டும் என்றும் தஞ்சையில் நடைபெற்ற திராவிடர் கழகப் பொதுக்குழுவில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

திராவிடர் கழகப் பொதுக்குழுக் கூட்டம் தஞ்சாவூர் இராமசாமி திருமண மண்டபத்தில் 25.3.2024 அன்று மாலை திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:

**வாக்காளர்களின் கடமை!**

ஒன்றியத்தில் மோடி தலைமையிலான பா.ஜ.க. அரசு, ''முன்னேற்றம், வளர்ச்சி'' என்ற கோஷத்தோடும், வாக்களித்தால், 'அச்சே தின்' 'நல்ல காலம் மக்களுக்கு பிறக்கும்' என்ற வாக்குறுதி அளித்தும் பெரும்பான்மை இடங்களை பெற்று ஒன்றியத்தில் ஆட்சிக்கு இருமுறை வந்தது.

கடந்த பத்தாண்டு கால பா.ஜ.க. ஆட்சியில், நாட்டின் அனைத்துத் துறைகளிலும் தோல்வியையே அடைந்துள்ளது.

பொருளாதார மேம்பாடு, ஊழல் ஒழிப்பு, கறுப்புப் பணம் மீட்பு, வறுமை ஒழிப்பு, வேலை வாய்ப்பு என மோடி அரசு அளித்த வாக்குறுதிகள் அனைத்துமே வெற்று அறிவிப்புகளாக, காலவாதியான வாக்குறுதிகளாக இருக்கின்றன என்பதை நாட்டு மக்கள் இன்று தெளிவாக உணர்ந்துள்ளார்கள் கொடுமைக்கும் ஆளாகியுள்ளனர். ரூபாய் மதிப்பிழப்பு என்று திடீரென்று அறிவித்து பொருளாதாரமே முற்றிலும் நசிந்து போகும் நிலையை உருவாக்கினார் பிரதமர் மோடி. சிறு குறு, நடுத்தர தொழில்கள் இழுத்து மூடப்பட்டன. இலட்சக்கணக்கானவர்கள் வேலையிழந்து நடுவீதிக்கு வந்தனர்.

கோவிட் பெருந்தொற்றுப் பிரச்சினையை தவறாகக் கையாண்டதும், தடுப்பூசி என்பதில் நடந்த குழப்பங்களும், பொருளாதாரத் துறையின் நாசகாரச் செயல்பாடும், பாதுகாப்புத் துறை சாதனங்களை வாங்குவதில்கூட ஏற்பட்ட சந்தேகங்களும், விவசாயிகள் போராட்டத்தை அரசு அணுகிய விதம், பெட்ரோல், டீசல் விலைகளின் செங்குத்தான ஏற்றம் அனைத்துமே, மோடி தலைமையிலான பா.ஜ.க. அரசு, மக்கள் விரோத அரசாகவே தொடர்ந்து நடந்து வருகிறது என்பதற்கு எடுத்துக் காட்டுகளாகும்.

நாடாளுமன்ற நடைமுறைகளை அவமதித்தல், ஜனநாயக மாண்பைக் காலில் போட்டு மிதித்தல், அரசமைப்புச் சட்டத்தின் படி தன்னாட்சி அதிகாரம் பெற்றுள்ள அமைப்புகளின் மாண்பைத் தகர்த்தல், மாநில உரிமைகளை மறுத்தல், எதிர்க்கட்சி ஆளும் மாநிலங்களில் ஆளுநர்கள் மூலமாக ''போட்டி அரசாங்கத்தை'' நடத்துதல், நிதி பங்கீட்டில் ஓரவஞ்சனை என அரசமைப்புச் சட்டத்திற்கு எதிரான ஒரு தீவிர போக்கினை மட்டுமே பா.ஜ.க. அரசு செய்து வந்துள்ளது. "ஒரே நாடு, ஒரே மதம், ஒரே மொழி, ஒரே கலாச்சாரம்'' என்ற பெயரில் நாட்டை ஹிந்துத்துவ மதவாதப் படுகுழியில் தள்ளும் திட்டத்தோடு செயல்பட்டு வருகிறது மோடி அரசு.

"எங்கள் அரசு வெளிப்படைத் தன்மையுடனும், அனைத்து மாநிலங்களையும் அரவணைத்துச் செல்லும்'' எனப் பேசி வந்த பிரதமர் மோடியின் தொடர் நடவடிக்கைகள், அதற்கு எதிர்மாறாகவே உள்ளன. தேர்தல் பத்திரம் தொடர்பாக எந்தத் தகவலையும் வெளியிடக் கூடாது என்பதில் காட்டிய தீவிரம், "பி.எம்.கேர்'' என அரசு விளம்பரத்தோடு நடைபெறும் நிறுவனம் தனியார் அமைப்பு என கூசாமல் தந்திரமாக நடைபெறும் ஓர் அரசாக மோடி அரசு விளங்குகிறது.

தனக்குக் கிடைத்த நல்ல வாய்ப்பின்மூலம் மக்கள் நலன் சார்ந்தும், அனைத்து மக்களையும் உள்ளடக்கிய சமூகநீதி அடிப்படையிலும் எந்த திட்டங்களையும், சட்டங்களையும் பா.ஜ.க. ஆட்சி செயல்படுத்தவில்லை. மாறாக, முழுக்க முழுக்க ஆர்.எஸ்.எஸ்., சங் பரிவார் கூட்டத்தின் பாசிச சித்தாந்தந்தை நடைமுறைப்படுத்தி, சிறுபான்மையினருக்கு எதிராகவும், ஒடுக்கப்பட்ட மக்களுக்கு எதிராகவும் சட்டங்களை நிறைவேற்றுவதிலும், அரசமைப்புச் சட்டத்தின் முகப்புரையில் முத்தா ய்ப்பாக விளங்கும் மதசார்பின்மைக் கொள்கையை குழிதோண்டி புதைக்கும் விதமாக, கோயில் கட்டுவதிலும், அதைத் திறப்பதிலும் ஹிந்துத்வா கொள்கையை முன்னெடுக்கும் ஓர் அரசாக மோடி தலைமையிலான அரசு நாளும் நடந்து வருகிறது.

நமது அரசமைப்புச் சட்டத்தின் முகவுரையில், நாட்டின் மதசார்பின்மைக்கும், சமூக நீதிக்கும், பொருளாதார மேம்பாட்டிற்கும், ஜனநாயகத்திற்கும், சமத்துவத்திற்கும் ஊறுவிளைவிக்கும் பாசிச பாஜக எதேச்சதிகார ஆட்சியை அகற்றுவது இந்திய மக்களின் இன்றைய இன்றியமையாத கடமையாகும். ஆகவே, வருகின்ற நாடாளுமன்றத் தேர்தலில் பாசிச பா.ஜ.க. ஆட்சியை விரட்டிடவும், இந்தியா கூட்டணிக்கு பேராதரவு தந்து வெற்றி பெற செய்திடவும் நாட்டு மக்கள் உறுதியாக இருக்கவேண்டுமென்றும், நாட்டு மக்களை இப்பொதுக்குழு கேட்டுக் கொள்கிறது. இந்தியா கூட்டணியின் வெற்றிக்காக திராவிடர் கழகம் முழு மூச்சுடன் களத்தில் இறங்கிப் பாடுபடுவது என்றும் இப்பொதுக்குழு தீர்மானிக்கிறது.

**சுயமரியாதை இயக்கத்தின் நூற்றாண்டு விழா!**

அறிவாசான் தந்தை பெரியாரால் தோற்றுவிக்கப்பட்ட சுயமரியாதை இயக்கத்தின் நூற்றாண்டு விழா 2024 நவம்பரில் தொடங்குகிறது. 2025 ஆம் ஆண்டு நிறைவடைகிறது.



தந்தை பெரியாரால் உருவாக்கப்பட்ட சுயமரியாதை இயக்கத்தின் கொள்கைகளும், கோட்பாடுகளும் உலகம் தழுவிய அளவில் இன்றைய தினம் பெரும் வரவேற்பைப் பெற்று வருகின்றன.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரை சுயமரியாதை, சமூகநீதி, இனநலம், மொழி மானம், மூடநம்பிக்கை ஒழிப்பு, பகுத்தறிவு, பாலியல் உரிமை, ஜாதி ஒழிப்பு, சமத்துவம், சமதர்ம சிந்தனைகளின் செழித்த விளைச்சல் நிலமாகவும், இந்தியத் துணைக் கண்டத்திலேயே தனித்துவம் மிக்கதாகவும், "திராவிட பூமி, பெரியார் மண்'' என்று கட்சிகளைக் கடந்து பலராலும் ஒப்புக்கொள்ளப்பட்டதாகவும், அரசியலிலும் பெருந்தாக்கத்தை ஏற்படுத்தும் சக்தியாகவும், பார்ப்பன வல்லாண்மையை வேரடி மண்ணோடு வீழ்த்தும் போராயுதமாகவும் தமிழ்நாடு விளங்குகிறது என்றால், அதற்கு வலுவான அடித்தளம் இட்டது தந்தை பெரியாரின் தலைமையிலான சுயமரியாதை இயக்கமே!

சுயமரியாதை இயக்கம் நடத்திய மாநாடுகள் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வரலாற்றுத் திருப்பங்களாகவும், ஆட்சிகள்மூலம் செயல்படுத்தப்படும் உயரத்தை எட்டின என்பதும் வரலாறு!

ஒரே நேரத்தில் சுயமரியாதை இயக்கத்திற்கும், "நீதிக்கட்சி'' என்றழைக்கப்பட்ட திராவிடர் இயக்கத்திற்கும் தலைவராக விளங்கி, பிறகு, "திராவிடர் கழகமாக'' பரிணமித்து, இன்றுவரை உயிர்த் துடிப்போடு தேர்தலில் பங்கேற்காத சமூகப் புரட்சி இயக்கமாக, நாட்டின் அரசியல், சமூக கலங்கரை வெளிச்சமாகவும் செயல்பட்டு வருகிறது.

பிரச்சாரம் போராட்டம் என்ற இரு விசைகளுடன் சுழன்று சுழன்று தொண்டறம் புரியும் மக்கள் இயக்கமாகவும், அனைத்துத் திராவிட கட்சிகளுக்கும் தாய் என்று சொல்லும் அளவுக்கும், பிற கட்சிகளிலும் தாக்கத்தை ஏற்படுத்தும் பெரும் சக்தியாகவும், வரலாறு படைத்த சுயமரியாதை இயக்கத்தின் நூற்றாண்டு விழா தொடக்கம் இவ்வாண்டு நவம்பரில் வருகிறது.

இந்தியாவே திரும்பிப் பார்க்கும் வண்ணம் சுயமரியாதை இயக்கத்தின் நூற்றாண்டு விழாவை இவ்வாண்டு இறுதியில் கொண்டாடுவது என்று இப்பொதுக்குழு தீர்மானிக்கிறது.

அதற்குள் இயக்கம் இல்லாத பட்டி, தொட்டி, நாடு, நகரங்கள் எல்லாவற்றிலும் நமது கிளைகள் அமைக்கும் பணியை முடித்தாக வேண்டும் என்று கழகத் தோழர்களை, பொறுப்பாளர்களை இப்பொதுக்குழு வலியுறுத்துகிறது.

**சிந்து சமவெளி நாகரிகம்: நூற்றாண்டு விழா!**

சிந்து சமவெளி என்பது திராவிட நாகரிகம்தான் என்று (பொ.ஆ.மு. (Common ERA) BCE 33001300) இந்திய தொல்லியல் துறையின் இயக்குநராக இருந்த சர் ஜான் மார்ஷல் என்பவர் 1924 ஆம் ஆண்டில் தொல்லியல் ஆய்வின்மூலம் உலகறியச் செய்தார்.

'ஆரியம் திராவிடம்' என்பதெல்லாம் வெள்ளைக்காரனின் பிரித்தாளும் சூழ்ச்சி என்று பார்ப்பனர்கள் பரப்புரை செய்வதெல்லாம் ஆரியப் பார்ப்பனர்களின் தந்திரமே என்பது 1924 இல் தொல்லியல் ஆய்வின்மூலம் சிந்து சமவெளி நாகரிகம் திராவிட நாகரிகமே என்று உறுதி செய்யப்பட்டது. ('தினமணி' ஆசிரியர் அய்ராவதம் மகாதேவன் போன்றவர்களும் இதனை ஏற்கின்றனர்).

1924 இல் பிரகடனப் படுத்தப்பட்ட திராவிட நாகரிகத்தினையும், அதனை ஆய்வின்மூலம் உலகறியச் செய்த சர்ஜான் மார்ஷலின் கண்டுபிடிப்பையும் வரலாற்றில் நினைவு கூர்வதற்கு அதன் நூற்றாண்டு விழாவினை வரும் டிசம்பரில் சிறப்புடன் கொண்டாடுவது என்று தீர்மானிக்கப் படுகிறது.

**பாடகர் கிருஷ்ணாவுக்கு விருது!**

சென்னை மியூசிக் அகாடமி என்ற அமைப்பு கர்நாடக இசைக் கலைஞரும் சமூக நல்லிணக்க உணர்வுடன் செயல்பட்டுவருபவருமான டி.எம்.கிருஷ்ணா அவர்களுக்கு 2024 ஆம் ஆண்டுக்கான 'சங்கீத கலாநிதி விருது' வழங்கப்படுமென அறிவித்திருக்கிறது. அதற்கு எதிர்ப்பு தெரிவித்துள்ள ரஞ்சனிகாயத்ரி என்ற இரண்டு பாடகிகள், டி.எம்.கிருஷ்ணா பெரியாரைப் பற்றி பாடல் பாடியிருக்கிறார் என்றும், கருநாடக இசையில் சமூகக் கருத்துகளைப் பாடுவதையும் காரணம் சொல்லி, தந்தை பெரியாரைக் குறித்த அவதூறுகளையும், அபாண்டமான குற்றச்சாட்டுகளையும் தெரிவித்துள்ளனர். அதனையொட்டி மேலும் சில பார்ப்பனக் கோஷ்டிகளும் அவர்களுடன் இணைந்துள்ளன. பெரியார் மீதான அவதூறுகளைத் தொடர்ந்து பரப்பி வருவதன் பின்னணியில் ஆர்.எஸ்.எஸ். ஆதரவு பெற்ற ஒரு கும்பல் செயல்பட்டு வருவதாகத் தெரிகிறது.

பாரதிய ஜனதா கட்சியின் மாநிலத் தலைவர் அண்ணாமலையும், இந்த விவகாரத்தில் டி.எம்.கிருஷ்ணாவுக்கு எதிராகவும், தந்தை பெரியார் பற்றிய அவதூறுகளுக்கு ஆதரவாகவும் கருத்துத் தெரிவித்துள்ளார். இவர்கள் அனைவரும் ஒரே ராகத்தை இசைப்பதன் மூலம் பூனைக் குட்டி வெளியே வந்திருப்பது மிகவும் தெளிவாகிறது.

ஆனால், இப்பிரச்சினையில் டி.எம்.கிருஷ்ணாவுக்கு விருது வழங்குவதில் மியூசிக் அகாடமியும், அதன் தலைவர் என்.முரளியும் காட்டி வரும் உறுதி பாராட்டுக்குரியதாகும்.

தந்தை பெரியார் ஜாதி, மத, இன, மொழிகளுக்கு அப்பாற்பட்ட மனிதநேயத் தலைவர். அவரை இழிவு செய்வதை ஒருபோதும் ஏற்க முடியாது. பெரியார் மீது அவதூறு பரப்புவோர் மன்னிப்புக் கேட்கவில்லையெனில், மக்கள் மன்றத்திலும், நீதிமன்றத்திலும் பதிலளிக்க வேண்டியிருக்கும் என்று இப்பொதுக்குழு எச்சரிக்கிறது.

**கழக செயல்பாடுகளை மேலும் தீவிரப்படுத்துதல்!**

2023 மே 13 ஆம் தேதியன்று ஈரோட்டில் நடைபெற்ற திராவிடர் கழகப் பொதுக்குழுவில் கழக அமைப்பு முறையிலும், நிர்வாக முறையிலும் மாற்றியமைக்கப்பட்ட நிலையில், கழகப் பணிகள் பல தளங்களிலும் எழுச்சியுடன் நடைபெற்று வருவது மகிழ்ச்சியளிக்கிறது. கழகச் செயல் வீரர்களின் பணி பாராட்டத்தக்க வகையில் அமைந்துள்ளது.

அடுத்து நாம் சந்திக்க இருப்பது மக்களவைத் தேர்தலாகும். கொள்கை, லட்சியம் என்ற அடிப்படையில் நடைபெறும் இந்தத் தேர்தல் என்பது நமது கழகத்திற்கும், நாட்டின் எதிர்காலத்திற்கும் மிகமிக முக்கியமானதாகும்.

சமூகநீதிக்கான சரித்திர நாயகர் முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான 'திராவிட மாடல்' ஆட்சி இந்த வகையில் இந்தியாவிற்கே வழி காட்டுவதாகும் என்பதற்கு அவர் பெரிதும் உழைத்து உருவாக்கிய 'இந்தியா' கூட்டணியே தக்க சான்று. இந்தியா கூட்டணியின் வெற்றியே 'வேற்றுமையில் ஒற்றுமையை' இந்திய நாடும், நாளை அமையப் போகும் அரசும் தக்க வைக்கவும், கூட்டாட்சி தத்துவத்தோடு, மாநிலங்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் ஆட்சியாக ஒன்றியத்தில் அமைவதற்கான நல் வாய்ப்பாகும்.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் தி.மு.க. தலைமையிலான இந்தியா கூட்டணி வேட்பாளர்கள் அத்தனைத் தொகுதிகளிலும் வெற்றி பெற நமது கழகத் தோழர்கள் முழு மூச்சுடன் பாடுபடுவது என்றும், அடுத்து இவ்வாண்டு இறுதியில் காத்திருக்கும் இரு நூற்றாண்டு விழாக்கள் சிறப்புற நடத்துவது என்றும்,

இந்தப் பணிகளுக்கிடையே கழகக் கட்டமைப்புப் பணிகளிலும் கழகப் பொறுப்பாளர்கள் கவனம் செலுத்தவேண்டும் என்றும் இப்பொதுக் குழு கழகத் தோழர்களையும், பொறுப்பாளர்களையும் கேட்டுக் கொள்கிறது.

**தந்தை பெரியார் நெறிமுறை**

கழகத் தலைவர் வழிகாட்டுதல்படி நமது சொற்பொழிவாளர்கள்மூலம் பரப்புரை பயணங்களை வாக்காளர்களிடையே போதிய விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தித் தரும் வகையில் பொறுப்புடன் நடத்தி, கொள்கைக் கூட்டணிக்கு அச்சாணி போன்று இயக்க வேண்டியது நமது தலையாய கடமையாகும். தந்தை பெரியார் காட்டிய நெறிமுறையின்படி பரப்புரை பணிகள் அமைக்கப்படல் வேண்டும் என்று இப்பொதுக்குழு முடிவு செய்கிறது.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

# தேர்தல் பத்திர ஊழல் - உலகின் மிகப்பெரிய ஊழல்!

## நிர்மலா சீதாராமனின் கணவர் பரகலா பிரபாகர் குற்றச்சாட்டு!

புதுடெல்லி, மார்ச். 28-

தனியார் தொலைக் காட்சி ஒன்றிற்கு பேட்டியளித்த பரகலா பிரபாகர், வருகிற 2024 நாடாளுமன்றத் தேர்தல் என்பது பாஜகவிற்கும், இந்திய மக்களுக்குமான போட்டி என கூறினார். இதற்கு ஒன்றிய பா.ஜ.க. அரசின் தேர்தல் பத்திர ஊழலே முக்கிய காரணம் என்று அவர் தெரிவித்தார்.

தேர்தல் பத்திர ஊழல் உலகின் மிகப்பெரிய ஊழல் என்றும், பா.ஜ.க. குறித்து இந்திய மக்கள் மெல்ல மெல்ல புரிந்து கொண்டு வருவதாகவும், ஒன்றிய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமனின் கணவர் பரகலா பிரபாகர் கூறினார்.

மேலும் பரகலா பிரபாகர் கூறுகையில் தேர்தல் பத்திர ஊழல் என்பது இந்தியாவிலேயே அல்ல; உலக அளவில் மிகப் பெரிய ஊழல் ஆகும். பா.ஜ.க. இந்திய மக்களுக்கான மோதல் தான் 2024 தேர்தல். பா.ஜ.க. குறித்து தற்போது மக்கள் மெல்ல மெல்ல புரிந்து கொண்டு வருகின்றனர். தேர்தலில் நிச்சயம் பா.ஜ.க.வை இந்திய மக்கள் தோற்கடிப்பர் என்றார்.

### நாட்டைக் காப்பாற்ற வேண்டும் எனில்

# மோடி அரசை தூக்கி எறிய வேண்டும்!

## காஷ்மீர் முன்னாள் ஆளுநர் சத்திய பால் மாலிக் அறிக்கை!

புதுடெல்லி, மார்ச். 28-

நாட்டைக் காப்பாற்ற வேண்டும் எனில், மோடி அரசை ஆட்சியில் இருந்து தூக்கி எறியுங்கள் என்று நாட்டு மக்களுக்கு ஜம்மு காஷ்மீர் முன்னாள் ஆளுநர் சத்திய பால் மாலிக் வேண்டுகோள்விடுத்துள்ளார்.

ஜம்மு காஷ்மீர் முன்னாள் ஆளுநர் சத்திய பால் மாலிக் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

மோடி அரசு மீண்டும் ஆட்சிக்கு வந்தால் உங்கள் குழந்தைகளின் எதிர்காலம் இருண்டதாகிவிடும் என்று நாட்டு மக்களுக்கு எச்சரித்துள்ளார். ஒன்றியத்தில் ஆட்சியில் உள்ளவர்கள் நாட்டை குழிதோண் டிப் புதைக்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர் என்றும், மோடி ஆட்சியில் ஒட்டுமொத்த தேசமும் ஒரு சில முதலாளிகளால் சூறையாடப்படுகிறது என்றும் அவர் குற்றஞ் சாட்டியுள்ளார்.

மோடி ஆட்சியில் இளைஞர்கள் வேலையில்லா திண்டாட்டத்தை எதிர்கொள்கிறார்கள். மோடி ஆட்சியில் நாட்டின் பணவீக்கம் விண்ணை முட்டும் அளவுக்கு உயர்ந்துள்ளது. நாட்டில் உள்ள அரசு மருத்துவமனைகள் மற்றும் அரசு பள்ளிகளை மூடுவதில் மோடி அரசு குறியாக உள்ளது என்றும் சத்தியபால் மாலிக் விமர்சித்துள்ளார்.

உங்கள் குழந்தைகளின் எதிர்காலம் சிறப்பாக அமையவும், நல்ல வேலை வாய்ப்பு கிடைக்கவும் மோடி அரசை வீழ்த்துங்கள் என்று நாட்டு மக்களுக்கு சத்யபால் மாலிக் அறிவுறுத்தியுள்ளார்.

பணவீக்கத்தில் இருந்து விடுபட்டு, இந்த நாட்டைக் காப்பாற்ற வேண்டும் எனில், மோடி அரசை ஆட்சியில் இருந்து தூக்கி எறியுங்கள் என்றும்,

நாடாளுமன்றத் தேர்தலில் ஜாதி மதத்தை மறந்து பா.ஜ.க.வை படுமோசமாக தோல்வி அடையச் செய்ய வேண்டும் என்றும் நாட்டு மக்களுக்கு சத்யபால் மாலிக் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

2024 நாடாளுமன்றத் தேர்தல் வாய்ப்பை, நாட்டு மக்கள் தவறவிட்டால் எதிர்காலத்தில் உங்களுக்கு வாக்குரிமை கிடைக்காது என்றும் ஜம்மு - காஷ்மீர் முன்னாள் ஆளுநர் சத்ய பால் மாலிக் எச்சரித்துள்ளார்.

### கள்ளக்குறிச்சி நாடாளுமன்றத் தொகுதி 'இந்தியா' கூட்டணி சார்பில் போட்டியிடும்

# கழக வேட்பாளர் மலையரசன் திறந்த வேனில் பிரச்சாரம்!

## வசந்தம் கார்த்திகேயன் எம்.எல்.ஏ. தலைமையில்!

கள்ளக்குறிச்சி, மார்ச் 28 -

கள்ளக்குறிச்சி நாடாளுமன்ற தொகுதி இந்தியா கூட்டணி சார்பில் போட்டியிடும் தி.மு.க. வேட்பாளர் மலையரசனை ஆதரித்து திறந்த வேனில் வசந்தம் கார்த்திகேயன் எம்.எல்.ஏ தனது ரிஷிவந்தியம் தொகுதிக்கு உட்பட்ட மணலூர்பேட்டையில் பிரச்சாரத்தைதுவக்கினார்.

தமிழகத்தில் வருகின்ற ஏப்ரல் 19ஆம் தேதி நாடாளுமன்ற தேர்தல் நடைபெற இருக்கிறது, அதனை முன்னிட்டு கடந்த மார்ச் 25ஆம் தேதி திங்கள் கிழமை அன்று கள்ளக்குறிச்சி நாடாளுமன்ற தொகுதி 'இந்தியா' கூட்டணி தி.மு.க. வேட்பாளர் மலையரசன் தனது வேட்பு மனுவை தாக்கல் செய்தார்.

அதனை தொடர்ந்து தினசரி பொதுமக்களிடத்தில் தீவிர வாக்கு சேகரிப்பு பணிகளில் ஈடுபட்டு வருகிறார்.

அந்த நிலையில் ரிஷிவந்தியம் தொகுதிக்குட்பட்ட மணலூர்பேட்டை பேரூராட்சியில் தனது பிரச்சாரத்தை துவக்கினார். இதன் பின்னர் அங்கு கூடியிருந்த தி.மு.க. நிர்வாகிகள் மற்றும் 'இந்தியா' கூட்டணி கட்சி நிர்வாகிகள் மலர் தூவி மரியாதை செலுத்தி தாரை தப்பட்டை முழங்க உற்சாக வரவேற்பு அளித்தனர்.

அதனைத் தொடர்ந்து மணலூர்பேட்டை பேரூராட்சியில் அமைந்துள்ள 15 வார்டுகளிலும் திறந்த வேனில் தீவிர வாக்கு சேகரிப்பு பணியில் ஈடுபட்டார்.

அப்போது கடைவீதியில் அமைந்துள்ள தேநீர் கடையில் வேட்பாளர் மலையரசன் தேநீரை போட்டு பொதுமக்களிடதில் கொடுத்து அவர்களுடன் தேநீர் அருந்தி உதய சூரியன் சின்னத்தில் வாக்குகள் சேகரித்தார்.

இந்த நிகழ்வின் போது ரிஷிவந்தியம் சட்டமன்ற உறுப்பினர் வசந்தம் கார்த்திகேயன் உடன் இருந்தார், அதனைத் தொடர்ந்து ரிஷிவந்தியம் தொகுதிக்கு உட்பட்ட முருக்கம்பாடி, நேரடையார் குப்பம், அத்தியந்தல், ஜம்பை பள்ளி சந்தல், மேட்டுச்சேரி காங்கேயனூர் மேலந்தல் ஆகிய கிராமங்களில் தி.மு.க. நிர்வாகிகள் தொண்டர்கள், 'இந்தியா' கூட்டணி கட்சி நிர்வாகிகள் தொண்டர்களுடன் புடைசூழ பொது மக்களிடத்தில் தீவிர வாக்கு சேகரிப்பு பணியில் ஈடுபட்டார்.

இந்த நிகழ்வின்போது மணலூர்பேட்டை பேரூர் கழகச் செயலாளர் ஜெய் கணேஷ், மாவட்ட அறங்காவலர் குழு தலைவர் பாலாஜி பூபதி, ரிஷி வந்தியம் கிழக்கு ஒன்றிய செயலாளர் பாரதிதாசன், மாவட்ட இளைஞரணி கே.கே.ஆர். என்கிற ராஜீவ் காந்தி, பேரூராட்சி மன்ற துணைத் தலைவர் தம்பி துரை,மாவட்ட கவுன்சிலர் வடமாமந்தூர் ராஜேந்திரன் மற்றும் 'இந்தியா' கூட்டணி கட்சி நிர்வாகிகள் தொண்டர்கள், தி.மு.க. மாவட்ட ஒன்றிய பேரூர் கிளை கழக நிர்வாகிகள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.



திருச்சி தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் – அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தலைமையில் திருச்சி தெற்கு மாவட்டக் கழக அலுவலகத்தில், கரூர் நாடாளுமன்ற வேட்பாளர் அறிமுகக் கூட்டம் நடைபெற்றது. இதில் திருச்சி தெற்கு மாவட்டத்திற்குட்பட்ட மாவட்டக் கழக நிர்வாகிகள் மணப்பாறை, நகர, ஒன்றிய, பேரூர் கழக நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள், தலைவர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். கரூர் நாடாளுமன்றத் தொகுதியில் போட்டியிடும் ‘இந்தியா’ கூட்டணி காங்கிரஸ் பேரியக்கத்தின் வெற்றி வேட்பாளர் ஜோதிமணி கழக நிர்வாகிகளைச் சந்தித்து சால்வை அணிவித்து தன்னை அறிமுகம் செய்துகொண்டு ஆதரவு கோரினார். இந்நிகழ்வில் கரூர் நாடாளுமன்ற தொகுதி பொறுப்பாளர் எம்.எம்.அப்துல்லா எம்.பி, மாவட்டக் கழக நிர்வாகிகள் சபியுல்லா, கோவிந்தராஜ், குணசேகரன், காங்கிரஸ் மாவட்டச் செயலாளர் கோவிந்தராஜ், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் உள்ளாட்சி அமைப்புகளின், பிரதிநிதிகள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், தலைவர்கள் கலந்து கொண்டனர்.





மதுரை தெற்கு மாவட்டம் உசிலம்பட்டியில் தேனி நாடாளுமன்ற இந்தியா கூட்டணி தி.மு.க. வேட்பாளர் தங்க தமிழ்ச்செல்வன் அறிமுக கூட்டம் மாவட்டச் செயலாளர் சேடப்பட்டி மு.மணிமாறன் தலைமையில் நடைபெற்றதில், மதுரை வடக்கு மாவட்ட செயலாளர், அமைச்சர் பி.மூர்த்தி சிறப்புரையாற்றினார். உடன் கழக நிர்வாகிகள் கே.ஐ.மகிழன், முத்துராமன், சரவணக்குமார் எம்.எல்.ஏ., தொகுதி பொறுப்பாளர் மாரியப்பன் கென்னடி, எஸ்.ஓ.ஆர். தங்கபாண்டியன், பழனி, அஜித் பாண்டி, சுதாகரன், ஜெயச்சந்திரன், முருகன், சங்கர பாண்டி, செல்வ பிரகாஷ், ஜெயராமன் மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகள், கழக நிர்வாகிகள், பொதுமக்கள் என திரளானோர் பங்கேற்றனர்.

### அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் தலைமை!

# மோடி மீண்டும் ஆட்சிக்கு வந்தால் இந்தியாவில் தேர்தல் நடைபெறாது!

## சிவகங்கையில் வேட்பாளர் கார்த்தி ப.சிதம்பரத்தை ஆதரித்து ஒன்றிய முன்னாள் நிதி அமைச்சர் ப.சிதம்பரம் பேசுகையில் உறுதி!



சிவகங்கை, மார்ச் 28-

சிவகங்கை மாவட்டம் காரைக்குடி சட்டமன்ற தொகுதியில் இண்டியா கூட்டணி சார்பில் போட்டியிடும் காங்கிரஸ் கட்சி வேட்பாளர் கார்த்திப. சிதம்பரத்தை ஆதரித்து புதுவயல், காரைக்குடி, தேவகோட்டை ஆகிய ஊர்களில் இண்டியா கூட்டணி கட்சியின் செயல்வீரர்கள் கூட்டம் மாவட்ட கழக செயலாளரும், கூட்டுறவுத் துறை அமைச்சருமான கேஆர். பெரியகருப்பன் தலைமையில் நடைபெற்றது.

இந்த கூட்டத்தில் முன்னாள் அமைச்சர் மு.தென்னவன், வேட்பாளர் கார்த்தி ப.சிதம்பரம் எம்.பி. எஸ். மாங்குடி எம்.எல்.ஏ. ஆகியோர் மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகள் பேசினார்கள்.

கூட்டத்தில் ஒன்றிய கழகச் செயலாளர்கள் சுப.சின்னத். துரை,கே.ஆர். ஆனந்த், லெ.மு. ரவிச்சந்திரன், நாகனிரவி, பூபாலசிங்கம் நா. நெடுஞ்செழியன், குன்னக்குடி சுப்பிரமணியன், நகர்கழக செயலாளர்கள் என். குணசேகரன், பெரி. பாலா, பொதுக்குழு உறுப்பினர்கள் பள்ளத்தூர் கே.எஸ்.ரவி ஜெ.மதார்சேட், மாவட்ட கழக துணைச் செயலாளர் திருமதி ஜோன்ஸ் ரூசோ தலைமைச் செயற்குழு உறுப்பினர் எஸ்.முத்துதுரை, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் நாகனி செந்தில்குமார், பேரூர் கழகச் செயலாளர்கள் அசோக், பக்ருதீன்அலி, பாலையா, ராசு, மாவட்ட மகளீர் தொண்டரணி அமைப்பாளர் திருமதி ஹேமலதா செந்தில் உட்பட இண்டியா கூட்டணி கட்சி நிர்வாகிகள் ஒன்றிய துணைச் செயலாளர் முத்துக்குமார், சொ. கண்ணன், சாகீர்உசேன், அழகையா, சேவியர், அன்பு. செல்வன், துரை.நாகராசன், மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள். கூட்டத்தில் கலந்துகொண்டு முன்னாள் ஒன்றிய நிதி அமைச்சர் ப. சிதம்பரம் எம்.பி. பேசியதாவது.

வருகிற ஏப்ரல் 19ம்தேதி நடைபெறும் தேர்தல் முக்கியமான தேர்தலாகும். நாட்டில் யார் ஆட்சி செய்ய வேண்டும் யார் ஆட்சி செய்யக்கூடாது என்பதைமுடிவு செய்யும் தேர்தலாகும். முந்தைய தேர்தல்களை விட இது மாறுபட்ட தேர்தல் ஆகும். இண்டியா கூட்டணி நாளுக்கு நாள் வலுவடைந்து வருகிறது. தமிழகத்தில் முதல்வர் ஸ்டாலின் தலைமை.யிலான இண்டியா கூட்டணி புதுவை உட்பட 40 இடங்களிலும் வெற்றி பெறும். இதற்காக தீவிரமாக முதல்வர் ஸ்டாலின் அவர்கள் பிரச்சாரத்தினை செய்து வருகிறார். கூட்டணி கட்சி தோழர்களும் ஒற்றுமையுடன் தேர்தல் பணியாற்றிட வேண்டும். அ.தி.மு.க.விற்கும் பா.ஜ.க.விற்கும் ரகசியமான உறவு உள்ளது. பா.ஜ.கவுடன் கூட்டணி இல்லை என்று கூறும் முன்னாள் முதல்வர் எடப்பாடி பிரதமர் மோடி ஆட்சி குறித்து இதுவரை விமர்சிக்கவில்லை.

அவர்களுக்குள் ரகசிய உறவு உள்ளது. மீண்டும் பிரதமராக மோடி அமர்ந்தால் நாட்டில் தேர்தல் நடைபெறாது. சர்வாதிகார ஆட்சி தான் நடைபெறும். எனவே இந்தியாவை காப்பாற்ற இந்திய ஜனநாயகத்தை காப்பாற்ற நாம் அனைவரும் இண்டியா கூட்ட ணிக்கு வாக்களிக்க வேண்டும். இண்டியா கூட்டணி ஆட்சி அமைந்தால் அனைத்து மாநிலங்களும் சமமாக கருதப்படும். பாரபட்சம் பார்க்க மாட்டார்கள். பறிக்கப்பட்ட மாநில உரிமைகள் மீண்டும் மாநிலத்திற்கே தரப்படும். மாநிலத்திற்கு தேவையான நிதிஉதவிகள் பாரபட்சமின்றி வழங்கப்படும். ஜனநாயகம் பாதுகாக்கப்படும் மதச்சார்பின்மை காப்பாற்றப்படும். தமிழகத்தில் முதல்வர் ஸ்டாலின் அவர்கள் ஏராளமான மக்கள் நலத்திட்டங்களை செயல்படுத்தி உள்ளார். இத்தேர்தலில் அவைகள் மக்களிடம் எடுத்துக்கூறி வாக்குகள் சேகரிக்க வேண்டும்.

எனவே அனைவரும் இண்டியா கூட்டணிக்கு வாக்களிக்கு மாறு நாம் மக்களை சென்று சந்தித்து வாக்குகள் திரட்ட வேண்டும். இவ்வாறு ப. சிதம்பரம் எம். பி பேசினார்.

கூட்டத்திற்கு தலைமை வகித்த அமைச்சர் கேஆர். பெரியகருப்பன் பேசியதாவது. தமிழக முதல்வர் தளபதி அவர்கள் வலுவான இண்டியா கூட்டணியை அமைத்துள்ளார். தளபதி வித்திட்ட விதைதான் இன்று இந்தியா முழுவதும் இண்டியா கூட்டணியாக மலர்ந்துள்ளது. தலைவர் கலைஞர் அவர்களின் வழியில் அகில இந்திய அரசியலில் இன்று தமிழக முதல்வர் அவர்கள் முக்கிய புள்ளியாக கருதப்படுகிறார். தமிழக முதல்வர் தளபதி இல்லாமல் இந்திய அரசியல் இல்லை என்ற நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் பிரதமர்மோடி நமது முதல்வர் மீது கோபத்தில் உள்ளார். அ.தி.மு.க. பா.ஜ.க விற்கும் ரகசியமான உறவு உள்ளது. பொதுக்கூட்டங்களில் பேசும் முன்னாள் முதல்வர் எடப்பாடி தி.மு.க.வை மட்டும் விமர்சிக்கிறார். இது பாராளுமன்ற தேர்தல் என்று அவருக்கு நினைவுபடுத்த வேண்டும். பாஜகவையோ பிரதமர் மோடி பற்றியோ எந்த பேச்சும் பேசுவதில்லை. கடந்த 10 ஆண்டுகளில் பா.ஜ.க.வும் கடந்த நான்கரை ஆண்டுகளில் அ.தி.மு.க.வும் பல்வேறு ஊழல்புரிந்தும் மக்கள் விரோத செயல்களில் ஈடுபட்டுள்ளனர். அதை நாம் கூட்டணி கட்சியினர் மக்களிடம் எடுத்துக் கூற வேண்டும். இத்தொகுதியில் இண்டியா கூட்டணி சார்பில் போட்டியிடும் காங்கிரஸ் வேட்பாளர் கார்த்தி சிதம்பரத்தை அதிக வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற செய்ய வேண்டும். இதற்காக நாம் அனைவரும் ஒற்றுமையுடன் ஒன்றுபட்டு தீவிரமாக தேர்தல் பணியாற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் பெரிய கருப்பன் பேசினார்.

### மதுரை நாடாளுமன்றத் தேர்தல் :

# மதுரை மாநகர் மாவட்ட தேர்தல் பொறுப்பாளர்கள்!

## மாவட்டச் செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ. அறிவிப்பு!



மதுரை, மார்ச் 28 -

மதுரை நாடாளுமன்ற தேர்தல் மதுரை மாநகர் மாவட்ட தி.மு.க. தேர்தல் பொறுப்பாளர்களின் இரண்டாவது பட்டியலை மாவட்டக் கழகச் செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ., அறிவித்துள்ளார்.

தொகுதி வாரியாக அது வருமாறு:-

அண்ணாநகர் S.ஜெகநாதன், மா.ராம்பிரசாத், இளைஞரணி துணை அமைப்பாளர், மு.தமிழ்சந்திரன், இளைஞரணி துணை அமைப்பாளர், M.ஆழ்வார், கலை இலக்கிய பேரவை, M.மாரநாடு MC, தாய்.K.முரளி MC, சேக்அக மதுஅப்துல்லா, அயலக அணி, C.K.முருகேசன், விவசாய அணி, திருமதி. M.K. காளீஸ்வரி, மகளிர் அணி, திருமதி. K.வெண்மணி, மகளிர் அணி, திருமதி. G.ஜெயராணி, மகளிர் அணி, திருமதி.P.ஜெயசீலி, மகளிர் அணி, திருமதி. S.ராஜேஸ்வரி, N.M.புண்ணியமூர்த்தி, முன்னாபாய், G.நாகராஜ், B.கணேசன், M.மகேந்திரன் மகாராஜன், M.சந்தானப் பாண்டியன், B.கதிர்வேல், நெல்லை ஜான், A.ஆண்டவராஜ், விளையாட்டு அணி, S.நாகராஜ், விளையாட்டு அணி, இப்ராஹீம்ஷா, தொ.மு.ச., K.முத்துக்குமார், அசோக்பாபு, U.ராம் பிரசாத், M.மாரி, R.மணிகண்டன், புதூர் கருப்புசாமி,

**மதுரை தெற்கு தொகுதி**

கு.தினேஷ்குமார், இளைஞரணி துணை அமைப்பாளர், ஆழ்வார்புரம் K.பாலு, முன்னாள் வட்டச் செயலாளர், R.செல்வராஜ், முன்னாள் வட்டச் செயலாளர், G.முத்து, காமராஜபுரம், க.மாரிமுத்து, கீரைத்துறை, S.C.சீனிவாசன், விளையாட்டு அணி, D.கணேசன், விவசாய தொழிலாளர் அணி, D.கார்மேகம், அவைத்தலைவர் காமராஜபுரம் பகுதி, P.R.ராஜா, செல்லூர், ச.அண்ணாதுரை, P.T.கணபதி, S.கணேச முருகன், M.ராஜ்குமார், அமைப்புசாரா ஓட்டுனர் அணி தலைவர், புல்லட் R.மணிகண்டன், தொண்டரணி, R.மோகன்ராஜ், வர்த்தக அணி மாவட்ட தலைவர், மதிச்சியம் P.குணசேகரன், அமைப்புசாரா ஓட்டுனர் அணி

**மதுரை மத்திய தொகுதி**

பா.ராஜபாண்டி, இளைஞரணி துணை அமைப்பாளர், C.ஐயப்பன், இளைஞரணி துணை அமைப்பாளர், C.சுந்தரேசுவரன், இளைஞரணி துணை அமைப்பாளர் S.முஜாஹித் உசேன், சிறுபான்மையினர் அணி, R.செந்தில்முருகன், சிம்மக்கல் பகுதி M.S.B.நன்னா, சிறுபான்மையினர் நலபிரிவு, S.நாகேஸ்வரன், அமைப்புசாரா ஓட்டுனர் அணி, திருமதி.V.வேலாயி, மகளிரணி, திருமதி.S.ராணி, மகளிரணி J.ரகுவரன், திராவிட மாரி, ஆரப்பாளையம் V.செந்தில், திருமதி. S.ராஜேஸ்வரி தேசிங்குராஜன், தொண்டரணி, திருமதி. M.S.மணிமேகலை, மகளிரணி, திருமதி. செண்பா கந்தசாமி, மகளிரணி,

**மதுரை மேற்கு தொகுதி**

R.கணேசன், மாநில விவசாய அணி துணைச்செயலாளர், து.அன்புசெல்வன், இளைஞரணி துணை அமைப்பாளர், I.மீனாட்சி சுந்தரம், திருப்பரங்குன்றம் வடக்கு ஒன்றியம், திருமதி.N.உஷாராணி, திருமதி.S.சோபியா ராஜாத்தி மகளிரணி, V.அருண்குமார், பெத்தானியாபுரம்,

**மதுரை மாவட்ட தொ.மு.ச.**

து.பிச்சை, மாவட்ட தலைவர் தொ.மு.ச., C.கருணாநிதி, மாவட்ட செயலாளர், தொ.மு.ச., மேலூர் V.அல்போன்ஸ், மாவட்ட பொதுச்செயலாளர் தொ.மு.ச., பி.ராஜேஷ் கண்ணன், மண்டல செயலாளர், மின் கழக தொ.மு.ச.. V.சிவப்பிரகாசம், பொதுச் செயலாளர், டாஸ்மாக் தொ.மு.ச., P.முருகன், மாவட்டச் செயலாளர், ஆவின் தொ.மு.ச., K.P.தங்கவேலு, செயலாளர் மதுரை மாநகராட்சி.

இவ்வாறு மதுரை மாநகர் மாவட்டக் கழகச் செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ. அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### நெல்லை நாடாளுமன்றத் தொகுதி

# நெல்லை மத்திய மாவட்டத்தில் தேர்தல் பணிக்குழு!

## மாவட்டப் பொறுப்பாளர் டி.பி.எம்.மைதீன்கான் அறிவிப்பு!



நெல்லை, மார்ச் 28 -

நெல்லை நாடாளுமன்றத் தொகுதி நெல்லை மத்திய மாவட்டத்திலுள்ள திருநெல்வேலி சட்டமன்ற தொகுதி, பாளையங்கோட்டை சட்டமன்ற தொகுதி, கழக முன்னணியினர் தேர்தல் பணி குழுவில் நியமனம் செய்து நெல்லை மத்திய மாவட்டப் பொறுப்பாளர் டி.பி.எம். மைதீன்கான் அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் அறிவிப்பில் தெரிவித்திருப்பதாவது.

திருநெல்வேலி சட்டமன்ற தொகுதிக்கு மாவட்ட அவைத் தலைவர் வி.கே. முருகன், மாநகரச் செயலாளர் சு.சுப்பிர மணியன், மாநகராட்சி மேயர் பி.எம்.சரவணன், தலைமை தீர்மான குழு உறுப்பினர் பேச்சி பாண்டியன், மாவட்ட துணை செயலாளர்கள் எஸ். வி.சுரேஷ், தர்மன் ஆகியோரும். பாளையங்கோட்டை தொகுதிக்கு மு.அப்துல்வகாப் எம்.எல்.ஏ. தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஏ.எல். எஸ்.லெட்சுமணன், கழக சட்டதிட்ட திருத்தக் குழு உறுப்பினர் சுப.சீதாராமன் மாவட்ட பொருளாளர் முத்து கிருஷ்ணன் என்ற சேகர், மாவட்ட துணை செயலாளர் கிரிஜா குமார்,

மாநகர துணை மேயர் கே.ஆர்.ராஜ் ஆகியோரும் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



நெல்லை மத்திய மாவட்டக் கழக அலுவலகத்தில் நெல்லை மத்திய மாவட்டப் பொறுப்பாளர் டி. பி.எம்.மைதீன்கான் முன்னிலையில் அ.தி.மு.க. முன்னாள் கடையம் ஒன்றிய செயலாளர் செல்வின் 60 ஆண்டு கால சமூக சேவகர் அக்கட்சியிலிருந்து விலகி கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டார். உடன் மேயர் சரவணன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் லெட்சுமணன், பொதுக்குழு உறுப்பினர் பரமசிவஅய்யப்பன், விஜிலா சத்தியானந்த், கருப்புசாமி கோட்டையப்பன், மீரான் மைதீன், ரேவதி அசோக், உள்பட பலர் உள்ளனர்.





மதுரை நாடாளுமன்றத் தொகுதி ‘இந்தியா’ கூட்டணி மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வேட்பாளர் சு.வெங்கடேசனுக்கு அரிவாள் சுத்தியல் நட்சத்திரம் சின்னத்திற்கு வாக்குகள் சேகரிக்கும் பணியை வரலாறு படைத்த வைகை ஆற்றில் மலர் தூவி வணங்கி மாநகர் மாவட்டச் செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ., தலைமையில் தகவல் தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன் துவக்கி வைத்தார். உடன் கழக நிர்வாகிகள் பெ.குழந்தைவேலு, மா.ஜெயராமன், கே.தனசெல்வம், ஒச்சுபாலு, சின்னம்மாள், மூவேந்திரன், மேயர் இந்திராணி பொன்வசந்த், பூமிநாதன் எம்.எல்.ஏ., துணை மேயர் நாகராஜன், சரவணன், எஸ்.எஸ்.மாறன், கூட்டணி கட்சி நிர்வாகிகள் கார்த்திகேயன், கணேசன், மற்றும் கூட்டணி கட்சியினர், கழக நிர்வாகிகள், கழகத்தினர், பொதுமக்கள் திரளானோர் பங்கேற்றனர்.



கழகத் தலைவர் – தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 'இந்தியா' கூட்டணியின் நீலகிரி நாடாளுமன்றத் தொகுதியின் கழக வேட்பாளராக அறிவிக்கப்பட்ட கழக துணை பொதுச் செயலாளர் ஆ.ராசா அவிநாசி சட்டமன்றத் தொகுதிக்கு வருகை புரிந்தபோது திருப்பூர் வடக்கு மாவட்டக் கழகத்தின் சார்பில் மாவட்டக் கழக செயலாளர் க.செல்வராஜ் தலைமையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த வரவேற்பு நிகழ்ச்சியில் பல்லாயிரக்கணக்கானோர் முன்னிலையில் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார். இதில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் உள்பட மாநில, மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பேரூர், கிளை கழக நிர்வாகிகள், கழக துணை அமைப்புகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், பொதுமக்கள் பெரும் திரளாக கலந்து கொண்டனர்.



சேலம் நாடாளுமன்றத் தொகுதிக்குட்பட்ட வீரபாண்டி ஒன்றியத்தில் கழக தேர்தல் பணி மனையை சேலம் கிழக்கு மாவட்டக் கழக செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் திறந்து வைத்தார். உடன் கழக வேட்பாளர் டி. எம். செல்வகணபதி, வீரபாண்டி ஒன்றியக் கழக செயலாளர் எஸ்.வெண்ணிலா சேகர், மாவட்ட துணைச்செயலாளர் சுரேஷ்குமார், பொதுக்குழு உறுப்பினர் சந்திரமோகன், மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் ரமேஷ், ஒன்றிய அவைத் தலைவர் முருகன் உட்பட கழக நிர்வாகிகள் இருந்தனர்.

# பா.ஜ.க. ஆட்சியை வீட்டுக்கு அனுப்பாமல், நாங்கள் தூங்கப் போவதில்லை!

## திருவண்ணாமலை தேர்தல் பிரச்சாரத்தில் - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சூளுரை!

**திருவண்ணாமலை, மார்ச் 28-**

**திருவண்ணாமலையில் நடைபெற்ற தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்துகொண்டு திருவண்ணாமலை நாடாளுமன்றத் தொகுதி வேட்பாளர் சி.என். அண்ணாதுரைக்கு ஆதரவாக வாக்கு சேகரித்தார்.**

**அப்போது அவர், "பா.ஜ.க. ஆட்சியை வீட்டுக்கு அனுப்பாமல் நாங்கள் தூங்கப் போவதில்லை. எங்கள் தேர்தல் பிரச்சாரத்தைத் தூக்கம் பார்க்காமல், நாங்கள் செய்யத்தான் போகிறோம். உங்களை நிம்மதியாக வீட்டில் சென்று தூங்க வைக்கின்ற வரைக்கும் நாங்கள் எங்களுடைய வேலையைச் செய்துகொண்டுதான் இருக்கப் போகிறோம்" என்று சூளுரைத்தார்.**

அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களது உரை வருமாறு:

வருகின்ற நாடாளுமன்றத் தேர்தலில் திருவண்ணாமலை மக்களவைத் தொகுதியில் கழகத்தின் சார்பில் போட்டியிடும் அருமைச் சகோதரர் அண்ணாதுரை அவர்கள் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர், கழகத் தலைவர் முதலமைச்சரின் அன்பைப் பெற்ற வேட்பாளர் மட்டுமல்ல. திருவண்ணாமலை மக்களின் பேரன்பையும் பெற்றவர். அவருக்கு உதயசூரியன் சின்னத்தில் வாக்கு சேகரிக்கவே உங்களைத் தேடி நான் வந்திருக்கிறேன்.

உங்களின் வரவேற்பையும் எழுச்சியையும் பார்க்கும்பொழுது சி.என்.அண்ணாதுரை அவர்களை மிகப்பெரிய வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற முடிவெடுத்து விட்டீர்கள் என்று தெரிகிறது.

### உங்கள் பொறுப்பு!

2019ஆம் ஆண்டு மக்களவைத் தேர்தலின் போதும் சி.என்.அண்ணாதுரைக்கு வாக்கு கேட்க நான் வந்திருந்தேன். கடந்தமுறை சி.என்.அண்ணாதுரை அவர்களை 3 லட்சத்து 5 ஆயிரம் வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற வைத்தீர்கள். அதற்கு இந்த நேரத்தில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த முறை குறைந்தது நான்கு லட்சம் வாக்கு வித்தியாசத்தில் அவரை வெற்றி பெற வைக்க வேண்டும். திருவண்ணாமலை மக்களாகிய நீங்கள் அப்படிச் செய்தால், மாதத்திற்கு இரண்டுமுறை வந்து உங்கள் பிரச்னைகளை தீர்த்து வைக்கிறேன். அதற்கு நான் பொறுப்பு. என இப்போதே உறுதியளிக்கிறேன். 4 லட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற வைக்க வேண்டியது உங்கள் பொறுப்பு.

### சிறப்பாகப் பணியாற்றியுள்ளார்

கடந்த சட்டமன்ற தேர்தலில் மாண்புமிகு அமைச்சர் அண்ணன் எ.வ.வேலு அவர்களை கிட்டத்தட்ட ஒரு லட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற வைத்து இருக்கிறீர்கள். அதற்கும் இந்த நேரத்தில் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். சி.என்.அண்ணாதுரை அவர்கள் மக்களின் குரலாக நாடாளுமன்றத்தில் அவர் குரல் கொடுத்திருக்கிறார். உங்கள் நாடாளுமன்றத் தொகுதிக்கும் எண்ணற்ற பணிகளை ஆற்றியிருக்கிறார். கழகத்தின் இளைஞர் அணியிலும் சி.என். அண்ணாதுரை சிறப்பாக செயல்பட்டிருக்கிறார். அதேபோல கழகத்திலும் சிறப்பாகச் செயல்பட்டிருக்கிறார். அண்ணன் எ.வ.வேலு அவர்களுக்கு ஒரு தம்பியைப் போல, ஒரு தளபதியை போல அவர் பணி செய்து இருக்கிறார். அதனால்தான் தலைவர் அவர்கள் மீண்டும் சி.என்.அண்ணாதுரைக்கு இந்த வாய்ப்பை கொடுத்திருக்கிறார்.

இந்த நேரத்தில் ஒரு அமைச்சராகவோ, நட்சத்திரப்பேச்சாளராகவோ நான் வாக்கு கேட்க வரவில்லை. கழகத்தின் மாநில இளைஞர் அணிச் செயலாளராக நான் இங்கு வந்திருக்கிறேன் என்பதை பெருமையோடு சொல்லிக்கொள்கிறேன். மாவட்ட இளைஞர் அணிச் செயலாளர்களுக்காக வாக்கு கேட்டு வந்திருக்கிறேன். அந்த உரிமையோடு வந்திருக்கிறேன். இங்கு வந்திருக்கும் இளைஞர் அணி தம்பிமார்களும் ஒவ்வொரு வீடு வீடாக ஏறி இறங்கி, வாக்கு சேகரிப்பில் ஈடுபட வேண்டும் எனக் கேட்டுக் கொள்கின்றேன்.

'தி.மு.க காரர்களுக்குத் தூக்கம் போய்விட்டது' என்று மோடி சொல்கிறார். "ஆமாம், எங்களுக்கு தூக்கம் போய்விட்டது. நரேந்திர மோடி அவர்களே, உங்களை வீட்டிற்கு அனுப்புகின்ற வரைக்கும் நாங்கள் தூங்கப் போவதில்லை. எங்கள் தேர்தல் பிரச்சாரத்தை தூக்கம் பாராமல், நாங்கள் செய்யத்தான் போகிறோம். உங்களை நிம்மதியாக வீட்டில் சென்று தூங்க வைக்கின்ற வரைக்கும் நாங்கள் எங்களுடைய வேலையைச் செய்துகொண்டுதான் இருக்கப் போகிறோம்".

### கழக அரசின் சாதனைகள்!

இந்த நேரத்தில் நம் திருவண்ணாமலை மாவட்டத்தில் நடைபெற்று வரும் கழக அரசின் திட்டப் பணிகள் சிலவற்றை மட்டும் இங்கேகுறிப்பிட விரும்புகின்றேன். ரூபாய் 38 கோடி மதிப்பீட்டில் புதிய பேருந்து நிலையம் அமைக்கப்பட்டு வருகின்றது. ரூபாய் 12 கோடி மதிப்பீட்டில் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மக்கள் குறைதீர்வு அறை கட்டப்பட்டுள்ளது.



முதன்மைக் கல்வி அலுவலகக் கட்டடம், சேமிப்புக் கிடங்கு ரூபாய் 20 கோடி ரூபாயில் கட்டப்பட்டுள்ளது. திருவண்ணாமலை மாதிரிப் பள்ளிக் கட்டடம் 54 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. சாத்தனூர் அணையில் இருந்து புதிய குழாய்கள் மூலம் 56 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தண்ணீர் கொண்டு வரப்படுகின்றது. இதெல்லாம் திருவண்ணாமலை மாவட்டத்தில் கழக அரசு செய்து முடித்திருக்கக்கூடிய சாதனைகள்.

### வாக்குறுதிகள்

தலைவர் அவர்கள் தேர்தல் வாக்குறுதிகள் கொடுத்திருக்கிறார்கள். செய்வதைத்தான் சொல்வோம், சொல்வதைத்தான் செய்வோம் என்று முத்தமிழறிஞர் கலைஞர் அடிக்கடி கூறுவார். இப்போது நம்முடைய தலைவரும் பல்வேறு வாக்குறுதிகளைக் கொடுத்திருக்கிறார். சில வாக்குறுதிகளை மட்டும் நினைவுபடுத்த விரும்புகின்றேன். நெல், அரிசி வியாபாரிகளுக்கு ஊக்கம் தரும் வகையில், ஏற்றுமதி மையம் அமைக்கப்படும். 10 ஆண்டுகளாக நிறுத்தப்பட்டுள்ள திருவண்ணா மலை சென்னை தினசரி இரயில் பொதுமக்களின் நலன் கருதி மீண்டும் இயக்கப்படும். திருவண்ணா மலை நகரம் ஆன்மிகம்மற்றும்விவசாயத்தைச் சார்ந்து அமைந்துள்ளதால் நகர வளர்ச்சிக்குத் தடையாக அமைய இருக்கும் புதிய டோல்கேட் ரத்து செய்யப்படும். திருப்பத்தூர் திருவண்ணாமலை இடையே இரயில் சேவை தொடங்கப்படும் என்று வாக்குறுதி அளித்திருக்கிறோம்.

2014ஆம் ஆண்டு சமையல் எரிவாயு சிலிண்டர் விலை 450 ரூபாயாக இருந்தது. இப்போது அதன் விலை 1,200 ரூபாய். தேர்தல் வந்தவுடன் நரேந்திர மோடி அவர்கள் ஒரு நாடகம் ஆடுகிறார். 100 ரூபாய் குறைக்கிறேன் என்று சொல்லி இருக்கிறார். மக்களே ஏமாந்து விடாதீர்கள். திரும்பவும் பா.ஜ.க. வெற்றி பெற்றால் 500 ரூபாய் ஏற்றினாலும் ஏற்றிவிடுவார்கள்.

ஆனால், நம் தலைவர் அவர்கள் தேர்தல் அறிக்கையில் சொல்லி இருக்கிறார். இந்தியா கூட்டணி ஆட்சி அமைத்தது என்றால், கேஸ் சிலிண்டரின் விலை 500 ரூபாயாகக் குறைக்கப்படும். பெட்ரோல் லிட்டர் 75 ரூபாய்க்கு கொடுக்கப்படும் என்று சொல்லி இருக்கிறார். ஒரு லிட்டர் டீசல் 65 ரூபாய்க்கு கொடுக்கப்படும் என்றும் சொல்லி இருக்கிறார் நம் தலைவர் அவர்கள்.

அதுமட்டுமல்ல தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய அனைத்து சுங்கச் சாவடிகளும் அகற்றப்படும் என்றும் நம் தலைவர் அவர்கள் தேர்தல் அறிக்கையில் சொல்லியிருக்கிறார்.

### மக்களிடம் சொல்லுங்கள்!

நீங்கள் ஒரு ஐந்து திட்டங்களை மட்டும் மனதில் வைத்துக்கொள்ள வேண்டும். இதை மட்டும் மக்களிடம் எடுத்துச் சொல்லி வாக்கு சேகரியுங்கள். திராவிட மாடல் அரசின் சாதனைகளை மட்டும் மக்களிடம் எடுத்துச்சொல்லுங்கள். நம் வெற்றிக்கு அதுவே போதும்.

- மகளிருக்கு கட்டணமில்லா பேருந்து வசதி திட்டம்
- கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டம்
- புதுமைப்பெண் திட்டம்
- தமிழ்ப் புதல்வன் திட்டம்
- முதலமைச்சரின் காலை சிற்றுண்டித் திட்டம்

நாட்டு மக்களுக்கு குறிப்பாக நம் தமிழ்நாட்டு மக்களுக்கு ஒரு விடியல் வரவேண்டும் என்றால், இந்தியா கூட்டணி வெல்ல வேண்டும். அதற்கு ஏப்ரல் 19ஆம் தேதி வாக்குசாவடிக்குச் சென்று, நம் உதயசூரியன் சின்னத்தில் சி.என்.அண்ணாதுரை அவர்களுக்கு வாக்களித்து மிகப்பெரிய வாக்கு வித்தியாசத்தில், 4 லட்சம் ஓட்டு வித்தியாசத்தில் வெற்றி பெற வைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஒரு படம் வெளியாகும்போது 10 நாட்களுக்கு முன்பு டிரைலர் வெளியிடுவார்கள். நான் டிரைலர்தான். மெயின் பிக்சர் இன்னும் 10 நாட்களில் பின்னாடி வருகிறது. யாரை சொல்கிறேன் தெரிகிறதா? தலைவர் இன்னும் 10 நாட்களில் உங்களை சந்திக்க இருக்கிறார். நாங்களெல்லாம் அடுத்த தொகுதிக்கு சென்றுவிடுவோம். ஆனால், இந்த தொகுதியில் இருந்து அடுத்த 22 நாட்கள் இந்தப் பிரச்சாரத்தை ஒவ்வொரு வீடாக சென்று, ஒவ்வொரு வாக்காளராக சந்தித்து, ஒவ்வொரு தெருவாகச் சென்று இந்த பிரச்சாரத்தை செய்ய வேண்டும்.

ஒவ்வொருவரும் தெருக்கள், வீடுகள் வாரியாக பொறுப்பேற்றுக்கொண்டு வாக்குச் சேகரிப்பில் ஈடுபட வேண்டும். வருகின்ற ஜூன் 3ஆம் தேதி முத்தமிழறிஞர் கலைஞரின் 101வது பிறந்தநாள். ஜூன் 4ம் தேதி வாக்கு எண்ணிக்கை. முத்தமிழறிஞர் கலைஞரின் நூறாவது பிறந்தநாள் பரிசாக 40க்கு 40 வெற்றிபெற்று கொடுக்க வேண்டும்.

### உரிமையோடு கேட்கிறேன்

உங்களையெல்லாம் அன்போடு கேட்கிறேன், பண்போடு கேட்கிறேன், பாசத்தோடு கேட்கிறேன், உரிமையோடு கேட்கிறேன். உங்கள் வீட்டுப் பிள்ளையாக இருந்து கேட்கிறேன், இன்னும் பெருமையாகச் சொல்ல வேண்டும் என்றால், தலைவரின் மகனாக இருந்து கேட்கிறேன். இன்னும் பெருமையாக புரிம்பாகச் சொல்ல வேண்டும் என்றால், முத்தமிழறிஞர் கலைஞரின் பேரனாக இருந்து கேட்கிறேன். ஆதரிப்பீர், உதயசூரியன், உதயசூரியன், உதயசூரியன், உங்களின் வெற்றி வேட்பாளர் சி.என்.அண்ணாதுரை அவர்களை மிகப்பெரிய வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெறவைத்து நாடாளுமன்றத்திற்கு அனுப்புங்கள் என்று கேட்டுக் கொண்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகின்றேன்.

நன்றி, வணக்கம்

இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சிறப்புரையாற்றினார்.

உடன் அமைச்சர் எ.வ.வேலு, சட்டபேரவைத் துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, சட்டமன்ற உறுப்பினர்கள் மு.பெ.கிரி, சரவணன், கழக மருத்துவர் அணியின் மாநிலத் துணைத் தலைவர் எ.வ.வெ. கம்பன், மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர் பிரபு கஜேந்திரன், காங்கிரஸ் பேரியக்கத்தைச் சேர்ந்த குமார், விடுதலை சிறுத்தைகள் கட்சியை சேர்ந்த நியூட்டன், வளர்மதி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த வீரபத்திரன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த முத்தையன், மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த சீனி கார்த்திகேயன், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியைச் சேர்ந்த சுலைமான், நவாப் ஜான், மனிதநேய மக்கள் கட்சியைச் சேர்ந்த நாசர் உசேன், கனிமுல்லா, மக்கள் நீதி மையத்தைச் சேர்ந்த அருள் உள்பட பலரும் கலந்து கொண்டனர்.

---

### அ.தி.மு.க. - பா.ஜ.க. - பா.ம.க. - தே.மு.தி.க. கட்சிகளைச் சேர்ந்த

# 500 பேர் கள்ளக்குறிச்சியில் கழகத்தில் இணைந்தனர்!

## மாவட்டச் செயலாளர் வசந்தம் கார்த்திகேயன் எம்.எல்.ஏ. முன்னிலையில்!

*கள்ளக்குறிச்சி மார்ச் 28-*

கள்ளக்குறிச்சியில் அ.தி.மு.க.,பா.ஜ.க.,தே.மு.தி.க., பா.ம.க. உள்ளிட்ட மாற்றுக் கட்சிகளைச் சேர்ந்தவர்கள் தி.மு.க.வில் இணையும் நிகழ்வு நடைபெற்றது.

எல்லோரும் நம்முடன் என்ற கொள்கையின் அடிப்படையில் தமிழ்நாடு முதலமைச்சர், சமூக நீதி காவலர், கழகத் தலைவர், திராவிட நாயகர், தளபதியார் மு.க.ஸ்டாலின் அவர்களின் திராவிட மாடல் நல்லாட்சியை ஏற்று கள்ளக் குறிச்சி மாவட்டம் ரிஷிவந்தியம் தொகுதிக்குட்பட்ட பழைய சிறுவங்கூர், காந்தி நகர், பள்ளிப்பட்டு,அவிரியூர் ஆகிய ஊராட்சிகளைச் சேர்ந்த அ.தி.மு.க., பா.ஜ.க., பா.ம.க.,தே.மு.தி.க. உள்ளிட்ட மாற்றுக்கட்சிகளைச் சேர்ந்த ஆண்கள், பெண்கள், இளைஞர்கள் 500 பேர் அக்கட்சியிலிருந்து விலகி நமது தாய் கழகமான திராவிட முன்னேற்றக் கழகத்தில் கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்டக் கழக செயலாளரும், ரிஷிவந்தியம் சட்டமன்ற உறுப்பினருமான வசந்தம் க.கார்த்திகேயன் முன்னிலையில் தங்களை இணைத்துக் கொண்டனர்.

மேலும் புதிதாக தி.மு.க.வில் இணைந்த மாற்றுக்கட்சியினரை வரவேற்றுடன் சால்வை அணிவித்து அவர்களது மத்தியில் வசந்தம் கார்த்திகேயன் எம்.எல்.ஏ., பேசுகையில் அனைவரும் தேர்தல் பணிகளை மும்முரமாக மேற்கொள்ள வேண்டும், தி.மு.க. தலைமையிலான 'இந்தியா' கூட்டணி கள்ளக்குறிச்சி நாடாளுமன்ற தொகுதியில் தி.மு.க. சார்பில் போட்டியிடும் தே.மலையரசனை பெருவாரியான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற அனைவரும் உழைத்திட வேண்டும் என சிறப்புரையாற்றினார்.

இந்த நிகழ்வில் ரிஷிவந்தியம் தெற்கு ஒன்றிய செயலாளர் எம்.பெருமாள், கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்டப் பொருளாளரும், மாவட்ட கவுன்சிலருமான ஆதி.கு.கோவிந்தராஜ், ரிஷிவந்தியம் ஒன்றிய பெருந்தலைவர் வடிவுக்கரசி சாமி, சுப்பிரமணியன், பொதுக்குழு உறுப்பினர் ராஜி,பழைய சிறுவாங்கூர் பெத்து ரெட்டியார், பாலகிருஷ்ணன், கந்தசாமி,சரவணன், பள்ளிப்பட்டு ஊராட்சி மன்ற தலைவர் ரத்தினம், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் சக்திவேல்,சேட்டு, கோதண்டம் உள்ளிட்ட பல்வேறு நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



# இடம் பொருள் கலைஞர்

63

**பல்வேறு துறைகளில் தொலைநோக்குப் பார்வையுடன், முத்தமிழறிஞர் கலைஞர் செயல்படுத்திய திட்டங்கள், உருவாக்கிய கட்டமைப்புகள் குறித்து இந்தப் பகுதியில் பார்த்து வருகிறோம். இந்த வாரம் பாமணி உரத் தொழிற்சாலை!**



# பாமணி உரத் தொழிற்சாலை!

## உழவுக்கு உயிரூட்டிய நவீன உரங்கள்!

1960-களில் இந்தியாவைப் பெரும் பஞ்சம் பீடித்தது. கால் வயிற்றுக் கஞ்சியில்லாமல் அவதிப்பட்டவர்கள் எத்தனையோ பேர். மக்களின் பசியைப் போக்க வெளிநாடுகளிடம் இந்தியா பிச்சையெடுக்க வேண்டிய நிலைமை. அந்தச் சமயத்தில், பட்டினிச் சாவுகளுக்குத் தீர்வு காண நவீன ரக விதைகள், ரசாயன உரங்கள், புதிய உழவுக் கருவிகள் ஆகியவற்றின் மூலம் உணவு உற்பத்தியைப் பெருக்க ‘பசுமைப் புரட்சி’தான் தீர்வாக இருந்தது.

அதற்கு அடுத்த பத்து ஆண்டுகளில் இந்தியாவில் நவீன முறை விவசாயத்துக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. தமிழ்நாட்டிலும் அப்போதுதான் ஐ.ஆர்.-8 உள்ளிட்ட புதிய வகை நெல் ரகங்கள் விவசாயிகளிடையே அறிமுகமாகி பெரும் வரவேற்பைப் பெற்றிருந்த காலம். பசுமைப் புரட்சியால் அந்த வேளைக்குப் பசி தீர்ந்தது. உணவு உற்பத்தியைப் பெருக்க முடிந்தது. ஆனால், முத்தமிழறிஞர் கலைஞர் தலைமை யிலான கழக அரசு, இன்னும் கொஞ்சம் முன்னோக்கிச் சிந்தித்தது. உணவு உற்பத்தியில் தன்னிறைவு அடைய வேண்டும் என்பதுதான் அது. ஆனால், அதற்கு முட்டுக்கட்டை போடும்விதமாக, உரத் தட்டுப்பாடு நாடு முழுக்க இருந்து வந்தது.

உரத்துக்காக நாம் ஏன் ஒன்றிய அரசை எதிர்பார்க்க வேண்டும். நாமே ஓர் உரத் தொழிற்சாலையைத் தொடங்கலாமே என்று கலைஞர் சிந்தித்ததன் விளைவுதான், திருவாரூரில் ‘பாமணி உரத் தொழிற்சாலை’ எழும்பியது. அந்தத் தொழிற்சாலையால் பிற மாநிலங்களுக்கு அரிசியை வழங்கி, உதவும் அளவுக்கு, அரிசி உற்பத்தியைப் பெருக்கி, விவசாயத்தில் வளர்ந்தது தமிழ்நாடு.

### பயிர்களுக்குச் சமச்சீர் சத்து

நம் உடல் வளர்ச்சிக்கு சமச்சீர் உணவு எவ்வளவு முக்கியமோ அதுபோல பயிர்களின் வளர்ச்சிக்கு, தழைச்சத்து, மணிச்சத்து, சாம்பல் சத்து ஆகிய மூன்று சத்துகள் மிகவும் முக்கியம். இவை சரிவிகிதத்தில் அமைய வேண்டும். அந்தச் சத்துகள், ரசாயன உரங்களில் போதுமான அளவில் கிடைக்கின்றன.

எனவேதான் 60-களின் இறுதியில், உலகம் முழுவதும் ரசாயன உரங்களின் பயன்பாடு, பரவலாக இருந்தது. அன்று சராசரியாக ஒரு ஹெக்டேர் நிலத்துக்கு நெதர்லாந்தில் 580.79 கிலோ, ஜப்பானில் 321.12 கிலோ, தைவானில் 255.84 கிலோ என்கிற அளவில் ரசாயன உரங்கள் பயன்படுத்தப்பட்டன. ஆனால், இந்தியாவில் அந்த அளவு வெறும் 4.97 என்பதாக இருந்தது.

இவ்வளவு குறைவாக ரசாயன உரச் சத்துகளைப் பயன்படுத்தியதால்தான், இந்தியாவில் அன்று குறைந்த அளவே மகசூல் கிடைத்தது. ஆனால், அப்போதே, தமிழ்நாட்டில் சராசரியாக ஒரு ஹெக்டேருக்கு 20.42 கிலோ அளவுக்கு அந்தச் சத்துகளை அளித்து வந்தனர் நம் விவசாயிகள். அது நாட்டிலேயே அதிகம். ஆனபோதும், இன்னமும் உரப் பயன்பாடு பெருக வேண்டிய தேவை இருந்தது.



### குருணை வடிவக் கலப்பு உரங்கள்

பயிர்களுக்குத் தேவையான சத்துகளைத் தகுந்த அளவில் கலந்து இடுவது உழவர்களுக்கு ஒரு பிரச்சினையாக இருந்து வந்தது. அந்த நிலையை மாற்றி, சமச்சீர் உரமிடுவதை ஊக்குவிப்பதற்காக, பல்வேறு பயிர்களின் தேவைக்கேற்ப 13 வகையான கலப்பு உரங்களைத் தயாரித்து, தமிழ்நாடு அரசு வேளாண்மைத் துறை வழங்கி வந்தது.

ஆனால், அந்தக் கலப்பு உரங்கள், பவுடர் வடிவத்தில் இருந்ததால் அவை காற்றிலும் தண்ணீரிலும் அடித்துச் செல்லப்பட்டன. இதனால் வயலில் ஒரு பகுதி ஒரு வகைச் சத்து மிகுந்தும், இன்னொரு வகைச் சத்து குறைந்தும் இருந்தன. மேலும் உரமிடும் இயந்திரங்களில் அவை ஒட்டிக் கொண்டு வேலையை இன்னும் கடுமையாக்கின. தவிர, கலப்பு உரங்களில் கலப்படப் பிரச்சினையும் இருந்து வந்தது.

இத்தகைய குறைபாடுகள் அனைத்தையும் நீக்கி, குருணை வடிவில் கலப்பு உரங்களைத் தயாரிக்கும் முறை அந்தச் சமயத்தில் அறிமுகமாகி இருந்தது. அந்த முறையைப் பயன்படுத்தி உரங்களைத் தயாரித்து நமது விவசாயிகளுக்கு வழங்க, தமிழ்நாடு கூட்டுறவு விற்பனைக் கழகம் முடிவு செய்தது. அதன் அடிப்படையில், அன்றைய ஒருங்கிணைந்த தஞ்சை மாவட்டத்தில், மன்னார்குடியில் உள்ள பாமணி கிராமத்தில் சுமார் 27 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் குருணை வடிவ உரம் தயாரிக்கும் தொழிற்சாலை தொடங்கப்பட்டது. தமிழ்நாடு கூட்டுறவு விற்பனைக் கழகத்தின் அன்றைய தலைவர் மன்னை நாராயணசாமி அவர்களால் மிகுந்த ஆர்வத்துடன் 1969-ஆம் ஆண்டு டிசம்பரில் இந்தத் தொழிற்சாலைக்கான பணிகளைத் தொடங்க, 1971ஆம் ஆண்டு ஏப்ரல் 11 அன்று தொழிற்சாலையைத் திறந்து வைத்தார் கலைஞர் அவர்கள்.

### உரத் தயாரிப்பில் நவீனம்

பாமணி உரத் தொழிற்சாலை நிறுவுவதற்கு தமிழ்நாடு அரசுடன், தேசியக் கூட்டுறவு வளர்ச்சி நிறுவனமும் உதவி செய்தது. மாபெரும் தொழிற்சாலைக் கட்டடமும், வட்ட வடிவமான கிடங்குகளும் கொண்ட இந்தத் தொழிற்சாலையில் அமைக்கப்பட்டுள்ள இயந்திரங்கள் அனைத்தும், இந்தியாவிலேயே தயாரிக்கப்பட்டவை.

**தண்ணீரில் எளிதில் கரையக் கூடியதாகவும், கலப்படம் செய்ய முடியாததாகவும், காற்று அடித்துச் செல்ல முடியாததாகவும் இருக்கும்.**

இங்கு தயாரிக்கப்பட்ட உரங்கள், ஜவ்வரிசி போன்று சிறு சிறு குருணைகளாக இருக்கும். தண்ணீரில் எளிதில் கரையக் கூடியதாகவும், கலப்படம் செய்ய முடியாததாகவும், காற்று அடித்துச் செல்ல முடியாததாகவும் இருக்கும். கட்டியாகவும் மாறாது, சத்துக்களையும் இழக்காது. அன்று இந்தத் தொழிற்சாலை, ஒரு நாளைக்கு 150 டன் குருணை வடிவ உரங்களை உற்பத்தி செய்யும் திறன் கொண்டிருந்தது. இதனால் ஆண்டுக்கு சராசரியாக 45 ஆயிரம் மெட்ரிக் டன் உரங்கள் தயாரிக்கப்பட்டன.

இங்கு நெல், கரும்பு, சோளம், நிலக்கடலை, வாழை, பருத்தி ஆகிய பயிர்களுக்குத் தேவையான அளவில் 14:21:14, 15.5:12:12 என்ற இரண்டு விகிதங்களில் உரங்கள் தயாரிக்கப்பட்டன. இன்று, 17:17:17 என்ற உரத்தைத் தயாரித்து வருகிறது.

**‘தமிழ்நாட்டின் நெற்களஞ்சியம்’** என்று தஞ்சையைச் சொல்வார்கள். அந்தப் பெருமைக்குப் பின்னால், இந்த உரத் தொழிற்சாலையும், அதனை உருவாக்கிய கலைஞர், நாராயணசாமி போன்ற மண்ணின் மைந்தர்களும் இருந்தார்கள் என்று சொல்வது மிகையாகாது..!

**...வலம் வருவோம்**

### மீண்டெழும் தொழிற்சாலை!

1971-இல் இந்தத் தொழிற்சாலை தொடங்கப்பட்ட போது, அங்கு 185 நிரந்தர ஊழியர்களும், நூற்றுக்கணக்கான தற்காலிக ஊழியர்களும் இருந்தனர். தவிர, அந்தத் தொழிற்சாலையால் மறைமுக வேலை வாய்ப்புகளும் பெற்று பல குடும்பங்கள் வாழ்ந்து வந்தன. தி.மு.க.வுக்குப் பிறகு வந்த ஆட்சியாளர்கள், படிப்படியாக உற்பத்தியைக் குறைத்ததோடு, வேலைக்கு ஆட்கள் எடுப்பதையும் குறைத்தனர். 2018-ஆம் ஆண்டு நிலவரப்படி, அங்கு 9 நிரந்தரப் பணியாளர்களும், 24 தற்காலிக ஊழியர்களும் மட்டுமே இருந்தனர்.

இந்தத் தொழிற்சாலையை நவீனமயமாக்கி இயற்கை விவசாயத்துக்குத் தேவையான பல இடுபொருட்களைத் தயாரித்தால், விவசாயமும் வளமாகும், வேலைவாய்ப்பும் பெருகும் என்று அந்தப் பகுதி விவசாயிகள் பலர் கோரிக்கை வைத்து வந்தனர். ஆனால், அவற்றுக்குச் செவி சாய்க்காத அடிமை அரசு, அந்தத் தொழிற்சாலையை நிரந்தரமாக மூடத் திட்டமிட்டது. 2021-ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த பிறகு, நம் கழகத் தலைவர் முதலமைச்சர் தலைமையிலான ‘திராவிட மாடல்’ அரசு, அந்தக் கோரிக்கைகள் நிறைவேற்றப்படும் என்று அறிவித்தது.

### அம்பலமாகும் வாயால் சுட்ட வடைகள்!



**வ**டை என்றாலே மெது வடை, மசால் வடை என்று பல வடைகள் உண்டு. ஆனால், இப்போதெல்லாம் ‘வடை’ என்றவுடனே தமிழர்களுக்கு நினைவுக்கு வரும் பெயர் மோடி. அந்தளவுக்கு கடந்த பத்தாண்டுகளில் மோடி வாயால் சுட்ட வடைகள் ஏராளம். ‘சுவிஸ் வங்கியில் இருக்கும் கறுப்புப்பணத்தை மீட்டு வந்து ஒவ்வொரு இந்தியரின் வங்கிக்கணக்கிலும் ரூ.15 லட்சம் வரவு வைப்பேன்’, ‘2 கோடி இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு அளிப்பேன்’ என்று மோடி விதவிதமாக அள்ளிவிட்ட பொய்களைக் கேட்டு, ஒட்டுமொத்த இந்தியாவுமே சிரிப்பாய் சிரிக்கிறது.

மோடியின் பொய்களை அம்பலப்படுத்தும்விதமாக சமீபத்தில் தி.மு.க.வினர் வடைகளை பொதுமக்களிடம் விநியோகித்தனர். இது தமிழ்மக்களிடம் நல்ல வரவேற்பைப் பெற்றது. இப்போது

பெரம்பூரில் ‘கடந்த பத்தாண்டுகளாக மோடி ஆட்சி, வாயால் சுட்ட வடை’ என பா.ஜ.க. ஆட்சியை விமர்சிக்கும் வகையில், ஐந்தரை அடியில் வடை செய்து தமிழ்நாடு சமையல் கலைத் தொழிலாளர் முன்னேற்ற சங்கம் தி.மு.க. கூட்டணிக்கு ஆதரவளித்திருக்கிறது. இந்த ஐந்தரை அடி வடையில் ஏராளமான குட்டிக்குட்டி வடைகளும் இடம்பெற்றிருக்கின்றன. ‘விவசாயிகளுக்கு இரட்டிப்பு வருமானம் வடை’, ‘சென்னை வெள்ள நிவாரண நிதி வடை’, ‘கறுப்புப்பண மீட்பு வடை’ என்று பெயர் தாங்கிய அட்டைகளையும் குத்தி வைத்துள்ளனர்.

### ஃப்ளாஷ்பேக்



ஆர்.நாகராஜன்



### 44 வயதில் மேயர்!

1996-ஆம் ஆண்டு நான் பகுதிக் கழக உறுப்பினராக இருந்தேன். அன்றைய இளைஞர் அணிச் செயலாளர் இன்றைய கழகத் தலைவர் தளபதி அவர்கள், 44-வது வயதில், சென்னை மாநகராட்சித் தேர்தலில் போட்டியிட்டு மேயராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். பதவியேற்ற அன்று, வேளச்சேரி வீட்டில் சந்தித்து சால்வை அணிவித்து சிறப்பு செய்த போது, இந்தப் படம் எடுக்கப்பட்டது. உடன் முன்னாள் பகுதிச் செயலாளரும் 153-வது வார்டு மாமன்ற உறுப்பினருமான வேளச்சேரி பொ.தனசேகரன், வட்ட இளைஞர் அணி அமைப்பாளர். க.பத்மராஜன் ஆகியோர் உள்ளனர்.

**–ஆர்.நாகராஜன், மாவட்ட தி.மு.க. பிரதிநிதி, சென்னை தெற்கு.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

### கருவூலம்

#### கலைஞருக்கு விழா எடுத்த பெரியார்!


1971-ஆம் ஆண்டில் கலைஞருக்கு அண்ணாமலை பல்கலைக் கழகம், டாக்டர் பட்டம் வழங்கியதையொட்டி சென்னை பகுத்தறிவாளர் கழகம் பாராட்டு விழா எடுத்தது. தந்தை பெரியார் தலைமையில் நடந்த அந்த விழாவில், குன்றக்குடி அடிகளார், நெ.து.சுந்தரவடிவேலு, ஏ.என்.சட்டநாதன், கி.வீரமணி மற்றும் அமைச்சர்கள் பலர் கலந்துகொண்டனர். கலைஞருக்குப் பொன்னாடை போர்த்திய பெரியார், தனது விரல்களால் கலைஞரின் கன்னங்களைத் தடவிக் கொடுத்து மகிழ்ந்தார். கலைஞருக்கு சிலை அமைப்பதற்கான குழுவையும் அப்போதே அமைத்தார்.

## திராவிடத்தால் வாழ்கிறோம்

431

எழுத்து: கோவி.லெனின்

ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131